நவம்பர் 2025

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

விலை
ரூபா 100/=

306



பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

306

ஒளி : 26 சுடர் : 06

ஸ்தாபகர், ஆலோசகர் : தி. ஞானசேகரன்

ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானலக்ஷ்மி
ஓவியர் : கிறிஸ்டி நல்லரெத்தினம்

ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6. இலங்கை
தொலைபேசி: + 94 11 258 6013
+ 94 71 736 2862
மின்னஞ்சல்: editor@gnanam.info

சந்தா விபரம் : இலங்கை Rs. 1500/=
வெளிநாட்டுச் சந்தா $ 100
(தபால் செலவு உட்பட)

வங்கி விபரம்
G. BALACHANDRAN
Acc. No. - 009020348846
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX

## இதழினுள்ளே.....

### கவிதைகள்

- சமரபாகு சீனா உதயகுமார் 04
- இளைய அப்துல்லாஹ் 13
- மனோகரி ஜெகதீஸ்வரன் 20
- அன்பழகி 25
- கீத்தா பரமானந்தன் 29
- ரிஸ்மியா நாகூர்கனி ஹாபி (லண்டன்) 33
- முனைவர் கு.சிதம்பரம் (இந்தியா) 37
- Dr. ஜலீலா முஸம்மில் 42
- மேதினியாள் 45
- வேதா.இலங்காதிலகம் (டென்மார்க்) 53

### சிறுகதைகள்

- தவமுதல்வன் (இந்தியா) 07
- நாகலிங்கம் தியாகராசா 17
- கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் 26
- கேணிப்பித்தன் ச.அருளானந்தம் 34
- ந.பார்த்தீபன் (வவுனியா) 40
- கு.யர்சினி 43
- வெல்லாவெளி விவேகானந்தம் 49

### கட்டுரைகள்

- தமிழ்மணி அகளங்கன் 02
- பேராசிரியர் சபா ஜெயராசா 14
- முஹம்மது ஜைத் 21
- எ.கிறேஷா மிலானி 30

### பத்தி

- கலைமாமணி கா.தவபாலன் 38
- கலாநிதி ஜெகநாதன் தற்பரன் 46
- பேராசிரியர் துரை. மனோகரன் 54

### வாசகர் பேசுகிறார்

வாசகர் பேசுகிறார் 56

பகிர்தலின் மூலம்
விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

- ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
- புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
- பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
- படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.
- ஞானம் சஞ்சிகையானது பொதுவெளி (Public Domain) பதிப்புரிமையை உடையது.

# ஆசிரியர் பக்கம்...




## அனைவருக்கும் அன்பு வணக்கம் !

**மீண்டும் புகைக்கும் இனவாதம்...**

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதல், அதனைத் தொடர்ந்து கோவிட் முடக்கம், பின்னர் அரசியல் போராட்டமும் பொருளாதாரச் சீர்குலைவும் என அடிமேல் அடிவாங்கிவரும் எமது நாட்டின் நிலையானது, "சாண் ஏற முழம் சறுக்கல்" என்பதாகின்றது. கடந்த ஒருவருடமாக ஆமை வேகத்தில் நகர்ந்து ஸ்திரநிலைக்கு எட்டமுனையும் நாட்டில், பழைய இனவாதம் மீண்டும் புகைக்கத் தொடங்கியுள்ளது.

2025ஆம் வருடம் நவம்பர் மாதம், திருகோணமலை கோட்டை வீதியில் அமைந்துள்ள ஶ்ரீசம்புத்த ஜயந்தி போதிராஜ விகாரை வளாகத்தில் புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டதும், பின்னர், காவற்படையினரால் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டதும், அதனைத் தொடர்ந்து காவற் படையினரால் மீண்டும் பாதுகாப்புக்கு மத்தியில் சிலை கொண்டுவரப்பட்டு பிரதிஷ்டை செய்யப் பட்டதும் மக்கள் மத்தியில் பெரும் பேசுபொருளாகியுள்ளன.

வருங்கால இலங்கையின் முதுகெலும்பாகிய இளைஞர் சமூகம் நாட்டின்மீது நம்பிக்கையற்ற தன்மையையும், பிணைப்பற்ற தன்மையையும் கொண்டிருப்பதை கடந்த வருடங்களில் நடைபெற்ற புலப்பெயர்வுகள் நன்கு சுட்டிக்காட்டுகின்றன. தமிழர்கள் உட்பட பெருமளவிலான பெரும்பான்மையோரும் நாட்டைவிட்டு சென்றுவிட்டனர், சென்றவண்ணம் உள்ளனர். இந்தப் பின்னணியில் இத்தகு இனவாதத்தைத் தூண்டும் நிகழ்வுகள், இளைஞர்கள் மத்தியில் ஊசலாடிக் கொண்டிருக்கும் நாட்டுப் பற்றை அறுக்கும் நிலைக்குத் தள்ளிவிடும்.

இதை யார் செய்கின்றார்கள்? எதற்குச் செய்கின்றார்கள்? செய்தது முறையானதா? வழமை போன்று திட்டமிட்ட ஆக்கிரமிப்புச் செயலா? இதற்கான சட்ட நடவடிக்கைகள் யாவை? என்பவை அனைத்தும் விடைகாணப்படவேண்டிய வினாக்கள்தான். வைக்கப்பட்ட சிலைக்கு அண்மையில் புற்கள் முளைக்கும்வரை இதற்கான இழுபறி தொடரலாம். இவையனைத்துக்கும் பின்னால் அரசியல் காரணங்கள் உள்ளன என்பது, எமக்கு வரலாறு கற்றுத்தந்த பாடம்.

இத்தகு செயற்பாடுகள் முளையிலேயே கிள்ளப்படவேண்டியதுடன், இனிமேலும் துளிர் விடாமல் பார்த்துக்கொள்ளப்படவேண்டியது ஆட்சியாளர்களின் கடமையாகும்.

இந்தத் தொடரில் "இனவாதத்திற்கு இனி ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது. இந்த நாட்டில் பழைய இனவாத நாடகங்களை யாராவது மீண்டும் உயிர்ப்பிக்க முயன்றால், அது இறந்த வரலாற்றில் மட்டுமே இருக்கும்." எனும் தொனிப்பொருளில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சுட்டிக்காட்டியிருந்தார்.

யாவற்றுக்கும் காலம்தான் விடைகூற வேண்டும்.

❍❍❍



இராமாயணச் சிந்தனைகள் 1

# இராவணனுக்கு பத்துத் தலைகளா?



தமிழ்மணி அகளங்கன்

## சொல்லும் பொருளும்

சில சொற்கள், சொற்றொடர்கள் கால வேறுபாட்டினால் பொருளோடு பொருந்தாமல் வேறு சொற்களாகியும் சொற்றொடர்களாகியும் மாறி விடுகின்றன. சில, பொருள் மாறாமல் ஓரிரு எழுத்து மாறுபாடுகளோடு வழங்கிவருகின்றன.

உதாரணமாக **புதம்**, என்ற கிரகம் புதன் ஆகியது. **வியாழம்** என்ற கிரகம் வியாழன் ஆகியது. திருஞானசம்பந்தர் வேயுறு தோழி பங்கன் என்று தொடங்கும் தனது கோளறு பதிகத் தேவாரப் பாடலில் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதம், வியாழம், வெள்ளி, சனி, பாம்பு இரண்டும் -- என்று நவக்கிரகங்களைப் பாடியுள்ளார். பாம்பு இரண்டு என்பது இராகு, கேது ஆகிய நிழல்க் கிரகங்களைக் குறிக்கிறது.

புதம், வியாழம் என்பவை இப்போது ஆண்பால் விகுதிகள் பெற்று புதன் ஆகவும் வியாழன் ஆகவும் பொருள் மாற்றம் இல்லாமல் சொல் மாற்றம் பெற்றுவிட்டன.

புதன் அலிக்கிரகம் என்று சோதிடம் சொல்லவும் புதன் ஆண்கிரகமாகிவிட்டது. சூரியன், சந்திரன் அங்காரகன், புதன், வியாழன், சுக்கிரன், ஆகிய கிரகங்கள் ஆண் கிரகங்களுக்குரிய பெயர்களைப் பெற்றுவிட்டன. சனியும் ஆண் கிரகமாகி மந்தன் என்று அழைக்கப்படுகிறது.

இராகு, கேது ஆகிய நிழல்க் கிரகங்கள் மட்டும் அப்படியே ஆண் பால் பகுப்புக்குள் அடங்காமல் தப்பித்துவிட்டன,

இறை என்ற சொல் இறைவன் என ஆண்பாற் சொல்லாகி இறைவி என்ற பெண்பாற் சொல்லும் உருவாகி நீண்ட நெடுங்காலமாகிவிட்டது.

நாயன்மார்களுக்குள்ளே சண்டேஸ்வரரும், அரக்கர்களுக்குள்ளே இராவணேஸ்வரனும், கிரகங்களுக்குள்ளே சனீஸ்வரரும் ஈஸ்வரப் பட்டம் பெற்றவர்களாக இன்று அழைக்கப் படுகின்றனர். ஈஸ்வரன் என்பது சிவபெருமானைக் குறித்த சொல். இவர்களைவிட சிவபெருமான் மேலானவர் என்ற பொருளில் சிவபெருமான் சர்வேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார். கிறீஸ்தவர்களும் இப்போது சர்வேஸ்வரன் என்ற பெயரைப் பயன்படுத்துகிறார்கள்.

சனி என்ற கிரகம் சனீஸ்வரன் ஆகியது எப்படி என்று அறிந்தால் ஆச்சரியப்படுவீர்கள். சனி என்ற கிரகம் மிகவும் மெதுவாக இயங்குகின்ற கிரகம். கிரக அமைப்பில் ஒருவீட்டை கடப்பதற்கு அதாவது நவக்கிரக மண்டலத்தை 360 பாகை களாக்கி அவற்றை 30 பாகைகள் கொண்ட மேடம், இடபம் முதலான 12 வீடுகளாக்கி ஜாதகம் கணிக்கும் முறையில் சனி என்ற கிரகம் ஒரு வீட்டை அதாவது 30 பாகைகளைக் கடக்க இரண்டரை வருடங்கள் எடுக்கின்றது.

பிறப்பு ஜாதகத்தில் சந்திரன் இருந்த வீட்டுக்கு எட்டாவது வீட்டில் சனி இருக்கும் காலமாகிய இரண்டரை வருடங்களும் அட்டமத்துச் சனிக் காலம் என்றும், பிறப்பு ஜாதகத்தில் சந்திரன் இருந்த வீட்டுக்கு பின்வீடு, சந்திரன் இருந்த வீடு, அதற்கு முன்வீடு ஆகிய 12,1,2 என அழைக்கப்படும் மூன்று வீடுகளிலும் சனி தொடர்ந்து பயணிக்கின்ற ஏழரை ஆண்டுக் காலமும் ஏழரைச்சனிக் காலம் என்றும் சொல் கிறோம்.

இப்படி மந்தகதியில் மெதுவாகப் பயணிப்ப தால் சனி எனப்படும் கிரகத்திற்கு மந்தன் என்று பெயர். இதனால் இக்கிரகத்தை வடமொழியில் சணேஸரம் என்று அழைத்தனர். சணே என்றால் மெதுவாக என்று பொருள்.

ஸரம் என்றால் இயங்குவது என்று பொருள். இந்த இரண்டு சொற்களும் சேர்ந்து சணேஸரம் ஆகியது.

ஸரம் என்பது இயங்குவதைக் குறித்தசொல். அஸரம் என்பது இயங்காததைக் குறித்தசொல். இவற்றைத் தமிழில் சரம், அசரம் என்று அழைத்து இரண்டும் அடங்கிய இந்த உலகத்தை சராசரம் என்கிறோம். அண்டசராசரம் என்கிறோம். மாணிக்கவாசகர் தாவர சங்கமம் என்கிறார்.

சணேஸரம் என்ற காரணப் பெயர் தமிழில் சனேசரம் ஆகி சனீச்சரம் ஆகி சனீச்சரன் என ஆண் பால் விகுதி பெற்று இப்போது சனீஸ்வரன் ஆகி விட்டது. சிவபெருமானுக்குரிய ஈஸ்வரன் என்ற பெயர் பெற்று விட்டது.

(நன்றி - சொல்வேந்தர் சுகி சிவம்.)

இதேபோல தமிழிலும் எழுத்துக்கள் குறைந்து சொல் வேறுபட்டு பொருள் வேறுபட்ட ஒரு சொல் உண்டு. சங்ககாலப் பாட்டு நூல்கள் பத்தில் முதல் நூலாகவும், சங்ககாலத்தில் தோன்றிய ஒரே சமய நூலாகவும் சொல்லப்படுவது திரு முருகாற்றுப்படை.

திருமுருகாற்றுப்படை,பெரும்பாணாற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடு கடாம் என்னும் கூத்தராற்றுப்படை, பொருநராற்றுப்படை என ஐந்து **ஆற்றுப்படை** நூல்கள் பத்துப் பாட்டு நூல்களில் தொகுக்கப் பட்டுள்ளன.

திருமுருகாற்றுப்படையை **முருகு** என்று சுருக்கிச் சொல்வார்கள். ஏனைய நான்கு ஆற்றுப் படைகளையும் விட திருமுருகாற்றுப்படை பெயரளவில் வேறுபட்டது.

பொதுவாக யாரை ஆற்றுப்படுத்துவது என்ற கேள்வியிலிருந்துதான் பெயர் பிறக்கிறது. உதாரணமாக பெரும் பாணர்களை வள்ளலாகிய அரசனிடம் ஆற்றுப்படுத்துவது பெரும் பாணாற்றுப்படை. கூத்தர்களை ஆற்றுப் படுத்து வது கூத்தராற்றுப்படை.

ஆற்றுப்படுத்துவது என்றால் வழிப் படுத்துவது என்று பொருள். பரிசு பெற்ற ஒருவர் இன்னொருவரை தான் பரிசு பெற்ற ஒரு கொடையாளியிடம் செல்லும்படி வழிகாட்டுவது ஆற்றுப்படை என்று சுருங்கச் சொல்லலாம்.

திருமுருகாற்றுப்படை இதிலிருந்து பெயர ளவில் வேறுபடுகிறது. அருள் வள்ளலாகிய முருகனிடம் அடியவர்களை ஆற்றுப்படுத்தும் நூலுக்கு அடியவர் ஆற்றுப்படை என்று பெயர் வைப்பதுதானே மரபு. ஆனால் முருகனிடம் ஆற்றுப்படுத்துவது என்ற பெயரில் நக்கீரர் இந்நூலுக்கு முருகாற்றுப்படை என்று பெயர் வைத்தார். இதுவே திருமுருகாற்றுப்படை ஆகியது.

இந்நூலில் முருகப்பெருமான் எழுந்தருளி யுள்ள ஆறு இருப்பிடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன இந்த வீடுகள் அதாவது இருப்பிடங்கள் ஆற்றுப்படை வீடுகள் என அழைக்கப்பட்டன. இதுவே பொருத்தமானதுமாகும்.

ஆறு என்ற சொற் பொருத்தப்பாடு ஆற்றுப் படை வீடுகளை ஆறுபடை வீடுகளாக்கிவிட்டது. ஒரு "ற்,"ஒரு "ப்" நீக்கப்பட்டு ஆறுபடை வீடு களாக்கி அறுபடை வீடுகளாக்கிவிட்டோம்.

ஆற்றுப்படை என்ற சொல்லில் உள்ள படை என்பது படுத்துதல், செலுத்துதல் என்று பொருள் கொண்ட சொல். வழியில் செலுத்துதல் வழிகாட்டுதல் என்ற பொருள்கொண்ட ஆற்றுப் படை என்ற சொல் ஆறுபடை என்ற சொல்லாகியதால் படை என்ற சொல்லின் பொருள் தெளிவில்லாமல் போய் விட்டது.

(நன்றி சொல்வேந்தர் சுகி சிவம்),

படை என்பதும் வீடு என்பதும் ஒரே கருத்த மைந்த சொற்களாக இப்போது கருதப்படுகின்றன. படை வீடு என்றால் யுத்த காலத்தில் தங்கும் பாசறையைக் குறித்த சொல். அதனால் முருகனின் ஆறு படை வீடுகளுக்கும் இதே கருத்து பொருந்தாது.

***ராவணா*** என்ற சொல் இரவின் நிறம் கொண்டவன் என்ற பொருள் கொண்ட வடமொழிச் சொல், தமிழில் இராவணன் ஆகியது. ***ராமா*** என்ற இரவின் அரசன் என்ற வடமொழிச்சொல் தமிழில் இராமன் ஆகியது. இரவின் மன்னன் சந்திரன். இராமச்சந்திரன் என்ற பெயரின் சுருக்கம் இராமன்.

கும்பகர்ணன் என்பது **கும்பகர்ணா** என்ற வடமொழிச் சொல்லின் தமிழ் வடிவம். கர்ணம் என்பது காதைக் குறித்த வடமொழிச் சொல். கும்பம் என்பது குடம் என்ற தமிழ்ச் சொல்லின் ஒத்த வடமொழிச்சொல். குடம் போன்ற காதுகளைக் கொண்டவன் என்பது இதன் பொருள்.

***சூர்ப்பநகா*** என்ற வடமொழிச் சொல்லின் தமிழ் வடிவம் சூர்ப்பனகை. சூர்ப்பம் என்பதற்கு சுளகு, இரத்தம் நிறைந்த பாத்திரம், என்பன பொருள்கள். நகா என்பதற்கு நகம் என்பது

பொருள். சூர்ப்பநகா என்றால் சுளகு போன்ற நகங்களைக் கொண்டவள் என்று பொருள்.

***திரிசடா*** என்றால் மூன்று பின்னல்களாகச் சடை போட்டிருந்தவள், தமிழில் திரிசடை ஆகிற்று.

இப்படி இராமாயணத்தில் வரும் பாத்திரங்கள் பலவற்றின் பெயர்களை நாம் காரணப் பெயர்களாகக் காண்கிறோம்.

இராவணனின் மனைவியாகிய ***மண்டோதரி***யை வண்டு அமர் ஓதி என்ற பொருளில் வண்டமரோதி என்று திருஞான சம்பந்தர் பாடியிருக்கிறார். ஓதி என்றால் கூந்தல் என்று பொருள். அமர் என்றால் விரும்புதல் என்று பொருள். ''ஆத்தி சூடி அமர்ந்த தேவனை— ''என்பதில் வரும் அமர்ந்த என்ற சொல் விரும்பிய என்ற பொருள் கொண்டது.

வண்டுகள் விரும்புகிற கூந்தலை வண்டமர் ஓதி என்பர். அமர் என்பதற்கு அமர்தல், இருத்தல் என்றும் பொருள் உண்டு. இரண்டு பொருள்களையும் சேர்த்துப் பார்க்கும் போது வண்டுகள் விரும்பி அமர்கின்ற கூந்தல் என்று சிறப்பாகச் சொல்லலாம்.

---

# ஞானந்தியின் புத்தகப்பை



சிங்கள சிப்பாய் ஒருவன்
ஞானந்தியின் பின்னே
அலைந்தான் உலைந்தான்
பல நாளாய்...
காதல் செய்... காதல் செய்... என்ற
அவனின் வற்புறுத்தல்கள்
அவளை விறாண்டிக்கொண்டே இருந்தன
அன்று அந்த செம்மணி
சாட்சி ஏதும் இல்லா இடமாய்
சோகங்களையே சுமந்துகொண்டு அழுதது
மரங்களின் அசைவோ
பறவைகளின் வருகையோ
அங்கு இல்லாமல் போயின...
ஞானந்தியை காப்பாற்ற
வீரன் ஒருவன் வருவான் என
வீதியோர நாணல்கள்
நிமிர்ந்து நிமிர்ந்து பார்த்தன
தம் ஏக்க பெருமூச்சினை
ஞானந்திக்காக மூசிமூசி முட்டி வீசின...
வீதியோர கூழாங்கற்களும் எழுந்துபோய்
அவன் கன்னவோர மண்டையை
தாக்கிவிட நினைத்து
அழுதபடியே அதில் கிடந்தன
ஒருநாள் இரண்டு நாளல்ல
ஒவ்வொரு பொழுதும்
ஞானந்தி அவனால் துரத்தப்பட்டாள்
அவனுடைய ஒவ்வொரு துன்புறுத்தலும்
வெடிமருந்து துகள்களாய்
அவள் நாசி நனைத்து போயின...
உறவுகளிடம் சொல்லிப்பார்த்தாள்
உறவுகள் உதவியாய் வந்து போயின
ஆனாலும்,
ஞானந்தியை மறக்கவில்லை
அவன்..!
அடுத்தநாள்
அவள் அந்த வீதியிலே
அநாதையாய் இறந்து போய் கிடந்தாள்...
"கறுப்பு வண்ண எருமை
ரக வாகனம் கொண்டு
அவளை துரத்தி அடித்து விழுத்திய
சோகக்கதையை.."
A9 வீதியோர
மரம், செடி, கொடி,
புல், பூண்டு, கல், நெல்
இனங்கள் எல்லாம் ஒன்றுகூடி
இரகசியமாய் பேசிக்கொண்டிருக்க
ஞானந்தியின் புத்தகப்பை மட்டும்
அவளுக்காய்
ஓரமாய் கிடந்து
அழுதுகொண்டிருந்தது...

**– சமரபாகு சீனா உதயகுமார்**

வண்டமர் ஓதி வண்டோதரியாகி பின் மண்டோதரியாகிப் பொருளற்றுப் போயிற்று. ''மந்த உதரி'' என்பதே மண்டோதரி ஆயிற்று என்பர் சிலர். மந்த என்பது சிறியது என்ற பொருள் கொள்ள உதரி என்பது உதரத்தை உடையவள் அதாவது வயிற்றை உடையவள் என்ற பொருள் கொள்ள மந்த உதரி என்பது அவளுக்குக் காரணப் பெயர் ஆகிற்று என்கின்றனர். இதன் பொருள் ஆகுபெயர்ப்படி பார்த்தால் சிறிய இடையைக் கொண்டவள் என்று ஆகும்.

திருக்கைலாய மலையிலிருந்த ஒருபெண் ஒரு சாபத்தால் மண்டுகமாகப் பிறந்து சாப விமோசனம் பெற்று மண்டோதரி என்று பெயர் பெற்றாள் என்பர் சிலர். மண்டுகம் என்பது தவளையைக் குறித்த சொல்.

## நளனும் பாம்பும்

நளனின் கதை சொல்கின்ற நளவெண்பாவில் ஒரு சொல் எப்படி பொருள் மாறிப் போனது என்பதைப் பார்ப்போம்.

தனது ஒன்றுவிட்ட சகோதரனான புட்கரனுடன் சூதாடி நாடுநகரிழந்து தன் மனைவி தமயந்தியோடு காட்டுக்குச் சென்றான் நளமகாராஜன். நள்ளிரவில் நடுக்காட்டில் தன்னந் தனியாகத் தன் மனைவியைத் தவிக்கவிட்டுப் பிரிந்து செல்கிறான்.

செல்லும் வழியில் காட்டுத்தீயில் எரிந்து கொண்டிருக்கும் ஒரு பாம்பைக்கண்டு அதன் மேல் இரக்கங்கொண்டு அதனைத் தீயிலிருந்து தூக்கிக் காப்பாற்றுகிறான். அப்போது அந்தப் பாம்பு அவனிடம் ''தச என்று சொல்லி என்னைத் தரையில் விடு'' என்றது. அவனும் தச என்று எண்ணித் தரையில் விட்டான்.

அவன் தரையில் விட்டதும் அப்பாம்பு அவனைக் கடிக்கிறது. அவனது உடல் நிறம் மாறி, அழகும் பிரகாசமும் இழக்கிறது. ''நான் உனக்கு உன் உயிர்காத்து உதவியிருக்க நீ ஏன் இப்படிச்செய்தாய்'' என்று நளன் கேட்க நீ சொன்னபடியேதான் நான் செய்தேன். இதில் என் தவறு என்ன இருக்கிறது'' என்கிறது.

தச என்றால் தசம். அதாவது பத்து என்று பொருள் கொண்டு நளன் பத்துவரை எண்ணி பாம்பை கீழே விட்டான். தச என்றால் கடி என்ற பொருள்கொண்டு பாம்பு அவனைக்கடித்தது.

ஒரு சொல்லுக்கு இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட பொருள்களும் உண்டு. இந்த விளக்கங்களோடு இராவணனுக்குப் பத்துத் தலை வந்த விதத்தை இனிப் பார்ப்போம்.

## பத்துத் தலை இராவணன்

''சூரியகுலத்துச் சந்திரன்'' என்ற தலைப்பில் கல்கி சஞ்சிகையில் பிரபஞ்சன் எழுதிவந்த கட்டுரைத் தொடரில் *3 ஜனவரி 2016* இல் வெளிவந்த ஒரு தகவலைப் பார்ப்போம்.

''தமிழர் வரலாறு எழுதிய அறிஞர் பி.டி.சீனிவாச ஐயங்காரின் புகழ் பெற்ற நூலிலிருந்து.." எனத்தொடங்கி பின்வரும் தகவலை அவர் தருகிறார்.

''தஸாஸ்ய'', ''தஸக்ரீவ'' என்ற சொற்களின் தவறான பொருள் கோளே இராவணனுடைய பத்துத் தலைகளுக்குக் காரணம் என நீண்ட நாட்களாக யூகிக்கப் படுகிறது. தஸாஸ்ய என்பது இராவணனுக்குச் சூட்டப்பட்ட ஒருபெயர். அதுவும் அதனோடு இனத் தொடர்புடைய ''தஸக்ரீவ'' ''தஸானன'' என்ற சொல் வடிவங்களும் பத்துத் தலைகளைக் குறிப்பனவாகப் பொருள் கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால் வான்மீகி தம்முடைய நூலில் ஒவ்வொரு இடத்திலும் ஒரு தலையும், இரு கைகளும் உடையவனாகவே அவனைக் காட்டியுள்ளார். இராவணன் எந்தெந்த வகையில் புகழ் பெற்றான்?.

1. அவன் உலகங்களைத் தொல்லைக்கு உள்ளாக்கினான்.
2. பகைவர்களுக்கும், கடவுள் உலகுக்கும் பேரச்சம் ஊட்டினான்.

''தஸக்ரீவஹ ப்ரதாபவன்'' என்பதன் பொருள் தொடக்கத்தில் ''தொல்லைதரும் புகழுடையவன்'' என்பதாகும். ''தஸாஸ்ய'' என்பதும் அதே பொருளை உடையதுதான். ஆக ''இயல்பிலேயே துன்புறுத்துபவன்'' என்பதுதான் அர்த்தமே தவிர பத்துத்தலை உடையவன் என்று பொருள் அல்ல.

அவரது தகவலோடு நாம் சிந்தித்துப் பார்க்கும்போது தஸ என்பது வடமொழியில் பத்து என்ற எண்ணையும் குறித்ததாலும் க்ரீவ என்பது கிரீடம் என்பதுபோல இருப்பதாலும் பத்துக் கிரீடங்களைக் கொண்டவன் என்று பொருள் கொள்ளப்பட்டு பத்துத் தலை கொண்டவன் என்று இராவணனுக்கு பத்துத் தலைகளைக் கொடுத்து விட்டார்கள்.

வான்மீகி இராமாயணத்தையேதான் தமிழில் பாடுவதாகக் கூறியுள்ள கம்பன் தலை விடயத்தில்

மட்டும் ஏன் இந்தத் தவறு செய்தான். இரவிரவாக வடமொழி தெரிந்த பிராமணர் களுடன் வான்மீகி இராமாயணத்தை ஆராய்ந்த கம்பனுக்கு வடமொழி வல்லுனர்கள் ஏன் இந்த மிகமுக்கியமான உண்மையைச் சொல்ல வில்லை.''

''விழுந்த ஞாயிறு எழுவதன்முன் மறை வேதியருடன் ஆய்ந்தே எழுந்த ஞாயிறு விழு வதன்முன் கவி பாடின தெழுநூறே''

என தான், இரவில் வான்மீகி இராமாயணத்தை வேதங்களை ஓதுகின்ற வேதியர்களுடன் ஆராய்ந்து பகற் பொழுதில் நாளொன்றுக்கு எழுநூறு கவிதைகளைப் பாடியதாகக் கம்பன் சொல்லியிருப்பதை மேலே உள்ள அடிகள் காட்டுகின்றன.

கம்பனுக்கும் வான்மீகிக்கும் இடையில் யாராவது இராவணனுக்குப் பத்துத் தலைகள் இருந்தன என்ற தவறான புரிகையை வெளிப் படுத்தி அது பிரபலமாகி,

கம்பனையும் கம்பனுக்கு வடமொழி நுட்பங்களைக் கூறிய வேதியர்களையும் குழப்பி விட்டதா? என்பது ஆராய்ச்சிக்குரியது.

தசரத என்பது பத்துத் தேர்களைக் குறிக்கிறது, பத்துத் திசைகளுக்கும் தேர்செலுத்தி வெற்றி பெற்றவன் என்ற பொருளில் தசரதா என்ற பெயர் தசரதனுக்குக் காரணப் பெயராக வந்தது. இப்பெயர் தமிழ் மொழி மரபில் தசரதன் ஆகியது.

இவனது தந்தை பெயர் அஜன் என்றும் தாய் பெயர் இந்துமதி என்றும் இராமாயணம் சொல்கிறது. சூரிய குலத்து அயனுக்கும் சந்திரகுலத்து இந்துமதிக்கும் பிறந்தவன் தசரதன் என்று கருதலாம். குலக் கலப்புத் திரு மணம் அப்போது நிகழ்ந்திருக்கிறது என்று இதன் மூலம் எண்ண முடிகிறது.

இந்த அடிப்படையில்தான் இராமனுக்கு தாய்வழிக்குலத்துப் பெயரான இராமச்சந்திரன் என்று பெயர் வைத்திருப்பார்களோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. இல்லாது போனால் சூரியகுலத்து தசரதன் தன் மகனுக்கு சந்திர குலத்தைக் குறிக்கும் இராமச் சந்திரன் என்று பெயர் வைத்திருப்பானா? தமிழில் இராமன் என்பதே சந்திரனைக் குறித்த சொல்தான். இரவுக்கு மன்னன் இராமன். தசரதனுக்குரிய உண்மைப் பெயர் தெரியவில்லை.

பெரும் மதிப்புக்குரியவர்களுக்கு பெரும் ஆற்றல் படைத்தவர்களுக்கு தெய்வங்களுக்கு பல தலைகள் பல கைகள் உள்ளதாகப் புராணங்களிலும் இதிகாசங்களிலும் கதைகள் உண்டு. சிவன், திருமால், பிரம்மா, பார்வதி, இலக்குமி, சரஸ்வதி, முதலானோர்க்கு நான்கு கைகள் என்றும், விநாயகருக்கு தும்பிக்கையோடு ஐந்து கைகள் என்றும், முருகப் பெருமானுக்கு பன்னிரண்டு கைகள் என்றும் கார்த்தவீரிய அருச்சுனன் என்பவனுக்கு ஆயிரம் கைகள் என்றும் புராணங்கள் சொல்கின்றன.

முருகப் பெருமானுக்கு ஆறு தலைகள் என்பதற்கேற்ப பன்னிரண்டு கைகள் சொல்லப் பட்டன. சிவபெருமானுக்கு வெளியில் தெரியும் ஐந்து தலைகளோடு தலைகளின் நடுவே மேல் நோக்கி உள்ளே மறைந்து ஒரு தலை இருப்பதாகச் சொல்லப்பட்டாலும் அவருக்குப் பத்துக்கைகள் என்றோ பன்னிரண்டு கைகள் என்றோ சொல்லப்படவில்லை.

''எண்தோள் வீசிநின்று ஆடும்பிரான் தன்னைக் கண்காள் காண்மின்களோ!'' என்று திருநாவுக்கரசு சுவாமிகள் திரு அங்கமாலையில் பாடுகிறார். அதன்படி எட்டுக்கைகள் என்றாகிறது.

மூன்று தலைகளைக் கொண்ட திரிசிரன் என்பவன் பற்றி புராணங்களில் கதை உண்டு. பிரம தேவருக்கு நான்குதலைகள் என்று சொல்வார்கள். சிவபெருமானுக்கு ஐந்து தலைகள். முருகப் பெருமானுக்கு ஆறு தலைகள் எனவே மூன்று தலை, நான்கு தலை, ஐந்து தலை, ஆறுதலை என்பதற்கு அப்பால் இவர்களையும் விட இன்னும் சிறப்புடைய, பேராற்றல் படைத்த இராவணனுக்கு பத்துத் தலைகளும் இருபது கைகளும் இருந்தன என்பது பொருந்தும் என்று நினைத்திருப்பார்கள் போலும்.

அதனால்த்தான் இராவணனை இராவண ஈஸ்வரன் என்ற பொருளில் இராவணேஸ்வரன் என்றனர் போலும்.

❍❍❍




கூதிர் காலத்தில் குன்றுகூட குளிரும். மனிதர்களுக்கு சொல்லவா வேண்டும். மத்தியானம் தொடங்கிய மழை அந்திக்குத்தான் விட்டது. ஆனாலும் தொடர்ந்து அடிக்கிற குளிர் காற்றுக்கு மேலெல்லாம் “நடுக்கல்” எடுத்தது. பற்கள் தானாக படபடத்து அடித்துக் கொண்டது. ஆறுமுகம் இரண்டு மூன்று தேத்தண்ணியை குடித்துப் பார்த்தார். தொண்டையை நனைத்தவுடன் “மேலு” கொஞ்சம் சூடாக இருந்தது. அதுவும் ரொம்ப நேரம் தாங்கவில்லை. இதைகூட சகித்துக் கொள்ளலாம். பழகிபோன ஒன்று. போலீஸ் ஸ்டேசனுக்கு தான் வர நேர்ந்த நிலைமையை நினைத்துப் பார்க்கத்தான் கொஞ்சம் அவமானமாக இருந்தது. ஆறுமுகம் யோசித்துக் கொண்டே டீகடை யிலிருந்து போலீஸ் ஸ்டேசனுக்கு நடந்து போனார். வானத்தை அண்ணாந்து பார்த்தார். கறுத்து போய் கிடந்தது. மறுபடியும் மழைவரும்போல இருந்தது. வேலு ஸ்டேசனிலிருந்து வெளியே நடந்து போனான். ஆறுமுகத்தை பார்த்ததும் அருவருப்பான ஒரு மிருகத்தை பார்த்ததுபோல முகத்தை திருப்பிக்கொண்டான். அவன் முகத்தை திருப்பிகொண்ட தோரணை ஆறுமுகத்திற்கு பெரும் வேதனையாக இருந்தது. ஒருகணம் எப்போதும்போல பொறுமை காத்திருக்கலாமோ என நினைத்தார். பொழுது விடிந்து பொழுது சாய்ந்தால் அண்ணே அண்ணே என்று கூப்பிட்ட அந்த முகமா இப்படி ஏறெடுத்தும் பார்க்காமல் முறைத்துக் கொண்டு போவது. எல்லாம் இந்த பூரணத்தால் வந்த வினை என்று நினைத்தாலும், பாவம் அவளும் என்னதான் செய்வாள். காடு மேடெல்லாம் அலைந்து திரிகிறவள்தானே. எத்தனை நாள்தான் “லேசுபாசா” சொல்லிப் பார்ப்பாள். சுத்தக்காரியாக இருந்தாள்கூட பரவா யில்லை. அவள் தன்னுடைய சம்சாரம் ஆயிற்றே. அவள் பேச்சை கேட்காமல் இருக்கமுடியுமா?

ஆறுமுகம் ஸ்டேசன் உள்ளே நுழைந்தார். அவரைப் பார்த்ததும் ஏட்டு ஏளனமாக சிரித்தான். “என்னய்யா..... இதெல்லாம் ஒரு பிரச்சனைன்னு கம்ப்ளைண்ட் குடுக்க வந்திடுறிங்க? எங்களுக்கு வேறவேலை இல்ல பாரு ... வெளியில போய் நில்லு. இன்ஸ்பெக்டர் ரவுண்ட்ஸ் போய் இருக்காரு. வந்ததும் விசாரிக்கலாம். உன் பொண்டாட்டிதான் வாய் பேசியிருக்கு. நீயும் கத்திய காட்டி மெரட்டுனியா... அவ்வளோ பெரியா ஆளா நீ.”

“இல்லைங்க சேர் நா ஒண்ணும் பண்ணலைங்க”

“ஆமா உங்க லட்சணத்தை எங்களுக்கு தெரியாது பாரு. போய் அங்க ஓரமா நில்லுய்யா”

“ஐயா எப்போ நான் வரட்டுங்க”

“என்னது எப்போ வரட்டுமா இங்கேயே நில்லுய்யா. தொரைக்கு வந்ததும் வீட்டுக்கு போவனுமோ”

ஏளனமாகபேசி ஏட்டு எரிந்துவிழுந்தான்.

“இந்த எழவுக்குத்தான் போலீஸ் ஸ்டேசன் பக்கமே வரக்கூடாது. கொஞ்ச பாடா படுத்து னானுங்க” இன்னும் எதுவும் மாறவில்லை என்று நினைத்தார் ஆறுமுகம். அவர் மனதில் நீங்கா வடுவாக இருந்த பழைய காட்சி இன்னும் அவரைவிட்டு அகலவே இல்லை. கடந்த காலத்தின் அந்த சம்பவங்களுக்கு பிறகுதான், எந்த போலீஸ்காரனை கண்டாலும் மரியாதையும் வரவில்லை நியாயம் கிடைக்கும்ங்கிற நம்பிக் கையும் ஆறுமுகத்திற்கு வரவில்லை.

அது தொண்ணூறுகளின் காலம். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சென்னையில் நடந்த கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டபோது குண்டு வெடித்து பலியானார். குண்டுவெடிப்பில் சிதறிக் கிடந்த அவரின் உடலின் புகைப் படங்கள் செய்தித்தாள்கள்தோறும் இடம்பெற்றன. நாடே அல்லோலப் பட்டது. வாரக்கணக்கில் துக்கம் அனுசரிக்கப்பட்டது. கொலையாளிகளை பிடிக்க போலீஸ் நாடெங்கும் வலை வீசி தேடியது. “கொலையாளி அங்க இருக்கான்'', “இங்க இருக்கான்'' “அந்த நாட்டுல இருக்கான்'' “இந்த நாட்டுல இருக்கான்'' என போலீஸ் பேயாய் அலைந்தது.

ஆனால், எங்கயோ நடந்ததுக்கு காலனி ஜனம் என்ன செய்யும். பொழுது விடிஞ்சு பொழுது சாஞ்சா தேயிலைக் காட்டுல திரியிற ஜனத்துக்கு என்ன தெரியும். காலனி ஜனமே போலீஸ் ஸ்டேசன்ல நின்னுச்சு. பாஸ்போர்ட்ட காட்டுச்சு. குடும்பகார்டை காட்டுச்சு. “தாய் நாட்டுக்கு திரும்பி வந்திருக்கம்''. இது எங்க நாடுன்னு சொல்லியும் யாரும் நம்பல. ‘‘நீங்கள் லாம் அகதிங்க. வந்த இடத்துல ஒழுங்கா இருங்க” என அதிகாரி ஒருவன் புத்திமதி சொன்னதோடு ஏக வசனத்தில் பேசினான். ஜனம் கண்ணீரும் கம்பலையுமாக என்னென்னவோ சொல்லுச்சு. யாரும் காதுகுடுத்து கேட்கல ‘‘உங்களை யெல்லாம் கண்டிலயிருந்து கப்பல்ல கொண்டு வரும்போது கடல்லே தள்ளிருக்கணும்” என ஒரு போலீஸ்காரன் ஏசினான்.

‘‘எங்கே இருந்து வந்து, எங்க நாட்டு பிரதமரை கொலை பண்ணுறிங்க” பாவம் அவனுக்கு அகதிக்கும், தாய்நாட்டுக்கு திரும்பியவனுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. ஸ்டேசனில் நின்ற தேயிலைக்காட்டு சனத்துக்குள்ள குண்டு வைத்த பயங்கரவாதியை தேடினான் அவன். விசாரணை... விசாரணை ஒரு வழியாக போலீஸ் கார்கள் சந்தேகம் போனது. இருந்தாலும் “எப்ப கூப்பிட்டாலும் ஸ்டேசன் வரணும்'' என்று எச்சரித்தே அனுப்பினர்.

அதன் பிறகு இப்போதுதான் ஸ்டேசன் பக்கம் வந்திருக்கிறார் ஆறுமுகம். அவர் உருவகித் ததுபோலவே ஸ்டேசன் நடவடிக்கைகள் இருந்தன. ஒரு காலத்தில் வெள்ளைக்காரன் கட்டிய பங்களாவில்தான் அந்த ஸ்டேசன் டவுனின் ஒதுக்குப் புறத்தில் இருந்தது. வெள்ளைக்காரன் கட்டிய பங்களாவிற்கு சாட்சியாக கூரையின் மேலே புகைகூண்டுகள் இருக்கும். அவர்கள் தங்கள் வீடுகளை “மோல்டு போட்டு'' கட்டியதே இல்லை. விறகுகட்டைகளை அடுப்பில் போட்டு எரித்து அந்த வெளிச்சத்தில் மதுவுடன் குளிரை போக்குவது அவர்கள் வழக்கமாகவும் பழக்கமாகவும் இருந்திருக்கிறது. உயர்ந்து நிற்கும் சுவரில் பூதம்போல வாயைத் திறந்து கொண்டு அடுப்பு இருக்கும். இப்போது அதை வண்ணம் தீட்டியிருந்தனர். அதன் முன்னேதான் இன்ஸ்பெக்டர் உட்கார்ந்து இருந்துகொண்டு ராஜீவ்காந்தி படுகொலைக்காக காலனி ஜனத்தை போலீஸ் விசாரித்ததை ஆறுமுகம் பார்த்திருக்கிறார். இப்போது நவீன கட்டிடங்கள் வந்துவிட்டன. கட்டிடங்கள் மாறி விட்டால் போதுமா, அதற்குள் வசிக்கிற மனிதர்கள் மாற வேண்டாமா? ஆறுமுகத்திற்கு உடலெல்லாம் வியர்த்தது. தன்னையறியாமல் உடல் தள்ளா டியது. முதன் முதலாக சக மனுஷன் ஒருவன் தன்னை தனித்து நிற்கும்போது, ஏளனமாக பேசுவதையும் மரியாதை குறைவாக நடத்து வதையும் அவரால் தாங்கிக் கொள்ள முடிய வில்லை. எப்பதான் இந்த பிரச்சனை முடியப் போகுதோ என்று அவருக்குள் பயம் வந்தது.

வேலுவுடன் நின்றிருந்த ஊர்த்தலைவர் சிங்காரத்தை பார்த்ததும் இன்னும் பயம் கூடியது. இவன் பொல்லாத “த்ரிக்ஸ்காரன்''. ஒண்ணுக்கு ரெண்டா சொல்லி, ரெண்டு பக்கமும் பேசிக்கிட்டு சாராயத்துக்கு வேலை பாக்குறவன் தானே. இவனைத் தலைவரா ஆக்குன காலனி மக்கள்மேல் கெட்டகோபம் வந்தது ஆறுமுகத்திற்கு.

வெளியே நின்றிருந்த ஆறுமுகத்தை பார்த்ததும் சிங்காரம் வேகமாக வந்தான். ‘‘என்ன அண்ணே கொஞ்சம் பொறுத்துப் போயிருக் கலாம். வீட்டுல அக்காகிட்டே சொன்னேன். கோடிப்புற “காவாயை “ஆழமா வெட்டனும். அப்பத்தான் மூத்திரம் மழ தண்ணியெல்லாம் சொவத்துக்கு ஏறாம கானுல போவும். கட்சிக்காரன் கிட்டே சொல்லிப் பாத்தேன். எவனும் கண்டுக்க மாட்டேங்கிறான். நான் என்ன பண்ண. சொல்லுங்க பாக்கலாம். சரி நில்லுங்க வேலுக்கிட்டே பேசிட்டு வாறன்” ஆறுமுகம் தலையை அசைத்தார். அவனிடம் பேசி ஒன்றும் ஆகப்போவதில்லை என்பதே அவர் எண்ணமாக இருந்தது.

ஸ்டேசன் உள்ளேபோய் சிறிதுநேரம் கழித்து வந்த சிங்காரம், ‘‘அண்ணே பேப்பரும் பேனாவும்

வாங்கணும். ஒரு நூறு ரூபாய் கொடுங்க. ஏட்டு கேட்டாரு.” ஆறுமுகம் தன் பாக்கெட்டை தடவி அழுக்கடைந்த ஐந்து ரூபாய்... பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணிக்கொடுத்தார். அவனை கெட்டமாதி “ஏசனும்'' போல இருந்தது. பொறுத்துப் போவோம் என ஆறுமுகம் தனக்குள் சொல்லிக் கொண்டார். சிங்காரம் பணத்தை வாங்கிக் கொண்டு கடைத்தெருப் பக்கம் போனான். அவன் எங்கே போவான் என்பது ஆறுமுகத்திற்கு ஏற்கனவே தெரிந்திருந்தது. சாரல் காற்று விசிறியடித்தது. போலீஸ் ஸ்டேசனின் தாழ்வாரத்தில் ஒடுங்கிக்கொண்டு நின்றவாறு டவுனை பார்த்தார். மழைநீர் ரோடெங்கும் இழைந்து பள்ளம் நோக்கி ஓடியது. மழைநீர் இப்படி ஓடினால்கூட பரவாயில்லை. மூத்திரமாக இருந்தால் என்ன செய்வது.

வனங்களும் தேயிலைத் தோட்டங்களும் படர்ந்துகிடந்த நீலகிரியின் ஒரு மலையின் இடுப்பில் ஒதுங்கி கிடந்தது அந்த காலனி. புல்லு புதர்களாகவும் குண்டும் குழிகளாகவும் கிடந்த அந்த இடங்களில்தான் இரவோடு இரவாக குடிசைகள் அடித்தனர். இரவு அடித்த குடிசைகள் பகல் வேளைகளில் அதுவும் பிடுங்கி எறியபட்டது. சில இடங்களில் தீ வைக்கப் பட்டது. சிலோன் அகதிகளுக்கு இங்கு இடம் இல்லை என உள்ளூர் மக்களால் விரட்டப் பட்டனர். துப்பாக்கி சூடுகூட நடந்தது. “நாங்கள் அகதி இல்லை இது எங்கள் ஊரு'' என்று கண்ணீர் மல்க கதறியபோதும் கேட்க ஆளில்லை. குடிசைகளைத் தேடி போலீஸ் ஜீப்புகள்தான் வந்தன. இரவு வந்தாலே ஆண்களுக்கு பயம் தொற்றிக்கொண்டது. அவர்கள் வீட்டில் படுக்க வில்லை. மலைகளுக்கு போனார்கள். தேயிலை நிரைகளில் படுத்து அதிகாலையின்போதே வீட்டிற்கு வந்தனர். இரவு நேரங்களில் வீட்டிற்கு வந்த போலீசார் பெண்கள் மட்டுமே வீட்டில் இருக்க “ஏதோ பரிதாபம் காண்பித்து எல்லோரையும் “விட்டுட்டு'' போனார்கள். இப்படியே அல்லும் பகலுமாக பல மாதங்களாக... பல வருடங்களாக போராடி “அடித்த'' குடிசைகள்தான் காலனி களாக நீலகிரி மலைகளில் உருவானது. அதுவும் ஒன்றையொன்று இடித்துக் கொண்டு, மலைச்சரிவுகளில் நின்றன. படிக்கட்டுகளில் பாத்திகள்போல அமைந்த குடிசைகளிடையே தான் கழிவுநீர்க் கால்வாய்களும், பெருமழையின் போது வெள்ளமும் கோடிப் புறங்களிலும் வழிந் தோடின. பள்ளம் கண்டபக்கம் பாய்வதுதானே நீரின் இயல்பு. ஆனாலும் பலருக்கு “ஏவுட்டு வீட்டுக்கு தண்ணி'' வரக்கூடாது “பீலி வரக்கூடாது- குப்பை விழக்கூடாது, என்று சண்டைகள் போட்டனர். ஊத்தை பேச்சுக்கும் குறைவில்லை. சண்டைகள் இல்லாத கிழமைகள் இல்லை. வேலு வீட்டில் கோடிப்பக்கம் பெய்யும் மூத்திரம் மழைக்காலங்களில் வங்கிகளில் வழிந்து கீழிறங்கின. ஆறுமுகம் வீட்டின் கோடிப் பக்கமும் வழிந்தோடின. பச்சைமண்ணில் வைத்த செங்கல் சுவர் நனைந்து ஈரம் வீடெங்கும் பரவின. பெருமழைக்கு சில குடிசைகளும் இடிந்து போனது.

''ஏங்க இந்த மேல்வீட்டுக்காரனுக்கு கொஞ்சம் சொல்லுங்க. கெழமையான போதும் சாராயம் குடிக்க மட்டும் காசு இருக்கு. அந்த கானை வெட்டமாட்டானா. மூத்திரம் நாத்தம் பொறுக்க முடியல. “தண்ணிவென்னி குடிக்கவே அய்யரவா'' இருக்கு. குடிசை வீடா இருந்தாலும் சுத்த பத்தமா இருக்கணும். மனுஷனுக்கு நோவு நொடின்னு வந்தா, நமக்கிட்ட கட்டு கட்டா பணமா இருக்கு ஆஸ்பத்திரி போய் பாக்க. கவுருமெண்டு ஆஸ்பத்திரிதான் நமக்கு கெதி” பூரணம் அடிக்கடி சொல்லும் வார்த்தை அது. அதுதான் சண்டையாக முடிந்தது.

ஆறுமுகம் கவாத்துக்கு போயிருந்தார். ஓவருக்கும் வெட்டினால் செடிகள் எண்ணிக்கை கொஞ்சம் கூடும். “மேமிச்சமான'' செலவுகளுக்கு ஆகும் என்று இருட்டும்வரை கவாத்து வெட்டி விட்டு காலனிக்குள் நுழைந்தார். வழக்கம் போல பீலிக்கரையில் சத்தமாக கிடந்தது. வேறு ஒரு குரலும் கேட்டது. அது பூரணத்தின் குரல். வேகமாக மேடேறிப் போனார். குடுமிகளை பிடித்து உருளாத குறையாக பூரணத்திற்கும் வேலு சம்சாரத்திற்கும் சண்டை நடந்தது. வழக்கம்போல காலனி ஜனம் வேடிக்கை பார்த்தது. மேல்வீட்டிலிருந்து “வங்கி''யில் நின்றவாறு மீனாட்சி கெட்ட ராங்கியில் பேசினாள். பதிலுக்கு பதிலாக பூரணமும் பேசினாள்.

''ஏய் வேலு இது ஒனக்கே நல்லாருக்கா எத்தனை கிழமையா என் சம்சாரம் உன்கிட்ட சொன்னா அந்த கோடிப்புற கானை ஆழமா வெட்டக் கூடாதா. வீட்டுக்கு ஆம்பிளை நீதானே செய்யணும்”



அன்று ஊரடங்கும் வரை சொல்லிக் கொண்டிருந்தான். காலையில் எழுந்து வேகமாக போனான். போனவன் ஆறுமுகம் வீட்டை பார்த்த பார்வையே சரியில்லாமல் இருந்தது. ஆறுமுகம் அதை கவனித்தார். அவர் நினைத்ததுபோலவே அவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப் பட்டிருந்தது.

அன்றைய பொழுது முடிந்து போயிருந்தது. மலைகளில் இருள் கவிழத் தொடங்கியது. இனிமேலும் விசாரணை நடக்கும்ங்கிற நம்பிக்கை ஆறுமுகத்திற்கு இல்லை. மலைக்கு போயியிருந்தாலாவது ஒரு நூறு தேயிலைச் செடியை வெட்டியிருக்கலாம். கூலி கிடைத்திருக்கும். எல்லாம் போச்சே என்று ஆறுமுகத்திற்கு ஆதங்கமாக இருந்தது. போலீஸ் ஸ்டேசனுக்குள் வண்டிகள் போகும் போதெல்லாம் ஓடிப்போய் எட்டிப் பார்த்தார். யாரும் கூப்பிட்டபாடில்லை.

சிங்காரம் வந்தான். அவனோடு வேலுவும் உள்ளே போனான். ஏதேதோ குசுகுசுத்து பேசிக்கொண்டு அவர்கள் வெளியே வந்தனர்.

“அண்ணே நம்மள விசாரிக்க இங்க யாரும் இல்லை. இன்ஸ்பெக்டர் நாளைக்குத்தான் வருவாராம் வாங்க வீட்டுக்கு போகலாம்”

“நாளைக்கும் வரணுமா வேலை கெடுமே” அதுக்கு நான் என்ன அண்ணே பண்ணுறது போலீஸ் கேசுன்னா அப்பிடித்தான் இருக்கும். சரி கோவிச்சுக்காம இரு நூருபாய் காசு குடுங்க” சிங்காரத்திற்கு என்னபதில் சொல்வது என்றே ஆறுகத்திற்கு தெரியவில்லை. அவர் முகத்தில் ஆத்திரத்தின் ஆங்காரத்தை சிங்காரத்தால் அந்த மங்கிய பொழுதில் பார்க்க இயலவில்லை. கையில் எஞ்சியிருந்த சில ரூபாய் நோட்டுக்களையும் எடுத்துக்கொடுத்துவிட்டு காலனி நோக்கி நடந்தார். பணத்தை வாங்கிக்கொண்ட சிங்காரத்தின் கால்கள் சாராயகடையைநோக்கி நடக்க வேலுவும் அவனோடு நடந்துபோனான். அவன் ஆறுமுகத்தை கேலியாக பார்த்த பார்வையைசொல்லி அன்று உறங்கும்வரை பூரணத்துடன் கதைத்துக் கொண்டிருந்த ஆறுமுகம் மீண்டும் பூரணத்திடமே அந்த கதை வந்து நின்றது. அதுதான் அவளுக்கு பெரிய ஆத்திரத்தை கிளப்பியது.

“ஆமா இவரு பெரிய கலெக்ட்டரு எனக்கு உத்தரவு போடுறாரு. பொம்புலய பேச விட்டுட்டு பேச வந்திட்டான்” வேலு நிக்க முடியாத அளவிற்கு போதையில் இருந்தான். அவன் தள்ளாடி “வங்கி”யிலிருந்து ஆறுமுகம் கூரைமீதே விழுந்துவிடுவான் போலிருந்தது அவனின் தள்ளாட்டம். சிலர் அவனை கைத் தாங்லளாக பிடித்தனர். திமிறிகொண்டு ஏசத் தொடங்கினான்.

“டேய் ஆறுமுகா வாடா மேல. பொம்புள சீலைக்குள்ளே நுழைஞ்சிகிட்டியா”

ஆறுமுகத்திற்கு ஆத்திரம் பொறுக்க முடியவில்லை.

“டேய் கவாத்து கத்திதான் இருக்கு பாத்துக்க. உசுரு பத்திரம்” ஆறுமுகம் பேக்கிலிருந்து கத்தியை எடுக்க பூரணம் அவரைத் தடுத்து பேக்கை பிடுங்கி ஒழியவைத்தாள்.

“எல்லாம் உன்னால வாறதுடி...வாயை குடுக்காதேன்னு சொன்னா கேக்குறியா” பூரணத்தையும் ஆறுமுகம் ஏசினார்.

“அப்ப குப்பைக் குழியா வீடு கெடக்கட்டும். அவ குப்பையையும் கூட்டி நம்ம வாசலுக்கு தள்ளட்டும். மூத்தரம் பேஞ்சு கோடிப்பக்கத்தை நாறடிக்கட்டும். வீட்டுக்குள்ள வந்து பேசச் சொல்லுங்க. இனி அதுமட்டும்தான் பாக்கி. எத்தனை நாள் சொல்லுறது.”

“இப்ப வாயை மூடுறியா இல்லையா” ஆறுமுகம் ஓங்கி அதட்டினார். துணிகளை அள்ளிக்கொண்டு முனகிக்கொண்டே பீலிக்கரை பக்கம் போனாள் பூரணம். மேல்வீட்டில் சத்தம் அடங்கினாலும் வேலு மட்டும் கத்திக் கொண்டிருந்தான். “கவாத்துகத்தில வெட்டுவியோட நீ. ஒனக்கு நாளைக்கு ஒரு பாடம் படிச்சு காட்டுறேன்டா விடியட்டும்” வேலு திரும்ப திரும்ப அதை

“நீ கொஞ்சம் பொறுத்துப் போயிருக்கலாம் உன் வாயும் சரியில்ல”

“புள்ளைக படுத்துகிடக்குது இல்லேன்னா கெட்டமாதிரி பேசிப்புடுவேன் ஆமா. அங்க சுத்தி இங்க சுத்தி என்கிட்டேயே வாரியா நீ” பூரணம் போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு திரும்பி படுத்துக்கொண்டாள்.

“உனக்கு என்னா தெரியும் அலையிரவனுக்கு தானே வருத்தம் தெரியும்” ஆறுமுகத்தின் பேச்சை அவள் சட்டை செய்யவில்லை. அவள் கண்களி லிருந்து கண்ணீர் வழிந்தது. அடுத்த நாளும் போலீஸ் ஸ்டேசன் போகவேண்டுமே. வெட்டி “குறைபோட்டுவிட்டு வந்த கவாத்து மலையை நினைத்த ஆறுமுகத்திற்கும் உறக்கம் வரவில்லை. பொழுது விடிந்தும்கூட பூரணம் ஆறுமுகத்திடம் “முகம் கொடுத்து “பேசவில்லை. அன்றைய செலவுக்கு என்ன செய்வது டவுனுக்கு போனால் என்னென்ன செலவு வருமோ என்று நினைத்தவர் பரிதாபமாக பூரணத்தை பார்த்தார். அவள் அவரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. தூக்கு சட்டிகளையும் பைகளில் எடுத்துகொண்டு கொழுந்துக் கூடையை தலையில் மாட்டியவள்

“இந்தா இருக்கு. இத வச்சி என்னமோ பண்ணிட்டு வாங்க. இதத்தவிர என்கிட்டே ஒத்தைபைசா இல்ல” சில ரூபாய்த் தாள்களை “சாமிதட்டில்'' வைத்துவிட்டு வீட்டைவிட்டு இறங்கி தோட்டம்நோக்கி போகும் ஜனங்களோடு கலந்தாள்.

“வேணுமிண்ணே அலைய வைக்கிறானுக நாசமா போனவனுங்க. எல்லா பயலும் ஒண்ணுக் குள்ள ஒண்ணா திரிஞ்சி த்ரிக்ஸ் பண்ணுறானுக. அந்த நாட்டுல தொரைமாரோட திரிஞ்சிகிட்டு, கங்காணி மாறுக த்ரிக்ஸ் பண்ணுறமாதிரிதான், இந்த ஊருல தலவருமாருகளும். எல்லாரும் ஏமாத்துக்காரனுங்க... எம்புருஷன அநியாயமாக “கேசுல“ மாட்டிவிட பாக்குறானுக நாசமாத்தான் போவானுங்க” ஆற்றாமையால் பூரணம் புலம்பிக் கொண்டே போனாள். கூடவந்த பொம்புள ஆட்கள் தான் தைரியம் சொன்னார்கள். கவாத்து ஆட்கள் புறப்பட்டு காலனியைவிட்டு இறங்கிப்போவதை பார்த்த ஆறுமுகத்திற்கு மனம் கனத்தது. இன்னும் எத்தனை நாள் அலையனுமோ விதிவிட்ட வழி என்று ....... நடந்து போனார்.

போலீஸ் ஸ்டேசனில் அன்றும்கூட்டமாகவே இருந்தது. கூட்டத்தை பார்த்தததுமே ஆறுமுகத் திற்கு இன்றும் விசாரணை இருக்காதுபோல என நினைத்தவர் ஏக்கமாக சிங்காரத்தை பார்த்தார்.

“ஸ்டேசன்னு வந்தா அப்படித்தான் அண்ணே இருக்கும். உங்களுக்கு தெரியாதா” என்றான் அவன்.

“அதுக்கில்ல சிங்காரம் கவாத்து வெட்டுன வாக்குல குறையா கெடக்கு. இந்த கிழமைக்கு “செலவு'' வாங்கவும் பணம் இல்லை. எப்போ வரணும்னு கேட்டு சொல்லுப்பா அன்னிக்கி வந்திடுறேனே” கெஞ்சாத குறையாக கேட்டார் ஆறுமுகம்.

“அதுக்கு இல்லேண்ணே, திடீர்னு இன்ஸ் பெக்டர் கூப்பிட்டா அந்த நேரம் நீங்க இல்லன்னா என்னைய புடிச்சிகிட்டு ஏசுவாங்க... அப்புறம் பெரிய கேசா போட்டு விட்டுருவாங்க. சண்டை போட்ட நீங்கதான் ஒத்துப்போவனும். ஸ்டேசனுக்கு வந்திட்டா, இனி அவங்க சொல்றதைத்தானே கேட்கனும் ”

“அப்படி என்னய்யா பெரிய குத்தம் செஞ்சு புட்டேன். காலனிகள்ல நடக்காததா. நீதான் ஊரு தலைவரு நீ வேலுக்கிட்டே பேசிப்பாரேன். வேலு என்ன தெரியாதவனா. நடந்தது நடந்திரிச்சு நாமலே பேசிமுடிச்சிக்கலாம்.” ஆறுமுகம் அப்படி சொன்னதும் கொஞ்சம் உற்சாகமாக பேச ஆரம்பித்தான் சிங்காரம்.

“அண்ணே நீங்க உள்ளே வரவேணாம். வெளியேயவே நில்லுங்க இந்தா வந்திடுறேன்”

இன்ஸ்பெக்டர் அறைக்குள் நுழைந்தான். அவன் உள்ளே நடந்துபோகும் தோரணையே அவனுக்கு எந்த அளவிற்கு ஸ்டேசனில் “செல்வாக்கு'' இருக்கிறது என்பதை உணர்த்தியது.

“என்னய்யா சிங்காரம்.... என்ன சொல்றான் உங்க ஊருக்காரன் ”

“அய்யா நாங்களே பேசி முடிச்சிக்கி றலாம்னு....” தலையை சொறிந்தான் சிங்காரம்.

“யோவ் எங்களுக்கு வேற வேலை இல்ல பாரு. நீங்களே கம்பளைண்டு கொடுப்பிங்க அப்புறம் ஒத்துப்போய்டுவிங்க. என்ன விளை யாட்ட பண்ணுறிங்க. யாரு புகாரு கொடுத்தது?”

“வேலுங்க சேர்”

“அவன் எங்கய்யா”

“வெளியில நிக்கிறாரு அய்யா”

“போய் கூட்டிகிட்டு வா... போ”

சிங்காரம் வெளியே வந்து வேலுவிடம் ஏதோ கிசுகிசுத்தான். ஆறுமுகம் அண்ணே அய்யா கூப்பிடுறாரு உள்ள வாங்க” சிங்காரம்

அழைத்த தோரணையிலேயே அவனின் கள வாணித்தனத்தை ஆறுமுகத்தால் உணர முடிந்தது.

''என்னய்யா கவாத்து கத்தி வச்சிருந்தா நீ பெரிய ரவுடின்னு நெனப்பா. தூக்கி உள்ள வைக்கவா உன்ன கொடூரமான ஆயுதம் வச்சி தாக்க பாத்திருக்க இது எவ்வளவு பெரிய "கேஸ்'' தெரியுமா"

''நான் திட்டமிட்டு அப்படி பண்ணலங்க அய்யா அவங்க பேசின ஊத்தை பேச்சை தாங்க முடியாமத்தான்..... அதுவும் வேணுமின்னு பண்ண லங்க அய்யா" நடுக்கத்தோடு ஆறுமுகம் பேசினார்.

''ஓ... நீ எனக்கே சட்டம் சொல்லி தாரியா ஹூம் .... கான்ஸ்டபில் இந்த ஆள அங்கே உட்கார வைய்யியா" எழுந்து வந்த ஏட்டு ஆறுமுகம் தோளில் கையை போட்டு அறையின் ஒரு மூலைக்கு தள்ளிக்கொண்டு போனவன்." யோவ் அய்யாகிட்டே எதுவும் பேசாத எல்லாம் உங்க ஊரு தலைவரு சிங்காரத்துகிட்டே சொல்லியிருக்கேன். நீ பேசாம இங்க உட்காரு." ஏட்டு சூசமாக ஏதோ சொல்ல வருகிறார் என்று மட்டும் புரிந்தது. வேலு ஆறுமுகத்தை ஏளன மாக பார்த்ததும் ஆறுமுகத்திற்கு ஆற்றாமையும் அவமானமும் ஒன்றுசேர கண்ணீரே வந்துவிட்டது. வேறு ஏதோ இரு நபர்கள் கூனிக்குறுகி நிற்க இன்ஸ்பெக்டர் ஊத்தைபேச்சில் ஏசிக் கொண்டிருக்க ஒரு கணம் ஆறுமுகத்திற்கு கண்கள் இருளடைந்து வந்தது. சிங்காரமும் வேலுவும் காணாமல்போயிருந்தனர். பொழுது போய்கொண்டிருக்க உடலெல்லாம் நடுக்கமும் பயமும் உறைந்திருக்க எல்லோரையும் வேடிக்கை பார்ப்பதுவும் "வாக்கிடாக்கி" உத்தரவுகளும் ஆறுமுகம் காதில் ஒலித்தன. தாயகம் திரும்பும் போது இலங்கைதொடங்கி ராமேஸ்வரம் வந்திறங்கிய நாள்முதலாக இப்படி குந்தியி ருந்த இடங்களும் அலைக்கழித்த அதிகாரிகளும் நினைவில் வந்துநிற்க ஓங்கி கதறி அழனும்போல இருந்தது ஆறுமுகத்திற்கு. அடுத்து என்ன நடக்கும் என்று நினைத்துகொண்டிருந்தவர் வெளியே எட்டிப் பார்த்தார் . தேயிலை மலைகள் இருளோடு இருளாக மறைந்துகொண்டிருந்தது.

சற்று நேரத்தில் சிங்காரமும் வேலுவும் வந்து நின்றனர். இருவரும் நிற்கும் நிலையே வழமைபோல கொஞ்சம் தடுமாற்றம் இருந்தது. ஏதோ ஒரு அறைக்கு போனவன் வேகமா வந்தான்.

''அண்ணே நீங்க வாங்க. அய்யா போகச் சொல்லிட்டார் வெளியே நில்லுங்க வாறன்" அவனை ஏக்கமாக ஆறுமுகம் பார்த்தார். ''அண்ணே அதெல்லாம் விடுங்க அண்ணே. எல்லாம் நான் பாத்துக்கிறேன்" அவனும் ஏட்டு போல ஏதோ பீடிகை போடுறான் என்பது ஆறுமுகத்திற்கு தெரிந்தது.

''யோ ஊருத் தலைவரு சிங்காரம் இங்க வாய்யா நீ சொன்னதால விடுறேன் இல்லண்ணா உள்ளே வைக்க வேண்டியிருக்கும். ஏய்யா... வேலு நீயும்தான் ரொம்ப லொள்ளு பண்ணி யிருக்க" வேலுவும் சிங்காரமும் கொஞ்சம் பணிவாக குனிந்து நிற்க வெளியே போன ஆறுமுகம் நடக்கும் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே நின்றார். வேலுமட்டும் வெளியே வந்தான். அவன் பின்னால் வந்த சிங்காரம் ஆறுமுகத்திடம் வந்து நின்றான்.

''அண்ணே ஏதோ நமக்கு நல்ல காலம். நான் சொன்னதால அய்யா விட்டுட்டார். "கேஸ்" எதுவும் போடலையாம் ஆனா ....." சிங்காரம் தலையை சொரிந்தான். ஏட்டுவும் கூடவந்து நின்றான் ."இங்கே என்னய்யா கூட்டம் மறுபடியும். ஏய் சிங்காரம் உள்ளே வந்திட்டு போ" சொல்லிவிட்டு ஏட்டு உள்ளே போனான்.

சிங்காரம் கேட்பதற்கு முன்பே, பூரணம் கொடுத்த பணத்தை எடுத்துக்கொடுத்தார் ஆறுமுகம். சனியன் இத்தோடு தொலையட்டும் என்று நினைத்தவர் காலனி நோக்கி நடந்தார். ''எவனெவனோ ஒப்பந்தம் போட்டுட்டு, இங்கே கொண்டு வந்து இந்த கரையில கொட்டிட்டு போய்ட்டானுங்க ஒழுங்கா ஒரு இடத்தை கொடுத்து இருந்தா, நாம ஏன் கண்ட கண்ட நாய்கிட்டே லோல்படனும்" ஆறுமுகம் முனகிக் கொண்டே நடந்தவர் மலைகளை பார்த்தார். கவாத்து வெட்டி வாங்கிசெலவான பணத்தை "மூத்திரச் செலவு'' கணக்கில்தான் வைக்க வேண்டும் என நினைத்தார். மங்கிய அந்தியில் தெரியும் காலனியை பார்த்தார். வழமைபோல கழிவுநீரில் கலந்த மழைநீர் காலனிகளின் ஊடாக வழிந்து கொண்டிருந்தது. எங்கோ பார்த்த ஓர் அழகிய வீட்டின் தோற்றம் ஆறுமுகத்தின் மனத்திரையில் நிழலாடிக் கொண்டேயிருந்தது.

❍❍❍

# திறந்தது ஆயிரத்தியோராவது கண்



இளைய அப்துல்லாஹ்

உணர்வுக்கூடை திடீரென்று
கொட்டியது பெரும் பேறு.
உடலின் வாசனைக்குள்
திரிந்து போய் நிர்மூலமாகின்றன
ஆறடியும்.
பேயாட்டத்தின் பெருந்தீயில்
வேகிப்போகிறது கட்டை.
வெடித்துச்சிதறியபடிக்கு சிலிர்க்கிறது
முடிவிலியின் கரங்கள்.
வாருகிறது பார்வைக்கும்
பருவத்திற்குமான ஒன்று.
அருகணைத்து
முத்திட ஒத்திட கூர்நுதி
ஒன்று கூட்டி வைத்திருக்கிறது
கறுப்புணர்வின் குன்றுமணி பதுமை.
மென்மையாய் ஒத்தடமிடுதல் தகும்.
அறு சுவைக்குள் அமிழாதா காயத்தின்
நுண் கரங்கள்.
போதாத போழ்தில் பொழுதுவக்கும்
வேண்டும் வேண்டும் என்றபடிக்கு
நாக்குழறும்.
உன்னைக்கண்ட பேறேயென
ஆர்ப்பரித்து சிந்திய
சிறிதுதட்டைத்திணித்து
கொப்பளிக்கிறது குருதி.
கவிதைக்காய் சொற்களை
சேர்த்த போதும் சுடுகிறது
அடி நெஞ்சு.
ருசி பெற்ற உணர்
மூச்சில் தெறித்து விழுகிறது
இரு துளி வியர்வையமுது.
உதறும் ஒர்மத்தின் ஒரக்கண்ணசைவில்
கேட்கின்ற காணா நெஞ்சத்து
முனகலில் மட்டும் அடக்க
முடியா மெல்லவஸ்த்தை
வேண்டும் முக்தியுடனான
போர்வைக்கதப்பு.
எப்பொழுதும் முடிவிலியாய்
தொடரும் சிற்றின்ப சிற்றாறே!
நதித்தொடரை ஒன்றாக்கும்
பெரு வெளியே!
கரைகின்ற மூளைக்குள் போகத்தின்
காணாப்பொருளறிவே! கட்டியத்தின்
வானளவே போதாது என்றுரைக்க
உனக்குமட்டுமேன் இத்தனை பகட்டு?
தலைக்கிறுக்கை ஏற்றி விளையாட்டின்
முறையை சுற்றித்தொடர
உன்னாலும் முடியும் மணித்தீவே.
பார்த்திருப்போம் மற்றொரு முறைக்காயும்
இன்னொரு கவிதைக்காயும்.

# தமிழில் சிறுவர் இலக்கியம்
# கல்விக் காலனித்துவத்திலிருந்து விடுபடல்

"சிறுவருக்கான இலக்கியம்", "சிறுவர் படைக்கும் இலக்கியம்" ஆகிய இரண்டு துறைகளும் முக்கியமானவை. சிறுவர் தமது எழுச்சிக்களுக்குக் கலைவடிவம் கொடுக்கின்றனர். வளர்ந்தோர் மகிழ்வு நீச்சலுடனும் அறிவு அளிக்கை நோக்குடனும் சிறுவர் இலக்கியங்களைப் படைக்கின்றனர்.

சிறுவருக்கான கலைப்படைப்புக்களை வளர்ந்தோர் உருவாக்குதல் நீண்ட வரலாற்றுத் தொடர்ச்சியைக் கொண்டது. மகிழ்வூட்டல், அறிவூட்டல், ஒழுக்கமூட்டல், சிறுவரின் செயற்பாடுகளை வினைத்திறன் படுத்தல், சமூகமயமாக்கலை வளப்படுத்தல், முதலாம் இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு சிறுவர் இலக்கியங்கள் உருவாக்கப்பட்டன.

சிறுவர் உருவாக்கும் படைப்புகள் அவர்களின் மனக்கோலங்களை வெளிப்படுத்தி நிற்கும்.

வளர்ந்தோர் உருவாக்கும் படைப்புகளே சிறுவர் இலக்கியத்தைப் பெருமளவிலே நிறைவு செய்கின்றன. சிறுவர் இலக்கியம் என்ற பிரிவில் குழந்தைச் சந்தம் (Nursary Phyme) பாடல், குறுங்கதைகள், நாடகம், மகிழ்விளையாட்டு, புனைவு சாரப் படைப்பு, கட்டுரை ஆகியவை அடங்கும்.

அண்மைக் காலத்தில் சிறுவர் கலைப் பரப்பில் புதிய வளர்ச்சி நிகழத் தொடங்கியுள்ளது. சிறுவர் ஓவியம், சிறுவர் திரைப்படம், மகிழ்வியம் (Comics), கணினி வழி, இடைவினை கொள்விளையாட்டு, புதிர்விளையாட்டு, நொடிகள், குறுக்கெழுத்து விளையாட்டு முதலியவை வளர்ச்சி கொள்ளத் தொடங்கியுள்ளன. அவற்றோடு சிறுவரின் சீர்மியச் செயற்பாட்டுக்கு (Counselling) உாயி கலையாக்கங்களும் உளவியல் ஆய்வுகளை அடியொற்றி உருவாக்கப்படுகின்றன.



**பேராசிரியர்**
**சபா ஜெயராசா**

வளர்ந்தோர் கலை இலக்கியம் போன்ற பெரும் விரிவுடன் சிறுவர் கலை இலக்கியங்களும் நீள் விரிவு கொள்ளத் தொடங்கியுள்ளன.

வரலாற்று நிகழ்ச்சிகளுடன் சிறுவர் பாடலாக்கங்கள் தொடர்புபட்டிருந்தமை, ஆழ்ந்து நோக்கப்பட வேண்டிய நிகழ்ச்சியாகும். சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:

1. **"பா பா பிளாக்சிப்" – என்ற பாடல் மத்தியகாலக் கம்பனி வரிவதிப்புடன் தொடர்புடையது.**
2. **"ஜாக் அன் ஜில்" என்ற பாடல் பிரான்சில் நிகழ்ந்த துயர வரலாற்று நிகழ்ச்சிகளுடன் தொடர்புடையது.**
3. **"நிலா நிலா ஓடிவா" என்ற பாட்டு சிறுவர் பள்ளிக் கூடங்களில் அறிமுகம் செய்யப்பட்ட "நிலாவினை விளையாட்டு" என்ற கல்வி வரலாற்று நிகழ்ச்சியுடன் தொடர்புடையது.**
4. **"கை வீசு அம்மா கைவீசு" என்ற பாடல் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 'கடை' என்ற வர்த்தக நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட நிகழ்ச்சியுடன் தொடர்புடையது.**

பெண்களே சிறுவர் இலக்கியத்தை முதலில் உருவாக்கினர். சமூக வரலாற்றில் பெண்களே முதலில் பயிற்செய்கையை மேற்கொண்டனர். அவ்வாறே சிறுவர் இலக்கியத்தையும் பெண்களே உருவாக்கினர். சமூக வளர்ச்சியில் குழந்தை வளர்ப்பு என்பது பெண்களிடமே சுமத்தப்பட்டதனால், அவர்களே சிறுவருக்கான பாடல்களையும், கதைகளையும் உருவாக்கினர்.

இன்றும் முன் பள்ளிக்கூடங்களிலும், தொடக்கப் பள்ளிக்கூடங்களிலும் பெண்களே ஆசிரியர்களாகப் பெருமளவில் செயற்படுகின்றனர். குழந்தை வளர்ப்புப் பொறுப்பின் நீட்சியாக அது அமைகின்றது.

ரூசோவின் இயற்பண்பியற் சிந்தனை களோடும், நவீன குழந்தை உளவியலின் வளர்ச்சியோடும், கல்வி விரிவாக்கத்தோடு எழுத்தறிவு நீட்சியோடும், சிறுவர் இலக்கிய ஆக்கச் செயற்பாடுகளின் நவீன கோலங்கள் மேலெழத் தொடங்கின.

வங்காளத்தில் இரவீந்திரநாத் தாகூர் ''பிறை நிலா'' என்ற தலைப்பில் வெளியிட்ட பாடல் களும் அவற்றுக்கு நந்தலால் போஸ் என்ற பெரும் ஓவியர் தந்தவரைபுகளும், இந்தியாவின் நவீன சிறுவர் இலக்கிய ஆக்கத்துக்கு விசை கொடுத்தன.

வெறும் ஓசை இன்பத்துக்காக மட்டும், தாகூர் சிறுவர் பாடல்களைப் புனையவில்லை. இயற்கைக்கும் இறைக்குமான இணைப்பு, வாழ்வின் மனவெழுச்சி ஆழம், அழகியல் இணைப்பு முதலானவற்றை நிறை படிமங் களினால் வெளிப்படுத்தினார். அவை இந்தியா வின் வேறு மொழிகளிலும் பெயர்ப்புச் செய்யப் பட்டன.

தமிழில் நவீன சிறுவர் இலக்கியத்தின் முன்னோடியான பாரதியார் சந்த இன்பத்துக்காக மட்டுமன்றி, உறுபொருள் பொதிந்தும் படைப்பாக்கத்தை மேற்கொண்டார்.

சிறுவருக்கான எழுத்தாக்க மரவு தமிழ்ச் சூழலில் ஏற்கனவே நிலைபெற்றிருந்தது. கல்வி வழியாகப் பரவலுற்ற சிறுவர் பற்றிய சிந்தனைகளும், ஆசிரியர் கல்வி வாயிலாகச் சுவறலுற்ற உளவியல் அறிவும், சிறுவர் இலக்கிய ஆக்கங்களை முகிழ்த்தெழச்செய்தன.

வளர்ந்தோரின் சிற்றுருவமாகச் சிறுவர் களைக் காணலும், அந்நிலையில் நின்று இலக்கியப் படைப்புக்களை உருவாக்குதலும் கனத்த அறிவூட்டுதலும் குழந்தை உளவியலால் தகர்ப்புக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன.

மார்க்சியச் சிந்தனை வளர்ச்சியும், சோவியத் திலும், சீனாவிலும் நிகழ்ந்த ஒடுக்குமுறைகளுக்கு எதிரான உழைப்பவர் புரட்சிகளும், சிறுவர் இலக்கிய ஆக்கங்களில் செல்வாக்கை ஏற்படுத்த லாயின.

எவ்வகைச் சுரண்டலுக்கும் சிறுவர் உள்ளடக் கப்படலாகாது என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. பெரும் எழுத்தாளர்கள் சிறுவர் இலக்கிய ஆக்கங் களிலும் ஈடுபாடு கொள்ளலாயினர். விஞ்ஞானி களும் சிறுவர் இலக்கிய ஆக்கங்களில் ஈடுபாடு கொண்டமை. ஒரு சிறப்பு நிகழ்ச்சியாயிற்று.

அச்சுப் பண்பாட்டின் வளர்ச்சி சிறுவர்க்கான நூல் வெளியீடு, இதழ் வெளியீடு, முதலிய வற்றை முன்னெடுத்தது. சிறுவருக்கான பழங் கதைகள் தொகுக்கப்படலாயின. சிறுவர் கலைக் களஞ்சியம் ஆக்கம் பெறலாயிற்று.

மூன்றாம் உலக நாடுகளில் காலனித்துவ நீக்கம் முற்றாக இடம்பெறவில்லை.

தாய்மொழியைப் புறந்தள்ளிவிட்டு, ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளைச் சிறுவர் மீது திணிக்கும் செயற்பாடுகள் இன்று நிகழ்த்தப்படுகின்றன. சிறுவயதிலேயே தாய் மொழிக் கல்வி புறக்கணிக்கப்படுகிறது.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஆங்கில மொழி மேலாதிக்கம் சிறுவர் மீது திணிக்கப் படுகிறது. சுதேசமொழிகளில் வெளிவரும் சிறுவர் ஆக்கங்களைப் புறந்தள்ளிவிட்டு, ஆங்கில மொழி ஆக்கங்களை சிறுவர் மீது திணிக்கப்படுகின்றன. அதனால் சிறுவர்கள் மனக் குழப்பங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். தாய்மொழியின் மன இயைபு தடுக்கப்படுகிறது.

வளர்ச்சிநிலையிலேதான் பிற மொழிகளைக் கற்றலும், இலக்கியங்களை வாசித்தலும் ஏற்புடையது என்பதைப் பெற்றோர் மறந்து விடுகின்றனர். வழிகாட்டுபவர்களும் மறந்து விடுகின்றனர். அந்நிலையில் ''கல்விக் காலனித்துவம்'' என்பது தொடர்ந்த வண்ணமே யுள்ளது.

கல்விக்காலனித்துவத்துடன் பண்பாட்டுக் காலனித்துவமும் இணைக்கப்படுகிறது. காலை யில் ஆசிரியரைப் பார்த்து வணக்கம் என்று சொல்வதற்குப் பதிலாக *"Good Morning"* என்று சொல்வதையே மேட்டுக்குடிப் பெற்றோர் விரும்புவதாகக் கள ஆய்வு ஒன்று வெளிப் படுத்தியுள்ளது.

அண்மைக்காலத்தைய சிறுவர் இலக்கி யத்தில் நிகழும் ஒரு முன்னேற்றகரமான வளர்ச்சி, பால்நிலைச் சமத்துவத்தை சிறுவர் இலக்கியங்கள் கலை நயப்புடன் வழங்கும் செயற்பாடாகும். தமிழில் அது முழுமையாக இடம் பெறவில்லை.

சிறுவர் இலக்கியங்களினூடாக வளர்க்கப் படும் எதிர்மறையான அணுகுமுறைகளையும் கருத்திற் கொள்ளவேண்டியுள்ளது.

இத்துறையில் ஆய்வுகளை நிகழ்த்திய திறனாய்வாளர் ***கிம்பர்லி ரெயினோல்*** சிறுவர் இலக்கியங்களின் ***நடுநிலை தவறிய*** செயற்பாடு களைச் சுட்டிக் காட்டியுள்ளார். இருபத்தோராம் நூற்றாண்டின் சிறுவர் இலக்கிய ஆய்வில் செறிவு



மிக்க கருத்துக்களை முன் வைப்பவராக கிம்பர்லி ரெயினோல் அடையாளப் படுத்தப்படுகிறார். *(Prof. Kimberley Reynolds, 2012).*

சிறுவர் உளப்படிம உருவாக்கத்தில் மேலாதிக்க அணுகு முறைகள் ஊடுருவு வதை ஆழ்ந்து நோக்க வேண்டியுள்ளது. விளம்பரங்களாலும், நுகர்ச்சிப் பொருள்களாலும் அது மேலும் வலுவூட்டப் படுகிறது.

இலங்கைத் தமிழ்ச் சூழலில் சிறுவர் இலக்கியத்துக்கு உளமார்ந்த பொறுப்பு உண்டு. நீண்ட பெரும் யுத்தத்தின் தாக்கங்களும், இழப்புகளும், இடப்பெயர்வும், நிகழ்த்திய உளத்தாக்கங்களுக்கு உள்ளான பெற்றோரின் வாரிசுகளான சிறுவர்களின் உளவளர்ச்சிக்கு உறுதுணையான படைப்புக்களை உருவாக் குவதில் ஊன்றிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

அதேவேளை மலையகச் சிறுவருக்குரிய கலையாக்களிலும் மிகுந்த உற்று நோக்கலை மேற்கொள்ள வேண்டியுள்ளது. கடின உழைப்பும் தாழ்ந்த வருமானமும் கொண்ட வாழ்க்கை, நிறை ஊட்டச் சத்துடைய உணவு பெற்றுக் கொள்ள முடியாத பெற்றோரும், பிள்ளைகளும், பொருத்தமற்ற இல்லங்கள், முதலாளிய ஆதிக்கச் செயற்பாடுகள், ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு சிறுவருக்கான படைப்புக்களை உருவாக்கப்பட வேண்டியுள்ளன. சிறுவர் இலக்கியம் என்பது சமூகப் பொறுப்புமாகும்.

சமூக நிலைவரங்களின் பின்புலத்தில் சிறுவரின் மனவெழுச்சி வளர்ச்சியை முதன்மைப் படுத்தும் சிறுவர் ஓவியங்களையும் புனைகதை களையும் ஆக்குபவர் **ரொம் பேர்சிவல்**. மிகுந்த வறுமையான சூழலில் அவரின் சிறுவயது வாழ்க்கை அமைந்திருந்தமை அவரது ஆக்கங்களின் உட்செறிவாக அமைந்தது.

மேற்கு ஆபிரிக்காவின் நிறைவறுமைச் சூழலில் வாழும் சிறுவர்களுக்கு வலுவூட்டும் நோக்கில் சிறுவர் இலக்கியங்களைப் புனைந்த **லூயிஸ் பிரான்** என்பாரும் சமூக நோக்குடைய சிறுவர் இலக்கிய ஆக்குனர்களில் ஒருவராகக் குறிப்பிடப்படுகிறார். அவரது பெரும்பாலான கதைகள் முடிவு குறிப்பிடப்படாதவை. வாசிக்கும் சிறுவர்களே தமது விருப்பத்துக்கு ஏற்றவாறு முடிவை அமைத்துக் கொள்ளலாம்.

இலங்கைத் தமிழ்ச் சூழலில் பன்மை நிலையில் சிறுவர் இலக்கியம் வளர்ச்சியுற்று வருகின்றவேளை, இடைவெளிகளையும் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

முப்பது ஆண்டுகளாக நிகழ்ந்த போரின் தாக்கங்களைச் சிறுவரின் அறிகை வீச்சுக்குள் கொண்டு வரும் செயற்பாடுகள் நிகழ்ந்துள்ள மையை சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

வகை மாதிரிக்கு சிறுவர் பாடல் ஒன்று வருமாறு:

**வன்னிக்குளம் ஏன்**
**வரண்டு கிடக்குது?**
**போரின் அவலம்**
**கண்ட தாலே.**

**சோலைக்குயில் ஏன்**
**சுருண்டி புலம் புது?**
**போரை நேரில்**
**கண்டதாலே.**

**கோயிற் பசு ஏன்**
**குளறி அழுகுது?**
**போரின் இழப்பு**
**சுமந்த தாலே.**

**அங்கே என்ன**
**அழுகுரல் கேட்குது?**
**அம்மை அப்பரை**
**இழந்த தாலே.**

**போரின் அவலம்**
**மீண்டும் வருமோ?**
**மனிதர் மனிதர்**
**அடக்கல் வீழ்ந்தால்**
**போரே வராது.**
**உலகே மீளும்.**

கூர்ந்த சமூக நோக்கும் வளர்ந்துவரும் உளவியல் மற்றும் சிறுவர் சீர்மிய நோக்கும், மாற்றுக் கல்வி நோக்கும், கொண்ட சிறுவர் இலக்கியப் படைப்புக்களே சிறுவரின் ஒன்றிணைந்த வளர்ச்சிக்கு உள்ளீடுதரவல்லவை.

○○○

இரவு 7 மணிக்கு வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு, உள்ளே நுளைந்தான் 'விவேக்' என்னும் விவேகானந்தன்.

"விவேக் நீர் வீட்டுக்கு வாற நேரம் என்ன? கொஞ்சம் நேரத்தோட வந்து, இஞ்சை இருக்கிற அலுவல்களைப் பாக்க வேணுமெண்ட எண்ணம் இல்லையே? எத்தினை நாள் சொன்னாலும் உம்மட மர மண்டையில ஒண்டும் ஏறுதில்லையே?" கர்ச்சித்தாள் மீனா என்ற மீனலோஜினி.

"என்ன மீனா நான் எவ்வளவு தூரம் சைக்கிள் ஓடி வரவேண்டாமே? சரி இப்ப என்ன வேணும்? சொல்லும். ஓடிப்போய் உதில பக்கத்துக் கடையில வாங்கி வாறன்" என்று மிகவும் பவ்வியமாக மனைவியிடம் கேட்டான் விவேக்.

"ஏன் உமக்கு வீட்டில என்ன சாமான் சட்டு இல்லையெண்டு தெரியாதே? வரேக்க வாங்கிறதை வாங்கிக் கொண்டு வரலாம் தானே?" வீட்டை வந்திட்டுப் பிறகொரு சவாரி போகோணுமே? எகிறினாள் மீனா.

"அப்பிடி நினைக்கிற சாமான்களையெல்லாம் ஒரே நேரத்தில வாங்கிக்கொண்டு வர முடியுமே? ஏதோ அண்டண்டாடு தேவையானதைத்தானே வாங்கேலும்." கொஞ்சம் காரமாகப் பதில் சொன்னான் விவேக்.

"எட்டு வருஷமாய் ஒரே பல்லவியைத் தானே பாடிக் கொண்டிருக்கிறீர். ஏதோ கண்டறியாத ஒரு உத்தியோகம் பாக்கிறீர். இந்த வீட்டில என்ன கிடக்கு? வாடகை வீடு. எப்ப வீட்டுக்காரன் துரத்திறானோ? உம்மைக் கலியாணம் முடிச்சு நான் என்ன சுகத்தைக் கண்டன்? பழஞ்சீலையளை உடுத்துக் கொண்டு, கிலிட்டு நகைகளைப் போட்டுக் கொண்டு, நான் அங்க இங்க போகேக்க படுகிற அவமானமும், வேதனையும் உமக்கு விளங்காது. ஏதே பெரிய படிப்பு, உத்தியோகத்தில புறமோசன் கிடைக்கும். கனக்கச் சம்பளம் கிடைக்கும் எண்டெல்லே நான் ஏமாந்து போனன். சீச்.. சீ நீர் ஒண்டுக்கும் வக்கில்லாத ஆம்பிளை" சீறினாள் மீனா.

"ஏன் மீனா இப்ப என்ன நடந்திட்டுது? நெடுகலும் இப்பிடிச் சத்தம் போடுறீர் அயல் வீடுகளில உள்ளவை, நான் சண்டை பிடிச்சு உமக்கு அடிக்கிறன் எண்டு நினைச்செல்லே எனக்குப் புத்தி சொல்லுகினம்." நிதானமாகச் சொன்னான் விவேக்.

"அப்ப... எனக்கு அடிக்கிற எண்ணமும் உமக்கிருகே? என்று சீறிய மீனா விவேக்கின் கன்னத்திலும் முதுகிலும் அடித்தாள்.

"ஐயோ மீனா பிள்ளை படிக்கிறாள். அவள் பயப்பிடப் போறாள். கொஞ்சம் நிதானமாக இரும்" "என்னப்பா உமக்கு வர வர மூளை மாறாட்டமே?" என்று கெஞ்சினான் விவேக்.

மீனாவிடம் அடி வாங்குவது அவனுக்கு இது முதல் தடவையல்ல.



"நீர் ஒண்டுக்கும் லாயக்கில்லாதவன் எண்ட தெல்லாம் உம்மட அருந்தவப் புதல்விக்கும் தெரியட்டுமே. அயல் பொம்பிளையள் என்ன மாதிரிச் சீவிக்கினம் எண்டு உமக்குத் தெரியுமே? சொந்த வீட்டில இருக்குதுகள். நல்ல நாள் பெருநாளில அந்தமாதிரி சீலை சட்டையும்., பளிச்செண்டு தங்க நகையளும் போட்டுக் கொண்டு, அங்கை இங்கை பிரயாணம் போய் வருகுதுகள். அதுகளின்ர வீடுகளில விலையான சாமான்கள் என்னென்ன இருக் கெண்டு உமக்குத் தெரியுமே? இஞ்சை என்ன இருக்கு? ஒண்டுக்கும் வழியில்லையே" புலம்பினாள் மீனா.

இதெல்லாம் வழக்கமானதுதானே என்று எதையும் காதில் வாங்கிக் கொள்ளாத விவேக், குளியலறைக்குப் போய் உடலையும், உள்ளத்தையும் குளிர்மைப்படுத்திக் கொண்டு வெளியே வந்தான்.

மகள் 'சர்மி' என்ற சர்மிளா அப்பாவிடம் வந்து "அப்பா நாளைக்குச் சனிக்கிழமைதானே? நாங்கள் பின்னேரம் பூங்காவுக்குப் போவேமே- அங்க நான் ஊஞ்சல் ஆட வேணும். அங்க எங்கட வகுப்புப் பிள்ளைகளெல்லாம் வரு வினம்" என்று கெஞ்சினாள்.

"ஓமடி உன்ர கொப்பர் நாளைக்கு உன்னை பூங்காவுக்குத்தான் கூட்டிக் கொண்டு போகப் போறார். போடி அறைக்குள்ள. போய்ப் படிக்கிற அலுவலைப் பார்." நீ.. உனக்கொரு கொப்பர் என்று மகளை ஏசினாள் மீனா கடுங் கோபத்துடன்.

"ஏன் மீனா நீ இப்ப பிள்ளையில பாயுறாய்" என்று மனைவியைக் கேட்ட விவேக்,. "நாங்கள் நாளைக்குப் பூங்காவுக்குப் போவம்" என்று மகளைச் சமாதானப் படுத்தினான்.

"நீங்கள் போற இடத்துக்குப் போங்கோ சனியன்களே"

"அதுக்கு முதல்ல இப்ப இந்தப் போமில (form) கையெழுத்துப் போடும்" என்று சொல்லி ஒரு போமை விவேக்கின் கையில் திணித்தாள் மீனா.

'விவாகரத்து விண்ணப்பம்' என்பதை வாசித்த விவேக் "என்ன உமக்குப் பையித்தியம் முத்திப் போச்சே?" என்று மீனாவைப் பார்த்துச் சீறினான் விவேக்.

"ஓ எனக்கு லூசுதான். எட்டு வருஷமாய் உம்மோட இருந்திட்டன். நான் மடச்சிதான். நான் என்ர பாட்டில போறன்." என்றாள் மினா தெளிவாக.

"என்ன உளறுறாய் நீ எங்க போகப் போறாய்?" கொதித்தான் விவேக்.

"நான் எங்கட அம்மா அப்பா வீட்டுக்குப் போறன்." என்றாள் மீனா மிக நிதானமாக.

"தங்களுக்கு ஒரு பொறுப்புக் குறைஞ்சு போச்சுதெண்டு இருக்கினம். எப்பவாவது ஏதோ ஒரு சாட்டில இஞ்ச வருவினம். மூக்கு முட்டச் சாப்பிட்டு போவினம். பேரப் பிள்ளைக்குக் கூட ஒண்டும் கொண்டராயினம். உம்மட அம்மா அப்பா. இப்ப நீ என்னன்டா... அங்க போறன் எண்டிறாய்." என்றான் விவேக் வெறுப்பாக.

"என்ர தாய் தேப்பனை நீர் என்ன குறை சொல்லுறது? கொதித்தாள் மீனா.

"ரெண்டு வருஷமாய் காதல் எண்டு என்னை என்ன பாடு படுத்தினாய். ஏதோ படிக்கிறாய் உத்தியோகம் பாப்பாய் குடும்பத்தில எனக்குப் பாரம் இருக்காது எண்டு நினைச்சன். ஆத்தில விழுறன் குளத்தில விழுறன் எண்டு நாடக மாடினாய். உன்னை என்னவோ உலகத்தில இல்லாத திரவியம் எண்டு நினைச்செல்லே என்ர தாய் தகப்பன் சகோதரங்களை விட் டுட்டு உனக்குப் பின்னால ஓடி வந்தனான். எவ்வளவோ சொத்துச் சுதந்திரமுள்ள குடும்பத்தை விட்டெல்லே ஒண்டுமில்லாத உங்கட குடும்பத்துக்குள்ள வந்தன். ஒரு பக்கத்தாலும் எனக்கு உதவி இல்லை. ஏதோ எல்லாத்தையும் சமாளிச்சுக் கொள்ளலாம் எண்ட துணிவோடதான் நான் இருக்கிறன். உமக்கு ஒண்டும் விளங்கேல்லையே? குடும்பம் எண்ட ஒரு பொறுப்பும் இல்லையே? எங்களை நம்பி ஒரு பொம்பிளைப்பிள்ளை இருக்கெண்ட சிந்தனையும் இல்லையே? மிகத் தெளிவாக நிதானமாகச் சொல்லி முடித்தான் விவேக்.

"உந்த வீண் கதையளை விட்டுட்டு, நான் தந்த போமில (form) கையெழுத்தைப் போடும்". "நான் உம்மோட இஞ்ச இனிச் சீவிக்க மாட்டன்.. பொம்பிளைப் பிள்ளை தாயோடதானே இருக்கும்". கத்தினாள் மீனா.

"நான் கையெழுத்துப் போட மாட்டன் நீ என்ன செய்வாய்? என்று சீறினான் விவேக்.

மீனா சட்டென்று எழுந்து விவேக்கின் முதுகில் அறைந்தாள். எதிர்பாராத தாக்கு தலைச் சந்தித்த விவேக், மகளையும், அயல் வீடுகளிலுள்ள மனிசரையும் மனதில் நினைத்துக் கொண்டு, "என்ன மீனா என்னை ஏன் கரைச்சல் படுத்திறாய்? இப்ப உனக்கு



**நீண்ட வருடங்களுக்குப் பின்னர் தங்கள் வீட்டுக்குப் போய், வாசல்படியிலே நின்று கொண்டு, உள்ளே கால் வைக்கலாமா? வேண்டாமா? என்று சிந்தித்த விவேக், மிகத் தயக்கத்துடன் உள்ளே தலையை நீட்டிப் பார்த்தான்.**

என்ன பிரச்சனை வந்தது" என்று சற்றுத் தணிந்த குரலில் கேட்டான்.

"நீரும் முந்தி மாதிரி இப்ப இல்லை. குடும்பத்தில அக்கறை இல்லை. நாலு காசு கூடுதலாய்ச். சம்பாதிக்கக் கெட்டித்தனம் இல்லை." மீண்டும் சீறினாள் மீனா சத்தமாக. விவேக ்குடும்பத்தை நடத்த எவ்வளவு கஸ்டப்படுகிறான் என்பதை மீனா விளங்கிக் கொள்ளவில்லை.

"மீனா கனக்கக் கதைக்க வேண்டாம்" என்று சற்று குரலை உயர்த்திக் கத்தினான் விவேக்.

"ஓ இவ்வளவு உசாரோ உமக்கு? கந்தோரில ஆரோ சிறுக்கியள் பல்லுக் காட்டிப் போட்டினமோ? ஐயாவுக்கு கோபமும் வருகுதோ.? நான் உன்னோட இருக்கேலாது. உன்னை நம்பி ஏமாந்து போனன்." சீறினாள் மீனா.

இப்போது பொறுமை இழந்த விவேக், மீனாவுக்கு அடிப்பதற்கு கையை ஓங்கிக் கொண்டு போனான்.

"எங்க அடி பாப்பம். ஊரைக் கூட்டுவன்." பொலிசுக்கு அறிவிப்பன் "மரியாதையாய் போமில கையெழுத்தைப் போடு" எகிறினாள் மீனா.

"போட மாட்டன் என்னடி செய்வாய்." முறைத்தான் விவேக் பொறுமையிழந்து.

"அப்பா.. அப்பா.. என்னப்பா இது?. இஞ்சை என்ன நடக்குது.? நான் படிக்கிறேல்லையோ? என்று கேட்டுக் கொண்டு அப்பாவுக்குப் பக்கத்தில் வந்து நின்றாள் சர்மி.

விவேக ஒரு செக்கனில் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, அவசரமாக அறைக்குள் புகுந்து கொண்டான்.

மறுநாள் சனிக்கிழமையானதால் மீனா மிகவும் பிந்தியே படுக்கை விட்டு எழுந்தாள். காலை அலுவல்களை முடித்துவிட்டு சர்மியை எழுப்புவதற்காக அவளது கட்டிலைப் பார்த்தாள். சர்மியைக் காணவில்லை. சர்மியின் 'ஸ்கூல் பாக' 'யூனிபோம்' சில உடுப்புகள் எதையும் காணவில்லை. விவேக்கின் அறையை எட்டிப் பார்த்தாள். அது வெறிச்சோடிக் கிடந்தது. அவனது கட்டிலில் கடந்த இரவு அவள் கொடுத்த 'விவாகரத்து விண்ணப்பம்' சரி பாதியாகக் கிழிக்கப்பட்டுக் கிடந்தது.

நீண்ட வருடங்களுக்குப் பின்னர் தங்கள் வீட்டுக்குப் போய், வாசல்படியிலே நின்று கொண்டு, உள்ளே கால் வைக்கலாமா? வேண்டாமா? என்று சிந்தித்த விவேக், மிகத் தயக்கத்துடன் உள்ளே தலையை நீட்டிப் பார்த்தான்.

பேரப்பிள்ளையுடன் போய் நின்றால், இதுவரை நடந்ததையெல்லாம் தாய் தந்தையர் மறந்து மன்னித்து விடுவார்கள் என்று விவேக் நினைத்திருந்தது பொய்கவில்லை. அப்பப்பாவும், அப்பம்மாவும், சித்தப்பாமாரும், சித்திமாரும், சர்மியை வரவேற்று அணைத்துக் கொண்டனர். தங்களை யார்யார் என்று அறிமுகப்படுத்திக் கொணடனர். சர்மி பாசமழையிலே நனைந்தாள். பெரிய வீட்டைப் பார்த்து மனம் பூரித்துப் போனாள். அவள் வரவேண்டிய இடத்துக்கு வந்து விட்டாள். தலை குனிந்து நின்ற விவேக்கை "அண்ணா" என்று அழைத்து அருகில் வந்து நின்றாள் தங்கை மணிமாலா. அவள் இப்போது பெரிய பெண்ணாகியிருந்தாள். அவளைப் பார்த்ததும் விவேக்கின் கண்கள் குளமாகின.

விவேக்கும் சர்மியும் வந்து நின்ற கோலத்தைப் பாரத்ததும் வீட்டிலுள்ளவர்கள் எல்லோருக்கும் எல்லாம் புரிந்து விட்டது. யாரும் எதையும் இனி விசாரித்தறியப் போவதில்லை.

எல்லோரும் சாப்பாட்டு மேசையில் அமர்ந்து கொண்டனர். அந்த வீட்டு மனிதர்களின் முகங்களெல்லாம் செந்தாமரைகளாக மலர்ந்தன.

விவேக்கின் அறையை வேலைக்காரி லட்சுமி சுத்தமாக்கிக் கொண்டிருந்தாள். சர்மி இனி அப்பம்மாவின் அறையில் தங்கிக் கொள்வாள். சர்மி இனி நிர்மலாச் சித்தி படிப்பிக்கும் பாடசாலையில் சேர்ந்து கொள் வாள். மணிமாலா அத்தையோடு ஓட்டோவில் ஸ்கூலுக்குப் போய்க் கொள்வாள்..

விவேக் மீனா இருவரும் காதலித்து கலியாணம் செய்திருந்தார்கள். அவளுக்காகத் தன்னை முற்றாக இழந்திருந்தான் விவேக். கடந்த எட்டு வருட வாழ்க்கை அவனுக்குக் கசக்கவில்லை. காதலுக்காக அவன் ஏற்றுக் கொண்ட வாழ்க்கைதானே அது. இப்போது மணமுறிவை மீனாதான் கேட்டாள். மீனாவுக்கு விவேக்கின் மேல் இருந்த காதல் ஏன் கசந்ததோ?. மீனா ஏன் தமது சிறிய குடும்ப வாழ்வை வெறுத்தாளோ? அவள் என்னை வெறுக்க வேண்டிய காரணம் என்ன? அவளுடைய மனதை யார் குழப்பினார்களோ? வருமானம், வசதி வாய்ப்பு அதிகம் உள்ள அயல் மனிதர் களுடைய ஆடம்பர வாழ்க்கையைப் பார்த்துத் தனக்கு அப்படியான வாழ்க்கை கிடைக்க வில்லையே் என்று மனம் பேதலித்தாளோ

சனிக்கிழமை இரவு முழுவதும் விவேக் தொடர்ந்து இவற்றையே சிந்தித்தான். எதற்கும் அவனால் விடை கண்டுபிடிக்க முடியவில்லை.

மீனா கோட்டுக்குப் போய், நீதவானிடம் விவாக ரத்தை, யாசகமாகக் கேட்டுக், கையேந்தும் நிலமை அவளுக்கு ஏற்படக் கூடாது என்ற தன்மான உணர்ச்சியில், அவள் கேட்ட விவாகரத்தை மிக இலகுவாக கொடுத்து விட்டான் விவேக்

எப்படியோ இருவரது மனங்களிலும் முறிவு ஏற்பட்டு விட்டது. அது மணமுறிவில் முடிந்து விட்டது. ஆம் தீவிரமான சிந்தனைக்குப் பின் விவேக் எடுத்ததுக் கொண்டது விவேகமான முடிவுதான்.

○○○

# யாரிங்கு காட்டுவர் கரிசனம்

குலையும் உடலின் கட்டு
முதுமை உன்னைத் தொட்டு
அலையும் மனமும் கெட்டு
அதையிதை நாளும் கேட்டு

விலையின் ஏற்றம் கண்டு
விருந்தை மறக்கும் வயிறு
மனதும் சரியும் சுருண்டு
அலைவு கண்டு மிரண்டு

வற்றியும் போகும் தனம்
வசமிழந்து மாறும் குணம்
சுற்றியும் பற்றும் சினம்
சுடுகாடாய் மாறும் மனம்

வாட்டிடக் கழறும் உறவுகள் தினம்தினம்
வந்து தொற்றும் நோய்களும் தினம்தினம்
சாட்டுக்களும் சண்டைகளும்
பெருகும் தினம்தினம்
சாவையே ஊக்கும் மனம் தினம்தினம்

உலகில் உலவிடுதே இவ்நூதனம்
உள்ளமெல்லாம் இருப்பதோ நரித்தனம்
யாரிங்கு காட்டுவர் கரிசனம்

**– மனோகரி ஜெகதீஸ்வரன்**

# முஸ்லிம் பாடசாலை ஒரு பண்பாட்டு அணுகல்



முஹம்மது ஜைத்
கல்வித்துறை, கலைப் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

முஸ்லிம்களுக்கு என்று ஒரு தனித்துவமான பண்பாடும் நாகரிகமும் உள்ளது. அது இஸ்லாத்தின் தூதரான நபி (ஸல்) அவர்களின் வாழ்வியல் விழுமியங்களிலிருந்து கடைந்தெடுக்கப்பட்ட முதுசங்கள். அவற்றை உள்ளிட்ட ஒரு கலாசாரத்தைத்தான் நமது பாடசாலைகள் வளர்க்க வேண்டும். சுத்தம் சுகம் தரும் என்ற பாரம்பரியக் கருத்தில் அர்த்தம் உள்ளது. ஆனால், சுத்தம் ஈமானில் பாதி என்ற ஆழ்ந்த அர்த்தத்திற்கு அது ஈடாகாது. நமது வாழ்வு-மரணம், வணக்கம்-வழிபாடு, மூச்சுப் பேச்சு அனைத்தையும் ஆழ ஊடுருவிப்படர்ந்துள்ள ஈமானிய விழுமியங்கள் பாடசாலைப் பண்பாட்டிலும் பிரதிபலிக்க வேண்டும். அப்போது மாத்திரமே முஸ்லிம் தனித்துவப் பாடசாலைகள் என்பதற்கு அர்த்தம் கிடைக்கும்.

இன்று வளர்முக நாடுகளில் மட்டுமன்றி, விருத்தியடைந்த நாடுகளிலும் இளம் தலைமுறையினரால் ஏற்படும் சமூகப் பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணங்களில் ஒன்று, விழுமியக் கல்வி வழங்கப்படாமை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. சமூக நேர்வழியிலிருந்து விலகுதல், முரண்படுதல், சமூக நீதியைப் புறக்கணித்தல், சமூக அச்சுறுத்தல்களை ஏற்படுத்தல், மக்களின் சகிக்கும் எல்லையை மீறுதல் போன்ற சமூக எதிரிகளாக இளைஞர்கள் மாறுவதற்கு சான்றிதழ் மையக் கல்வி மறைமுகமாகப் பங்களிப்பதாகக் கல்வியாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இன்றைய எமது கல்விச் செயற்பாடுகளில் கல்வி/அறிவு என்பவற்றைத் தீர்மானிக்கும் அல்லது வழிநடாத்தும் சக்திகளினதும் எஜமானர்களினதும் நோக்கம் தெளிவாக அறியப்பட்ட ஒன்று. பலவகை உலக நிறுவனங்கள், அமைப்புகள் என்பவற்றின் நோக்கங்களுக்கு ஏற்ப எமது கல்வி அரசியல் சித்தாந்தங்களால் பிணைக்கப்பட்டுள்ளது. இத்தகைய அமைப்பொன்றில் மாணவர்கள் தத்தமது கலாசார அடையாளங்களையும் பண்பாட்டுக்கோலங்களையும் தொலைத்து விட்டனர். ஆதிக்க கலாசார அமைப்பு முறைக்கேற்ப மாணவர்கள் தயார்செய்யப்படும் நிலையையே காண்கிறோம். இத்தகைய பின்னணியில் பாடசாலைகளை ஒழுக்க நெறிமயமாக்க வேண்டிய அவசியம் இன்று உணர்த்தப்படுகிறது.

1800களில் முஸ்லிம் சமூகம் தனது கலாசார, சமயத் தனித்துவத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் தனித்துவமான பாடசாலைகளை ஸ்தாபித்தனர். தனித்துவ முஸ்லிம் பாடசாலைகளின் தோற்றம் வரலாற்றின் விபத்தோ, தன்னியல்பாக எழுந்ததோ அல்ல. அதற்குப் பின்னணியில் கடின உழைப்பும் போராட்டமும் இருந்தது. அதன் விளைவுதான் ஆங்கில மொழி மூல ஸாஹிராக்களின் உருவாக்கமாகும். மத்ரஸது ஸாஹிரா என்ற அடையாளத்துடன் அவை தொடங்கப்பட்டன. மிஷனரிப் பாடசாலைகளின் மதமாற்ற முயற்சிகளிலிருந்து விலகிச் செல்வதற்கும் இஸ்லாமிய கலாசார சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் இத்தகைய தனித்துவப் பாடசாலைகள் எழுந்தன. எனினும், ஒரு நூற்றாண்டு கடந்தும் இப்பாடசாலைகளின் பண்பாடுகளைப் பார்க்கும்போது கவலையளிப்பதாக உள்ளது. சடவாதமும் மதச்சார் பின்மையும் பொருளாதார மோகமும் நிறைந்துள்ள இன்றைய சமூக சூழலில் ஒரு பண்பாட்டினதும் கலாசாரத்தினதும் பாதுகாப்பு மையமாகச் செயற்பட வேண்டியவை பாடசாலை எனும் சமூக நிறுவனமே.

இப்பின்னணியில்தான் அறிவை இஸ்லாமிய மயமாக்கல், கல்வியை இஸ்லாமிய மயமாக்கல் போன்ற கருத்தோட்டங்கள் முன்வைக்கப்பட்டு 30 ஆண்டுகள் கடந்துவிட்டன. சிறுபான்மையாக

முஸ்லிம்கள் வாழும் நாடுகளில் இக்கருத்தை காரிய சாத்தியமாக்குவது எவ்வாறு என்ற விவாதங்கள் நடந்து வருகின்றன. இலங்கை யின் கல்விக் கொள்கையின் அடிப்படையிலான பாடசாலை முறைமையில் முழுமையான மாற்றத்தைக் கொண்டு வருவது சாத்தியமற்ற தாயினும் முஸ்லிம் பாடசாலைகளில் தனித்துவ மானதொரு கலாச்சாரத்தைக் கட்டியெழுப்புவது சாத்தியமானது. இதை இலங்கையின் கல்விக் கொள்கையும் அங்கீகரிக்கின்றது. குறிப்பிட்ட மதத்தின் அடிப்படையில் பாடசாலையின் உள்ளகக் கலாசாரத்தை வடிவமைத்துக் கொள்ளும் உரிமை பாடசாலை முகாமைத்துவத்திற்கு உள்ளது. ஆயினும், துரதிஷ்டவசமாக தனித் துவமான முஸ்லிம் பாடசாலைகள் இத்தகைய தனித்துவக் கலாசாரமொன்றை உருவாக்கிக் கொள்ளவில்லை.

அறிவின் மூலாதாரம் இறைவன். இறைவனின் பெயரால்தான் அறிவு பெறப்பட வேண்டும். இஸ்லாத்தில் அறிவு உலகியல் ரீதியானது, ஆன்மீக ரீதியானது என்று வேறுபாடு இல்லை. மனிதனின் அறிவு இறைவனை நோக்கி இட்டுச் செல்ல வேண்டும். அறிவு அமானித மானது. மனிதன் பெறும் அறிவு ஆதார பூர்வமானதாகவும் முழுமையானதாகவும் இருத்தல் வேண்டும். ஊகங்கள், அனுமானங்கள் என்பவற்றை இஸ்லாமிய அறிவுக் கோட்பாடு ஏற்றுக்கொள்வதில்லை. அறிவின் இறுதி இலக்கு இறை பக்தி. இஸ்லாமிய அறிவுக் கோட்பாட்டின் கருத்துச் சாரமே இவை. இவற்றை பாடசாலை மாணவர்களின் உள்ளங்களில் பதிக்க முடியுமான ஒரு சூழலை உருவாக்கிக் கொள்வது எங்ஙனம் என்பதே முக்கியமானது.

முஸ்லிம் பாடசாலைகளை இக்கருத்துப் பின்னணியில் இஸ்லாமிய மயமாக்குவதற்கு நான்கு பகுதிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

1. பாடசாலையின் முகாமை
2. வகுப்பறைச் சூழல்
3. பாடத்திட்டம் அல்லது கலைத்திட்டம்
4. இணைப்பாட விதானம்

## பாடசாலை முகாமை

முகாமை என்பது இன்றைய அறிவுலகத்தின் அச்சாணியாகும். அதிபர்தான் பாடசாலை முகாமையின் தலைவர். பாடசாலையின் பல்வேறு கனவுகளையும் எதிர்பார்க்கைகளையும் அடைவது அதிபரின் கையிலேயே தங்கியுள்ளது. இவ்வகையில் முஸ்லிம் சமூகத்தின் மிகப் பாரியதொரு பொறுப்பை அதிபர்கள் ஏற்றிருக்கிறார்கள். அதிபருக்கு அடுத்ததாக ஆசிரியர்களும் பெற்றோர் சங்கமும் பழைய மாணவர் அமைப்பும் இந்த மகத்தான பொறுப்பை சுமந்திருக்கிறார்கள்.

சமூகம் இன்றி இஸ்லாம் இல்லை. தலைமைத் துவம் இன்றி சமூகம் இல்லை. கட்டுப்பாடின்றி தலைமைத்துவமில்லை என்பது இரண்டாம் கலீபா உமர் (ரழி) அவர்களின் கருத்து. பொதுவாக முஸ்லிம் பாடசாலைகளில் முகாமைத்துவ திறன் கொண்ட அதிபர்கள் இல்லாதிருப்பது ஒரு பெரும் குறை. இன்னொரு புறம் முகாமைத்துவ திறன் கொண்ட அதிபர்கள் இஸ்லாமியப் பண்பாட்டிற்கு வெளியே இயங்குவது அதைவிடப் பெரும் குறை. தலைமைத்துவப் பொறுப்பு எவ்வாறு ஓர் அமானிதமோ அவ்வாறே அதற்குக் கட்டுப்படுவதும் ஓர் அமானிதமாகும். அதேவேளை தலைமைத்துவம் ஜனநாயகபூர்வமானதாகவும் சினேகபூர்வமானதாகவும் இருக்க வேண்டும். இது இஸ்லாத்தின் எதிர்பார்ப்பாகும்.

எமது பாடசாலைகளில் மறைமுகமான எதேச்சதிகாரத்தை அதிபர்கள் கையில் எடுக் கிறார்கள். கட்டிறுக்கமான நிர்வாக ஒழுங்கினை (Strict Admin) முழுமையாகப் பின்பற்ற முனைவதால் ஆசிரியர்களுக்கும் அதிப ருக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்று கின்றன. சில அதிபர்கள் தமது சொந்த நலன் களை எட்டுவதற்கான களமாக பாடசாலையை கருதுகின்றனர். எப்போதும் இரண்டு வகை யான தலைவர்கள் உள்ளனர் என கூறப்படுவ துண்டு. ஒன்று ஆட்டு மந்தைகளை கவனமாக வழிநடத்துபவர். இரண்டாவது ஆட்டு ரோமத்தில் கண்ணாக இருப்பவர். முஸ்லிம் பாடசாலைகளில் இம்முதல் வகை முகாமை யாளராக அதிபர்கள் பணியாற்ற வேண்டி யுள்ளது.

திட்டமிடல் (Planing), அமைப்பாக்கம் செய்தல் (Organizing), தலைமை வகித்தல் (Leading), இணைப்பாக்கம் செய்தலும் கட்டுப் படுத்தலும் (Co-odinating and Controling) என்பவை அடிப்படையான முகாமைத்துவ திறன்களாகும். இவை மேலைத்தேய மனித வள ஆய்வாளர்களால் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட கோட்பாடு அல்ல. சீறாவின் ஒளியில் இதற்குரிய போதிய வழிகாட்டலை நாம் பெறலாம்.

மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் சென்ற நபி (ஸல்) அவர்கள் மதீனாவைச் சென்றடைந்து சிறிது காலத்தில் தனது தோழர்களிடம் விடுத்த வேண்டுகோள் "மதீனாவில் தற்போது இஸ்லாத்தை ஏற்றிருப்போரின் எண்ணிக்கையை கணிப்பீடு செய்யுங்கள்" என்று கட்டளையிட்டது தான். முஸ்லிம்களின் தொகை மதிப்பீடு எதிர்கால த.்.வாவை திட்டமிடுவதற்கு அவசியமானது என்று அவர்கள் கருதினார்கள். ஹிஜ்ரத்தின் ஒவ்வொரு நிகழ்வும் முகாமைத்துவத்தின் இந்த நான்கு அடிப்படைத் திறன்களையும் வெளிப்படுத்துவதைப் பார்க்கலாம்.

## வகுப்பறைச் சூழல்

முஸ்லிம்களுக்கு என்று ஒரு தனித்துவமான பண்பாடும் நாகரிகமும் உள்ளது. அது இஸ்லாத்தின் தூதரான நபி (ஸல்) அவர்களின் வாழ்வியல் விழுமியங்களிலிருந்து கடைந்து எடுக்கப்பட்ட முதுசங்கள். அவற்றை உள்ளிட்ட ஒரு கலாசாரத்தைத்தான் நமது பாடசாலைகள் வளர்க்க வேண்டும். சுத்தம் சுகம் தரும் என்ற பாரம்பரியக் கருத்தில் அர்த்தம் உள்ளது. ஆனால், சுத்தம் ஈமானில் பாதி என்ற ஆழ்ந்த அர்த்தத்திற்கு அது ஈடாகாது. நமது வாழ்வு - மரணம், வணக்கம் - வழிபாடு, மூச்சுப் பேச்சு அனைத்தையும் ஆழ ஊடுருவிப் படர்ந்துள்ள ஈமானிய விழுமியங்கள் பாடசாலைப் பண்பாட்டிலும் பிரதிபலிக்க வேண்டும். அப்போது மாத்திரமே முஸ்லிம் தனித்துவப் பாடசாலைகள் என்பதற்கு அர்த்தம் கிடைக்கும். ஏனெனில், அடையாளப் பிரக்ஞை என்பது ஒரு சமூகவியல் யதார்த்தம். பாடசாலை எனும் சமூக நிறுவனமே சமூகமயமாக்கலில் பெரும் பங்கை வகிக்கின்றது. ஆனால், வகுப்பறைகள் மதச் சார்பற்ற விழுமியங்களாலும் சடவாதக் கருத்துக்களாலும் ஆழப்படும்போது அடையாளப் பிரக்ஞை உருவாக வாய்ப்பில்லை. எதிர்காலத் தலைமுறையினரிடம் இஸ்லாமியப் பண்பாட்டை கையளிப்பதற்கான சாத்தியமும் இல்லை.

முஸ்லிம் பாடசாலைகளில் இன்று அந்நிய கலாசார மயமாதல் தமது உணர்வு நிலையிலேயே நிகழ்ந்து வருகிறது. Good Morning என்பதற்கும் அஸ்ஸலாமு அலைக்கும் என்பதற்கும் இடையில் கருத்து ரீதியிலும் கலாசார ரீதியிலும் பெருத்த வேறுபாடு உள்ளது. முழு உலகும் இன்று வேண்டி நிற்கும் அமைதியும் சமாதானமும் நமது கல்வி முறையிலிருந்தும் வகுப்பறையிலிருந்தும் தொடங்க வேண்டும். அதற்கு முஸ்லிம் ஆசிரியர்களும் மாணவர்களும் தமக்குள் கூறுகின்ற ஸலாம் ஒரு நல்ல தொடக்கம். இத்தகைய இஸ்லாமிய பண்பாடு முஸ்லிம் வகுப்பறைகளை ஆழ வேண்டும்.

மாணவர்களுக்கு நன்றி சொல்லும்போது ஜஸாகல்லாஹு ஹைரன் என்று ஆசிரியர் கூறும்போது அதிலுள்ள உளவியல் தாக்கம் பாரியது. எந்தப் பாட ஆசிரியராக இருந்தாலும் பாட போதனையைத் தொடங்கும்போது அவர் பிஸ்மில்லாஹ் சொல்ல வேண்டும். அனேக முஸ்லிம் ஆசிரியர்கள் இவற்றை வெறும் வார்த்தைகளாக மட்டும் கருதுகின்றார்கள். ஆனால் இஸ்லாமிய சமூகத்தின் பண்பாட்டுச் சாரமே இதற்குள் பொதிந்திருப்பதை அவர்கள் உணரத் தவறுகின்றனர்.

வகுப்பறைகளில் சுயகட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் பேணுவதற்கு ஆசிரியர்கள் வழிவகுக்க வேண்டும். ஆசிரியர்கள் தகவல் களைத் திணிக்கும் இயந்திரங்கள் என்ற நிலைக்கு அப்பால், மாணவர்களின் உயிரோட்டமுள்ள முன்மாதிரிகளாய் திகழ வேண்டும். நல்ல வார்த்தைகள், நல்ல நடத்தைகள் இவற்றில் ஆசிரியர்களே மாணவர்களுக்கு முன்மாதிரி. இன்று முஸ்லிம் மாணவர்கள் கிரிக்கட் வீரர்களையும், சினிமா நட்சத்திரங்களையுமே தமது மானசீகக் குருக்களாக ஏற்றுள்ளனர். அவர்களுக்கு மிகப் பெரும் இஸ்லாமிய நாகரிகத்தின், இஸ்லாமிய எழுச்சியின் கதாநாயகர் களை ஆசிரியர்கள்தான் அறிமுகம் செய்ய வேண்டும். நல்ல தரமான புத்தகங்களிலிருந்து ஆசிரியர்கள் அடிக்கடி மேற்கோள்களை முன் வைக்க வேண்டும். இது மாணவர்களின் வாசிப்பாற்றலை தூண்டுவதற்கு காலாக அமையும். முஸ்லிம் பாடசாலைகளில் உள்ள தொழுகை அறைகள் உயிர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாவற்றுக்கும் அப்பால் வகுப்பறைக் கற்பித்தலில் இஸ்லாமியக் கல்வி உளவியல் அடிப்படைகளை கவனத்தில் கொள்ள வேண்டும். இவை வகுப்பறைச் சூழலை இஸ்லாமியமயமாக்குவதற்கான சில எளிய உதாரணங்களாகும். இதன் மூலம் நல்ல ஆளுமைகளையும் நாளைய தலைமுறை களையும் உருவாக்கலாம்.

## கலைத் திட்டத்தை இஸ்லாமிய மயமாக்கல்

இலங்கையின் பொதுக் கலைத் திட்டம் அனைத்து மதங்களின் தனித்துவத்தையும் ஏற்று

வடிவமைக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, இனங்களுக்கிடையிலே கருத்து பேதங்களையும் உருவாக்கும் தன்மை கொண்டுள்ளது. இது அவ்வப்போது சுட்டிக்காட்டப்பட்டபோதும் கல்வித் திட்டங்களில் கவனத்தில் எடுக்கப் படவில்லை. தற்போது தேசியக் கல்வி ஆணைக் குழுவிலோ பாடவிதானக் குழுவிலோ போதியளவு முஸ்லிம்கள் உள்வாங்கப்படவுமில்லை. இதனால், தமிழ் இலக்கிய நூல் உட்பட வரலாறு, சமூகக் கல்வி பாடநூல்களிலும் முஸ்லிம் பரிமாணம் போதிய கவனயீர்ப்பைப் பெறவில்லை.

இப்பாடப் புத்தகங்களில் வழங்கப்பட்டுள்ள வியாக்கியானங்களும் வரலாற்றுத் திரிபுகளும் முஸ்லிம் பிரதிமையை சிதைக்கக் கூடியன. வரலாற்றுப் பாடநூல்கள் முஸ்லிம்களை வந்தேறு குடிகளாகவும் அடுத்தவர்களின் பொருளா தாரத்தைக் கொள்ளையடிக்க வந்த ஆக்கிரமிப் பாளர்களாகவுமே காட்ட முயல்கின்றன. சமூகக் கல்வி மற்றும் விஞ்ஞானப் பாடப் புத்தகங்கள் முன்வைக்கும் கருத்துகள் சில இஸ்லாத்தின் சமூகவியல் கோட்பாடுகளுக்கும் படைப்புலகக் கோட்பாட்டிற்கும் எதிரானதாக உள்ளது. அவற்றைத் திருத்தி கற்பிக்க வேண்டிய பொறுப்பு முஸ்லிம் ஆசிரியர்களுக்கு உள்ளது. உதாரணமாக 2007 புதிய பாடத் திட்டத்தில் வரலாறு தாம் 7 பாடப் புத்தகத்தில் இஸ்லாத்தின் ஆரம்பமும் பரவலும் எனும் அத்தியாயத்தில் முஹம்மது நபி என்பவர் 570இல் மக்காவில் அவதரித்தார் என்று எழுதப்பட்டுள்ளது.

இதில் உள்ள கருத்துப் பிழைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ள போதும் அவை திருத்திக் கொள்ளப்படவில்லை. இதுபோன்ற கருத்துத் தவறுகளை திருத்திக் கற்பிக்கும் அதேவேளை, புவியியல், பொருளாதாரம், விஞ்ஞானம் ஆகிய துறைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள கருத்துக் கள் இஸ்லாத்தின் கண்ணோட்டத்திற்கு புறம் பானதாக இருக்கும் பட்சத்தில் அவற்றைப் புரிந்து கொண்டு கற்பிக்கக் கூடிய வகையில் இஸ்லாமிய அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

## இணைப்பாடவிதானம்

மாணவரின் பலதரப்பட்ட ஆளுமையையும் தலைமைத்துவ பண்புகளையும் விருத்தி செய்வதில் பெருமளவு பங்கை பாடசாலை இணைப் பாடவிதான செயற்பாடுகள் வழங்கு கின்றன. இவை மாணவர்களது கூட்டுணர்வுக்கு செம்மை சேர்ப்பவையாகவும் உள்ளன. விளை யாட்டு வெற்றி தோல்விகளை ஏற்று, தலைமைத்துவ ஆளுமைப் பண்புகளை பல பரிமாணங்களில் விருத்தி செய்கின்றது. அத்துடன் உடல் ஆரோக்கியத்தையும் வழங்குகின்றது. சாரணீயம், சமூகத் தொண்டுகள், விஞ்ஞான மொழியியல் மன்றங்கள், கண்காட்சிகள், நூல் வெளியீடுகள், கல்விச் சுற்றுலாக்கள் என்பன திறன்களை விருத்தி செய்கின்றன. இவை எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மைகள் ஆகும்.

முஸ்லிம் பாடசாலைகள் - குறிப்பாக நகர்ப்புற பாடசாலைகள்- பாட விதான செயற்பாடுகளை விட இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு மிகையான முக்கியத்துவத்தினை அளிக்கின்றன.

பாடவிதான அடைவுகள் மிக மோசமாக பாதிக்கப்படும் அளவுக்கு இப்பாடசாலைகள் விளையாட்டுப் போட்டிகளையும் கலை இலக்கிய நிகழ்ச்சிகளையும் ஊக்குவிக்கின்றன. நிருவாகத் திலுள்ள மேட்டுக்குடியினர் திட்டமிட்டே இவற்றைச் செய்கின்றார்களா என எண்ணு மளவுக்கு இணைப்பாடவிதானமே பாடசாலை இயக்கமாக மாறியுள்ளது. இது மாற்றப்பட வேண்டும். இணைப் பாடவிதான செயற்பாடு களை முடிந்தளவு இஸ்லாமிய மயமாக்க வேண்டும் என்பதே இப்பத்தியில் வலியுறுத்தப் படும் கருத்து.

இன்று இணைப்பாடவிதான செயற்பாடு களை நடைமுறைப்படுத்தும் போது ஆண்-பெண் கலப்பு, ஆண்-பெண் தனிமை, ஷரீஆவின் வரையறைக்கு அப்பால் செல்லுதல், அடிப்படை யான ஹலால்-ஹராத்தை மீறுதல் போன்ற சிக்கல்கள் எழுகின்றன. ஆனால் இவை நிச்சயம் தவிர்க்கப்பட முடியுமானவை. பாடசாலை யின் முகாமை மதச் சார்பற்ற பின்னணி யில் இயங்கும்போது முஸ்லிம் பாடசாலை களின் சீர்குலைவிற்கு இணைப் பாடவிதான செயற்பாடுகளே காலாய் அமைந்துவிடும். கல்விச் சுற்றுலாவின்போது முஸ்லிம் மாணவர்கள் மதுபானம் அருந்தியதும் ஆசிரியர்-ஆசிரியை களுக்கு இடையில் தகாத உறவுகள் ஏற்பட்டதும் கடந்த காலங்களில் சுட்டிக் காட்டப்பட்ட நிகழ்வுகள்.

சில பிரபல்யப் பாடசாலைகளின் மாணவர்கள் உள்ளகச் சுற்றுக்காக போதைவஸ்தை விற்பனை செய்வதை வழக்காகக் கொண்டுள்ளனர். முஸ்லிம் பாடசாலை மாணவிகளிடையேயும் போதைவஸ்துப் பாவனை இருப்பது ஆய்வு

மூலம் கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்த்தின போட்டிகளின்போது இந்துக்கள் போன்று வேடம் அணிவதும், விழாக்கோலம் பூணுவதும் முஸ்லிம் பாடசாலைகளில் சர்வ சாதாரணமாகி விட்டது. எனவே, இணைப் பாடவிதான செயற்பாடுகளின்போது கண்டிப்பாக இஸ்லாமிய நெறிமுறைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இவற்றை இஸ்லாமிய நோக்கில் செயற்படுத்துவதற்கான வழிமுறைகளை இஸ்லாம் காட்டித் தந்துள்ளது எடுத்துக் காட்டாக ஒரு கல்விச் சுற்றுலாவின்போது சுற்றுலா பற்றிய இஸ்லாத்தின் கருத்துக்களை மாணவர்களுக்கு முன்வைக்கலாம். பிரயாணத்தின்போது ஓத வேண்டியது ஆக்களை நினைவுபடுத்தலாம். இதுபோன்ற விழுமியங்களை பாடசாலை முகாமையும் ஆசிரியர்களும் கருத்தில் எடுக்க வேண்டும். இணைப்பாட விதான செயற்பாடுகளின்போது இஸ்லாமிய கலாசாரத்திற்குப் பதிலாக ஏனைய சமூகங்களின் சமய கலாசார வடிவங்களை பிரதிசெய்வதும் உயிர்ப்பிப்பதும் கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும். இது இஸ்லாத்தின் உயர்ந்த எதிர்பார்ப்பாகும்.

## உசாத்துணைப் பட்டியல் (Reference List)


*Al-Attas, S.M.N. (1979) Aims and Objectives of Islamic Education. Jeddah: King Abdulaziz University.*

*Al-Faruqi, I.R. (1982) Islamization of Knowledge: General Principles and Work Plan. Washington, D.C.: International Institute of Islamic Thought.*

*Faruq, A. (2015) 'Cultural identity and Islamic schools: A case study of Sri Lanka', Journal of Muslim Minority Affairs, 35(1), pp. 88-102.*

*Gunasekara, S. (2018) The History of Muslim Education in Sri Lanka. Colombo: National Press.*

*Hussain, M. (2019) 'Value-based education in a secular world', International Journal of Educational Research, 12(3), pp. 215-230.*

*UNESCO (2016) Rethinking Education: Towards a Global Common Good? Paris: UNESCO Publishing.*

*Khan, A. (2021) 'Leadership in Islamic schools: Lessons from the life of the Prophet Muhammad (PBUH)', Journal of Islamic Management, 9(2), pp. 110-125.*

*Mintzberg, H. (2013) Simply Managing: What Managers Doa nd Can Do Better. San Francisco: Berrett-Koehler Publishers.*

*Ahmed, Z. (2022) 'Co-curricular activities and the development of Muslim youth identity', Journal of Youth Studies, 7(4), pp. 301-315.*

*Silva, R. (2017) Co-curricular Activities and Student Development in Sri Lankan Schools. Colombo: Educational Research Center.*


❍❍❍

## நிரந்தரமில்லா வாழ்க்கை

உடைந்து போன
உள்ளத்தை மீண்டும் மீண்டும்
உடைத்தெறிவதன் வலியை
அவர்கள் அறிந்திருக்க
வாய்ப்பேதுமில்லை

கஷ்டங்களை
தாங்கி தாங்கியே
கல்லாய்ப் போன
கனவுகளுக்கு
வர்ணங்களேதுமில்லை

பிரிவுகளை
மட்டுமே சுவாசித்திருக்கும்
மூச்சுக் காற்றும்
மூன்றாம் நபராகிப் போவதில்
அதிசயங்களேதுமில்லை
வலிகளை தாங்கி
புன்னகைத்தலுக்கும்
வலிகள் தாங்காது
கண் கலங்கிடுவதற்கும்
அவர்கள் அகராதியில்
நடிப்பென்றும்
விளக்கங்கள் இருப்பதை
யாரும் தெரிந்திருக்கவில்லை...

சில கஷ்டத்தின் தழும்புகள்
மறைய முன்னரே
பல கஷ்டங்களை
வரிசையில்
காத்திருக்க வைத்து விடுகிறது
வாழ்க்கை....

தீர்வுகளும்
முடிவுகளும்
மாயமாகிப்போக
துடுப்பில்லா படகு போல்
தடம் மாற வைத்து விடுகிறது
வாழ்க்கை....

துயரங்கள்
எதுவாயினும் அது
தொடர்ந்து விடுவதுமில்லை
சத்தியமாய் அது
முடிந்து போவதுமில்லை....

ஏதோ ஒரு நாளில்
சுற்றும் கடிகாரம் நிற்க
சுழலும் பூமியும் நிற்க
துடிக்கும் இதயமும் நிற்க
நிரந்தரமில்லா வாழ்க்கையும்
நிறைவு பெறும் !

– அன்பழகி, மன்னார்.



சிறுகதை

# பிசாசூடு



-கஸ்ஸாலி அஷ்ரஃப்-

இது ரஜப், அடுத்தது சஹ்பான், அதற்கடுத்தது ரமழான். ரமழான் வந்துவிட்டாலோ மற்ற வேலைகளுக்கு நேரமிருக்காது. அமல் இபாதத்களிலேயே நேரம் கழிந்துவிடும்.

திருமணத்துக்குப் பின்னர் இவ்வளவு காலமும் குடியிருந்தது மனைவிக்கு அவளது பெற்றோர் அன்பளிப்புச் செய்த வீட்டில். குமர்ப் பிள்ளைகளுக்கு உடுப்பு மாற்றவோ, கையைக் காலை நீட்டிப் படுத்துறங்கவோ வசதியில்லை. பிள்ளைகள் முன்வாசலில் தூங்கிக் கொண்டிருக்கும் சமயத்திலும் ஆட்கள் வந்து கதவைத் தட்டுவதுண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பாயைச் சுருட்டிக்கொண்டு ஓட வேண்டியதுதான்.

புது வீட்டுக்குக் குடிபுகுதலை ரமீஸ் துரிதப்படுத்தியது இவ்வாறான நடைமுறைச் சிக்கல்களினால்தான்.

நல்ல காரியங்களைத் தேய்பிறையில் தொடங்கக் கூடாதென்பது இந்தப் பகுதியில் ஊறிப்போன சமூக நம்பிக்கை. பள்ளிவாசல் ஹஸரத்துடன் கலந்தாலோசித்து வீடு குடிபுகுவதற்காக பிறை பத்தைத் தெரிவு செய்தார். மார்க்கத்தின்படியும் வெள்ளிக்கிழமை சிறப்பான நாள்தானே!

வீட்டு முற்றத்தில் பூத்துக் குலுங்கும் அழகிய மாமரமொன்று. வருவோரை வரவேற்பதுபோல் வாசலின் இரு மருங்கிலும் நீண்டு வளர்ந்திருக்கும் அடர்த்தியான "பாம்" மரங்கள். சுற்றி வரவுள்ள மதிலை அண்டியதாக கொய்யா, அம்பரெல்லா, ஜம்பு, நமணங் எனப் பழ மரங்கள். அவற்றினிடையே குரோட்டன், போகன்விலா மற்றும் பூஞ்செடிகள். வீட்டின் பின்புறமாக சுகந்தக் காற்றை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கும் வேப்ப மரம். அதனைச் சுற்றிவர பெண்கள் அமர்ந்திருந்து கதைப்பதற்கென்றே அமைக்கப்பட்டது போன்ற மரக் குற்றிகளிலான இருக்கைகள். கைகளால் பறிக்கக்கூடிய உயரத்தில் பச்சை நிறத்திலான இளநீர்க் குலைகளைக் காண்போருக்கு, வெட்டிப் பருக வேண்டுமென்ற உணர்வு வராமலிருந்தால் அபூர்வமே. "கிரீன் ஹவுஸ்" எனும் பெயர் வீட்டுக்கு மிகவும் பொருத்தமே!

வீட்டின் வெளிப்புறமாக கழிப்பறை மட்டுமே புதிதாகக் கட்டப்பட்டது. மற்றப்படி எல்லாமே அங்க சம்பூர்ணமாகக் காணப்பட்டது.

உயிர் நண்பன் பாஸில் வீட்டில் "தொதல்" செய்து அனுப்பியிருந்தான். அடுளுகம பெரியும்மா வீட்டிலிருந்து அந்த ஊருக்கே யுரித்தான அலுவா வந்திருந்தது. முறுக்கு வகைகள் மட்டுமே காசுக்கு வாங்கப்பட்டன. ஞானகதா, அம்பரெல்லா தோசி எனவும் தாராளமாக இருந்ததனால் வருவோரை உபசரிக்க வசதியாக இருக்கிறது.

"அடே! திண்டு முடிச்சாங்கொடா, ஊட்டுக்கு வார மனிஷருக்கு வெச்சோணும் ......" சுற்றிச்சுற்றி வந்து கண்டதையெல்லாம் கொறித்துக் கொண்டிருந்த குடும்பத்துப் பிள்ளைகள் மனைவியின் சத்தத்தைக் கேட்டு மெதுவாக நழுவி விட்டனர். பிள்ளைகள் அப்படித்தானே! நலவு பொல்லாப்பு என வந்துவிட்டால் நொறுக்குத் தீன்பண்டங்களில் அரைவாசியை அவர்களே காலிசெய்துவிடுவார்கள்.

நள்ளிரவை நெருங்கியும், பாற்சோறு, பிட்டு, இடியப்பம் இத்தியாதிகளோடு அவற்றுக்கான மற்றைய ஏற்பாடுகளிலும் குடும்பத்தவர்கள் மூழ்கிக்கிடந்தனர்.

விடிந்தால் கொஞ்சம் கொஞ்சமாக ஆட்கள் வந்து போவார்கள். நெருங்கிய உறவினர் களுக்காக பகல் சாப்பாட்டுக்கான ஏற்பாடுகளும் தடபுடலாக நடந்து கொண்டிருந்தன.

இத்தனை அமர்க்களத்துக்கு மத்தியிலும் கடந்த சில நாட்களைப் போலவே மனைவியின் புறுபுறுப்பு. "இதா, அது மெய்யோ பிசாசி திரீதாம், எனக்கெண்டா பயம் ........"

"பைத்தியமோ ஸரீனா? அப்பிடியொண்டு மில்ல. குர்ஆன் ஓதாத ஊடுகளுக்குதான் செய்த் தான் வாரது, அந்தூட்டில இப்ப நிச்சியவங்க அந்தி வெளனேக்கு குர்ஆன் ஓதியவங்க......" - இப்படிக் கூறி மனைவியைச் சமாளித்தாலும், ரமீஸுக்கும் உள்ளூர ஒரு பயம் இருக்கவே செய்தது.

●●●●●●

ரமீஸுக்கு வாப்பா வழியில் காணி யொன்றுள்ளது. நான்கு தலைக் குடும்பங்களுக்குச் சொந்தமான அது இன்னும் பிரிக்கப்படாமலே இருக்கிறது. சகோதரர்களுக்கிடையில் பங்கிட்டா லும் அவனுக்கு பதினைந்து பேச்சர்ஸ் வரும். நில அளவையாளரை வரவழைத்து சுமுகமாகப் பிரித்துக்கொள்ளப் பலமுறை முயற்சித்தும், பெரியப்பா, சாச்சா, மாமி குடும்பத்தவர்கள் ஒவ்வொரு காரணத்தைக் குறிப்பிட்டுக் குழிவெட்டியதனால் காரியம் கைகூடாமலே காலம் கடந்து கொண்டிருந்தது. அந்தக் காணியில் வீடு கட்டவும் ரமீஸுக்கு விருப்பமில்லை. "இவனுகட மொகத்திலேம் முழிச்சபடாது" - வாப்பா வழிக் குடும்பத்தவர்கள் கடந்த காலங்களில் செய்த தொந்தரவுகளை நினைத்தால் அந்தளவு வெறுப்புணர்வு.

ஒரு வாசல், ஓர் அறை, சிறியதாக ஒரு சமையலறை, பின்னால் வெளியிறங்க முடியாத வவ்வால் வீடு - இதுவே இதுவரை வசித்து வந்த மனைவியின் பெயரிலுள்ள இரண்டு பேச்சர்ஸ் அளவிலான வீடு. வீட்டுக்கு ஆண்கள் யாராவது வந்துவிட்டால் அவசியத் தேவை களுக்குக்கூட முன்வாசலுக்கு வரமுடியாமல் மனைவி பிள்ளைகள் படும்பாடு இருக்கிறதே, அதைச் சொல்ல வார்த்தைகளில்லை. அக்கம்பக்க உறவினர்கள் அடிக்கடி வருவதனால் பிள்ளை களின் படிப்பும் சுதந்திரமும் பாதிக்கப்படுவது இன்னொரு புறம். ஒட்டினாற்போல் இரண்டு பக்கமும் வீடுகள் என்பதனால், சிலப் போட்டு விஸ்தரித்தும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத நிலைமை.

மனைவியுடன் சேர்ந்து மாற்றுவழி பற்றி அடிக்கடி மசூறா பண்ணுவான் ரமீஸ். புரோக் கர்கள் மூலமாகவும் வீடுகள் பார்க்கப்பட்டன. வீடு நன்றாக இருக்கும் காணி ஒழுங்காக இருக்காது, காணி மனதுக்குப் பிடித்தால் வீடு வாய்க்காது, வீடும் காணியும் பொருத்தமாக இருக்கும் வீதி ஒடுங்கியதாகக் காணப்படும். இப்படி ஒருவழி சரியாகும்போது மறுவழி அடைக்கப்பட்டதே தவிர வீடு வாங்கும் கனவு கனவாகவே காணப்பட்டது.

இப்படியிருக்கையில்தான், ரமீஸுக்குரிய வாப்பா வழிக் காணிப் பங்கை ஆள் மாற்றி யெழுதி, மீதித் தொகையை ரொக்கமாகச் செலுத்தும் நிபந்தனையில் வீடொன்று அமைந்தது. நொத்தாரிசு மூலம் காணிக் கச்சேரியில் "பத்இரு" பார்த்ததன் பின்னர் டீட் எழுதவும் முடிவாகியது. நாளை எழுதுவதற்கென இருக்கையில் வீட்டுரிமையாளர் திடீரெனப் பின்வாங்கிவிட்டார். ரமீஸின் காணிப் பங்குக்கு உரிமையாளர்கள் நிறையப் பேர் எனவும், டீட் ஒழுங்காக இல்லையெனவும், இன்னும் என்னென்னவோ சொல்லியும் பெரியப்பா மகன் பாரிஸ் காதிலூதிக் குத்திவிட்டதனால் கடைசி நேரத்தில் கைநழுவிப் போனது. அத்தோடு, பாரிஸின் மனைவி, மதினி இருவரும் நேரடி யாகப் போய் பலதும் பத்தும் சொல்லி வீட்டுரிமையாளரின் மனைவியைக் குழப்பிப் போட்ட செய்தியும் பின்னர் தெரிய வந்தது.

ரமீஸின் வாப்பாவின் மூத்த சகோதரியாகிய மாமி வீட்டார் பரம்பரைக் காணியை முழுமையாக விழுங்கப் பார்ப்பவர்கள். வாப்பா உயிருடன் இருக்கும்போதே காணி விடயத்தில் கொளுவிக் கொண்டவர்கள். மாமியின் கணவன், கதை கட்டுவதிலும் கோள் மூட்டிப் பிரித்து வைப்பதிலும் கைதேர்ந்தவர். காணியைப் பிரிக்க முற்பட்ட போதெல்லாம் குறுக்காக நின்றவர். ஏற்கனவே அவரது மகளொருத்தி, காணியில் விசாலமான வீடொன்றைக் கட்டி மற்றவர்களுக்குச் சேரவேண்டிய காணிப் பங்கையும் மதில் போட்டு அடைத்து வைத்திருப்பதனால், அது பறிபோய்விடுமோ என்ற பயம் அவருக்கு. "ரமீஸுகளுக்கு இந்தமட்டு காணி வாரில்ல. எடுத்து மாட்டிகொள வேணம்" இப்படியெல்லாம்



**வீட்டுக்கு ஆண்கள் யாராவது வந்துவிட்டால் அவசியத் தேவை களுக்குக்கூட முன்வாசலுக்கு வரமுடியாமல் மனைவி பிள்ளைகள் படும்பாடு இருக்கிறதே, அதைச் சொல்ல வார்த்தைகளில்லை.**

கதை பரப்பி வீடு விஷயத்தில் ஆணி அடித்தவர்களில் முதன்மையான ஒருவர் அவர்.

எதிரியின் எதிரி நண்பன் என்பது போல, நீண்டகாலமாக பரஸ்பரம் போக்குவரத்து இல்லாமலிருந்த பெரியப்பா - மாமி இரண்டு குடும்பங்களும் இப்போது தேனும் பாலுமாக ஆகிவிட்டன.

இவர்களது முட்டுக்கட்டைகள் தொடர்ந்த நிலையில், கைக்கெட்டியது வாய்க்கெட்டாத சூழ்நிலையில் மனதுகள் உடைந்து போய்க் காணப்பட்டன. இப்படி இருக்கும்போதுதான் நீண்ட தேடுதலின் பின்னர் இந்த வீடு அமைந்தது. ஏற்கனவே குடியிருந்த வீட்டிலிருந்தும் நடந்து செல்லக்கூடிய தூரம். இருபத்து மூன்று பேச்சர்ஸ் காணியில் விசாலமான வீடு தனித் தனிக் குளியலறைகளைக்கொண்ட மூன்று அறைகள் இன்னொரு வீடு கட்டக்கூடிய இட வசதியும் தாராளமாகவே, மனைவி, மற்றும் பிள்ளைகளுடன் வந்து பார்த்தபோது மன துக்குப் பிடித்துப் போனது. பிள்ளைகள் ஓடியாடி விளையாடுவதற்குத் தாராளமாக இடமிருப் பதனால், முன்புபோல் அடுத்த வீட்டுக் காணியில் பந்து விழுந்து ஏச்சுக் கேட்கவும் தேவையில்லை.

ரமீஸின் வாப்பா வழிக் காணித்துண்டை ஆள் மாற்றியெழுதி, மீதியை ரொக்கமாகப் பெறும் யோசனைக்கு வீட்டுரிமையாளர் விருப்பப்படவில்லை. பாரிஸ் போன்றவர்கள் அவரிடமும் தூது சென்றிருக்கலாம். மனைவி யின் நகைகள், முச்சக்கர வண்டி ஆகியவற்றை விற்றுப் பெற்ற பணத்தோடு, மீதியை மூன்று மாதங்களில் செலுத்துவதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்படி உரிய காலத்துக்கு முன்னரே காணி உறுதியும் எழுதப்பட்டது. வார்த்தைகளில் விபரிக்க முடியாத மகிழ்ச்சி ரமீஸ் குடும்பத்தினருக்கு. அந்த வீட்டில் ஏற்கனவே வாடகைக்குக் குடியிருந்தவர்கள் ரமீஸின் நெருக்கடி நிலையைப் புரிந்துகொண்டு விரைவாகவே வெளியேறியும் விட்டனர்.

மூத்தவளுடன் சென்று புதுவீட்டுக்குத் தேவையான தட்டுமுட்டுச் சாமான்கள் சிலவற்றை மனைவி வாங்கி வந்தாள். கதவு ஜன்னல் களுக்கான திரைச் சீலைகளை ஓடர் கொடுத்துத் தைத்துக் கொண்டனர். மனைவியின் வாப்பா, வீட்டுத் தோட்டத்தைச் சீராக்குவதில் ஈடுபட்டு வந்தார்.

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தேர்தல் எவ்வாறு சூடு பிடிக்குமோ, அவ்வாறே வீட்டைப் பற்றியும் கதைகள் பரவத் தொடங்கின. “பிசாசூடு” என்ற கதை கொஞ்சம் கொஞ்சமாகப் புகைந்து எரியத் தொடங்கியது.

“மனுஷனொண்டு வேங்கியோ அந்தூட்ட, பிசாசூடு……”

“இதுக்கு முன்னுகும் ஒத்தரேம் நிம்மதியா இருச்சுடில்ல, ராவானா எந்தெந்தியோ சத்தமாம்… உருட்டியாம் பெரட்டியாம் …..”

இப்படியாகக் கதைகளைப் பரப்பி விட்டனர். ரமீஸின் மனைவியின் காதுகளில் அவை வந்து விழும்படியாக ஆட்களையும் நியமித்திருந்தனர். போதாக்குறைக்கு வெளிப் பெண்களும் அவளிடம் இது பற்றி விசாரிக்கத் தொடங்கினர். கடந்த ஒருமாத காலமாகக் குடும்பத்தில் நிலவிய

குதூகலம், நிம்மதி எல்லாமே தவிடுபொடியாகத் தொடங்கின.

எதற்கும் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக, கடைசியாகக் குடியிருந்தவர்களிடம் விசாரித்தபோது அனைத்தும் இட்டுக்கட்டப்பட்டவை என்பது தெளிவாகியது. இஸ்ரேல் காரர்கள்போல் எதிரிகள் கையாளும் இறுதி ஆயுதமே இதுவென்பது ரமீஸுக்குப் புரிந்தது. மனைவிக்கு எப்படிப் புரிய வைப்பதென்பதே பெரும் தலையிடியாக இருந்தது.

“எனக்கெண்டா வரேலா அந்தூட்டுக்கு பேய்பிசாசி நெறஞ்சாம் .....

“புள்ளகள தனிய வெச்சீட்டு எப்பிடீன் தேவயொண்டுக்கு வெளியெறங்கி போற?

“எங்கள ஊட்டில வெச்சீட்டு நீங்க பெய்த்திடும். நான்தான் இங்க படவேண்டிய பாடு......”

குடிபுகும் நாள் நெருங்க நெருங்க மனைவியைச் சமாளிப்பது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. உம்மாவுடன் சேர்ந்து பிள்ளைகளும் பயந்து போயிருந்தனர்.

“குடுத்த அட்வான்ஸ திருப்பி எடுக்கேலவோ...” - மனைவி சொல்வதுபோல் செய்வதாயின் ஒப்பந்தப்படி பத்து இலட்சம் ரூபாவை விட்டுக் கொடுக்க வேண்டும். அதைவிடவும் புதிதாக வீடு தேட முற்பட்டாலும் எத்தனை காலம் ஆகுமோ, எத்தனையெத்தனை தடங்கல்கள் வந்துவிடுமோ!

பத்து வருடங்களாக ஆட்கள் குடியிருக்கும் வீட்டுக்கு வராத பேய் பிசாசு இனிமேல் எப்படி வரும்? எல்லாமே வீடு வாங்குவதைத் தடை செய்யப் பரப்பப்பட்ட கதைகள் என்பதனால், அதுபற்றி ரமீஸ் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளவில்லை. உம்மாவையும் பெரிய தாத்தாவையும் கொஞ்ச நாள் துணைக்கு நிறுத்தினால் மனைவி சகஜ நிலைக்கு வந்துவிடுவாள். ரமீஸ் தீர்க்கமானதொரு முடிவுக்கு வந்துவிட்டான்.

●●●●●●

வீடு குடிபுகுந்து ஒருவருடமாகிறது. இந்த ஒருவருட காலத்துக்குள் எந்தப் பேய் பிசாசையும் காணவில்லை.

“ஜாதி ஊடொண்டு .....” எனச் சொல்லிக் கொண்டு பெரியப்பாவின் பிள்ளைகளும் நேற்று வந்து போனார்கள்.

“பிசாசில்ல ஸரீனா, இந்தூட்ட சுத்தி இருந்தது பொறாம பிசாசுக...” எனச் சொல்லியவாறு மனைவியைக் கிள்ளிவிட்டுச் சிரித்தான். அவளாலும் சிரிப்பை அடக்க முடியவில்லை. குர்ஆனைக் கையிலெடுத்து சூறதுல் பகறாவை ஓத ஆரம்பிக்கும்போதே கேட்டைத் திறந்துகொண்டு பெரியம்மாவும் பெரியப்பாவும் வருவது தெரிந்தது. “அன்ன பெரிய பிசாசுக வார” எனக் கணவனுக்கு மட்டும் கேட்கக்கூடியவாறு கூறிக கொண்டே வருவோரை வரவேற்க வாசலடிக்கு விரைந்தாள் ஸரீனா.

○○○

# நெய் விளக்கேற்றிடுவோம்!

வலிசுமந்து வாழ்வமைத்த பாதையல்லவா
வழிபார்த்துத் தேடுகின்ற வஞ்சியல்லவா
மொழிதேசம் சுமந்திட்ட இதயமல்லவா
முகவுரைகள் பதியமிட்ட முகங்களல்லவா
புலியாகச் சுழன்றிட்ட பாவையல்லவா
புயலாகப் பிறந்திட்ட பூவையல்லவா
புறநானூற்று வீரத்தின் சாட்சியல்லவா
புதுப்பரணி கண்ட புரட்சியல்லவா
விதையாகி வீழ்ந்திட்ட விருட்சமல்லவா
விடியல்தேடிப் புறப்பட்ட வேதமல்லவா
வலிகொண்ட வரலாற்றுப் பாடமல்லவா
வரிகளில் அடங்காத தியாகமல்லவா
ஒருமித்த கனவுகளின் இல்லங்களில்
ஒளியேற்றி நிற்கின்ற காலமல்லவா
ஒளிர்வாகிக் காத்திருக்கு கார்த்திகையும்
ஒன்றாகி ஏற்றிடுவோம் நெய்விளக்கு

**– கீத்தா பரமானந்தன்**



# சோழர்காலக் கல்வெட்டுக்களில் வெளிப்படும் பண்பாட்டம்சங்கள்

எ. கிறேஷா மிலானி
உதவி விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

பண்டைத் தமிழர் தம் வரலாறு, பழக்க வழக்கங்கள், பண்பாடு, நாகரீகம், வாழ்வியல் நெறிகள் ஆகியவற்றை அறிய தொல்லியல் ஆய்வு, நாணயம், சிற்பம், இலக்கியம் என்பன உதவுவது போல, கல்வெட்டுக்களும் பண்டைத் தமிழர்களுடைய வாழ்வியல் அம்சங்களை விளக்குவனவாக அமைகின்றன. இவை வாழ்வியல் நெறிகளை வழிநடத்திச் செல்லும் சட்டங்களாகவும் சான்றுகளாகவும் உள்ள தோடு வரலாற்றுப் பெட்டகங்களாகவும் கலை களின் கருவூலமாகவும் பண்பாட்டின் படையல் களாகவும் நாகரீகச் சின்னங்களாகவும் விளங்கு கின்றன. கிறிஸ்துவுக்கு முன் மூன்றாம் நூற்றாண் டில் இருந்து பாறைகளிலும் குகைளிலும் குறியீடுகளையும் எழுத்துகளையும் பொறிக்க நம் முன்னோர்கள் ஆர்வம் காட்டினார்கள். எழுத்துக்கள் மனித இனங்களை பிரதிபலிக்கும் படைப்பாகும். மொழிகள், நாடுகள், காலங்கள், இனங்கள் என மாற்றங்கள் பல இருப்பினும் உலகம் முழுவதும் முன்னோர்கள் தங்கள் எண்ணங் களை வெளிப்படுத்த குறியீடுகளையும், எழுத்து களையும் பயன்படுத்தினர்.

கல்லில் எழுத்துக்களை பொறிக்கும் பழக்கம் பழங்காலம் தொட்டுத் தமிழகத்தில் நிலவி வந்துள்ளது. கல்லில் கிறுக்கி வரையப்பட்ட எழுத்துக்கள் கல்லெழுத்துக்கள் எனப்பட்டது போல, கல்லில் வெட்டி வெட்டிப் பொறிக்கப் பட்டதால் கல்வெட்டு என்று அழைக்கப்பட்டது. இக்கல்வெட்டுகளில் கற்பனை, புனைந்துரை, கட்டுக்கதைகள், உணர்ச்சி நடை, வடிவமைப்பு போன்றவற்றிற்கு இடமில்லை. உள்ளதை உள்ளவாறு உணர்த்துகின்ற உண்மைக்கு மட்டுமே இதில் இடம் உண்டு. அந்த வகை யில் தமிழகத்தில் நடுகல் வழிபாட்டுடன் ஆரம்ப மான இக்கல்வெட்டு மரபினை சோழர் காலத் திலும் அவதானிக்க முடிகிறது. குறிப்பாக சங்க காலத்திலே நடுகல் அமைத்து வணங்கப்பட்ட செய்திகளை சங்க இலக்கிய நூலான புறநானூற்றிலே அறியமுடிகின்றது. இதனை,

**"ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி**
**ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து வீழ்ந்ததெனக்**
**கல்லே பரவிக் அல்லது**
**நெல் உகுத்து பரவும் கடவுளும் இலவே"**

(புறநானூறு பாடல்- 335) எனும் பாடலில் அறியலாம்.

> "சோழர் கால கல்வெட்டுகளை ராஜராஜ சோழனுக்கு முன்வந்த கல்வெட்டென்றும், இராஜராஜனுக்கு பின்வந்த கல்வெட்டுகள் என்றும் இரண்டு வகைப் படுத்துவர். ராஜராஜனுக்கு முன்னால் வந்த மன் னர்களுடைய கல்வெட்டுக்கள் பெரும்பாலும் சுருக்கமாகவும் பெரிய எழுத்துக்கள் கொண்ட தாகவும் காணப்படுகின்றன."

(ஸ்ரீதர்.,தி., கல்வெட்டியல், ப.79).

மன்னர் அடைந்த வெற்றியைத் தெளி வாகக் கூறும் மெய்கீர்த்தி எனும் பகுதி யில் அவற்றில் இடம்பெறாது. கல்வெட்டி னுடைய ஆரம்பத்தை நோக்குகின்ற பொழுது அதில் அரசனுடைய பெயர் குறிப்பிடப் படாமல் பெரும்பாலும் அவர்களுடைய பட்டப் பெயர்களே குறிப்பிடப்பட்டிருக்கும். உதாரணமாக ராஜகேசரி, பரகேசரி என்பவற்றை குறிப்பிட முடியும். இவ்வாறு தோற்றம் கண்ட சோழர் காலக் கல்வெட்டுகளில் அக்கால சமுதாயம் இவ்வாறு அமைந்திருந்தது என்பதையும் அவர் களுடைய பழக்க வழக்கங்கள் பண்பாடுகள்

என்பன எவ்வாறு காணப்பட்டன என்பதனையும் அறிய முடிகிறது.

அதனை விரிவாக நோக்கின், சோழர்கால கல்வெட்டுகளில் அக்காலச் சமுதாயத்தில் காணப் பட்ட கொடை வழங்கல் தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன. இந்த நாட்டிலே இன்ன ஊரிலுள்ள இன்னார் இன்ன அறம் என்றும் நடைபெறுவதற்கு இவ்வளவு நிலம், பொருட்கள் இன்னாரிடத்திலே அளித்தல் தொடர்பான செய்திகள் சோழர்கால கல்வெட்டுகளில் காண முடிகின்றது. இக்கொடைகள் நந்தா விளக்கு எரிக்கவும் பூசைக்காக மலர்மாலைகள் வழங்கு வதற்கும் திருப்பதிகம் ஓதுவதற்கும் திருவிழாவை நடாத்துவதற்கும் அரசர்கள், அதிகாரிகள், தனிப்பட்டவர்கள் போன்றோரால் அளிக்கப் பட்டமை தொடர்பான செய்திகள் காணப் படுகின்றன. ஆக, அரசர்கள் மட்டுமின்றி தனி நபர் களாலும் கோயில்களுக்கு கொடைகள் அளிக்கப் பட்டுள்ளன என்பதனை அறிய முடிகிறது.

**"ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ஸ்ரீ ராஜராஜ"ஸ்வரம் ஊடையார்க்கு ஸ்ரீ காரியமஞ் செ(ய்கி)ன்ற பெ(ா) ய்கை நாடு கிழவன்..."**

(சுந்தரேச வாண்டையார், வை, கல்வெட்டு, பக் 67)

எனத் தொடங்கும் முதலாம் ராஜேந்திர சோழன் கல்வெட்டிலே தஞ்சை இராச ராசேச் சரத்திலே எழுந்தருளிவித்த நம்பி ஆரூரனார்க்கும் திருஞானசம்பந்த அடிகளுக்கும் முதலாம் ராசேந்திர சோழன் தாராநிலை விளக்கு, வெண்கல மடல் போன்றவற்றைக் கொடையாகக் கொடுத்த செய்தி காணப்படுகின்றது. இதனைக் இக் கல்வெட்டின்,

**5– "............எழுந்தருளிவித்த நம்பியாரூர**
**6– நார்க்கும் திருஞான சம்பந்தடிகளுக்கும் திரு**
**7– நாவுக்கரைய தேவர்க்கும் உடையார் ஸ்ரீ(ரா)**
**8 – ....... ஜேந்திர சோழ தேவர்க்கு (யா)ண்டு மூன்ற(வது) வரை**
**9– குடுத்த தரா நிலை விளக்கு ஒன்று இரு(ப்பு) நாராசம் உட்பட நி**
**10– றை நாற்பத்தொரு....................**
**12– இரும்பு நாரசம் உட்பட நிறை...............**
**13– லமடல் ஒன்று நிறை நாற்பலம்"**

(சுந்தரேச வாண்டையார், கல்வெட்டு, பக்.67)

அறியலாம். மேலும் அக்காலச் சமுதாயத்தில் பெண்கள் அணியும் அணிகலன்கள் தொடர்பான செய்திகளும் கல்வெட்டுகளின் ஊடாக அறிய முடிகிறது. தஞ்சை பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்கள் முதலாம் ராஜ ராஜனால் கொடுக்கப்பட்ட கொடையினைக் குறிக்கின்றது. பொன்கொடு செய்த முத்து வளையல், பொன்கொடு செய்த ஸ்ரீமுடி, பொன்கொடு செய்த திருமாலை, திருப்பட்டியை போன்றன அளிக்கப் பட்டன என குறிப்பிடுவதன் மூலம் முத்து, வளையல், திருமாலை, என்ற செய்தியை அறிய முடிகிறது.

மேலும் "முதலாம் ராஜேந்திர சோழ தேவன்னுடைய கல்வெட்டானது தஞ்சாவூர் இராசராசேச்சரத்துக் கற்ப கிரகத்தின் வடபுரத்தினை சூழ்ந்துள்ள சுவரின் அடிப்பாகத்தில் அமையப் பெற்றுள்ளது."

(சுந்தரேச வாண்டையார், வை, கல்வெட்டு, பக்.70).

அதிலே முதலாம் ராஜேந்திர சோழ தேவரின் மூன்றாவது ஆண்டுக்கு கொடுக்கப்பட்ட அணிகலன்கள் தொடர்பான செய்தியினை அறிய முடிகிறது. திரள்மணிவடம், திருக்குதம்பைத் தகடுகள், உருத்திராட்ச காறை, திருவெண்காட்டு நங்கைக்குப் பட்டக்காறையில் கோத்த தாலி, பட்டைக்காறை, சூலம் போன்றவற்றைக் கொடுத்துள்ளதாகக் கல்வெட்டின் ஊடாக அறிய முடிகின்றது. இதனை,

**"3– ........இவன் குடுத்த திரள் மணிவடம் ஒன்று பொன்கால்.**
**சுருக்கின வீரபட்டம் ஒன்று...............பொன் எழு மஞ்சாடி...........திருக்கு(த)ம்பைத் தகடு இரண்டு**
**5–...................... இவர்க்கே குடுதத்தன திரள்மணிவ**
**6– டம் ஒன்று .................பட்டக்காறையில் கொடுத்த தாலி உட்பட...................**
**7–.............சுருக்கின வீர பட்டம் ஒன்று.......... திருக்கதம்பைத் தகடு இரண்டு.............(ப)ட்டைக் கா(றை)யும் சூலமும் பொன் மஞ்சாடியும்....."**

(சுந்தரேச வாண்டையார், கல்வெட்டு, பக்.69,70)

என்ற கல்வெட்டு வரிகளினூடாக அறியலாம். அத்துடன் அக்காலச் சமுதாயத்தில் பல்வேறு அளவை முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதனை அறிவதன் ஊடாக அக்காலத்தில் பொருளாதாரம் ஓரளவு வளர்ச்சி நிலையை அடைந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது. குறிப்பாக அக்கால மக்களால் பயன்படுத்தப்பட்ட அளவை முறைகளாக கழஞ்சு, கலம், பலம், குன்றி, நாழி, குறுணி, வேலி, உழக்கு முதலிய அளவை முறைகள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான செய்திகளைக் கல்வெட்டுகளின்

ஊடாக அறிய முடிவதுடன் "அக்காலத்தில் இவ்வளவை முறைகளுள் பலம் உயர்ந்த எடையாகக் கருதப்பட்டு வந்தமை புலப்படுத்தப்படுகின்றது." (சுந்தரேச வாண்டையார், கல்வெட்டு, பக்.68) இதனை முதலாம் ராஜேந் திர சோழன் கல்வெட்டிலே காண முடிகின்றது.

**"குடுத்த தரா நிலைவிளக்கு ஒன்று இரு(ப்பு) நாராசம் உட்பட நி –றை நாற்பத்தொரு பலவரை (க) ............."**

(சுந்தரேச வாண்டையார், கல்வெட்டு,பக்.68).

மேலும் முதலாம் ராஜராஜன் கல்வெட்டிலே, இராசராசன் கிணற்றிலிருந்து தொட்டிக்கு நீர் இறைப்பார்க்கு திங்கள் ஆறுக்கு முப்பது நெல் கலம் அளித்த செய்தி உண்டு. இதனை,

**" 7– ........தண்ணீராட்டுவார்க்கு நிசத(ம்) நெல்**
**ஐ (உங) ஆறு**
**திங்கள் நெல்லு (கள)ம் இப்பந்தலுக்கு........"**

(சுந்தரேச வாண்டையார், கல்வெட்டு,பக்.36).

அறியலாம். மேலும் சோழர்கால கல்வெட்டு களில் அக்கால சமுதாயத்தில் வரிகளைப் பற்றிய செய்திகளை அறிய முடிகிறது குறிப்பாக, இதனை முதலாம் இராசராசன் கல்வெட்டிலே,

**"9– ..........................இவன் பக்கல் இவ்வூர் ஸ**
**(ஸ)ப(யொம் இ) ஸ(ற**
**திர) விய(மும் (கிரய திர) விய(மு)ம் கொண்டு இறைஇழிச்சி"**

(சுந்தரேச வாண்டையார், கல்வெட்டு,பக்.36).

என்ற வரிகளிலே வரி இல்வாது நிலத்தை விற்றுக் கொடுத்து நடத்துவதாக இசைந்தமை தொடர்பான செய்தியுண்டு. எனவே அக் காலத்திலே வரிகள் காணப்பட்டமையை அறிய முடிகின்றது. மேலும் "அறவோலை செய்யப்படும் போது புரவுவரித் திணைக்களம், புரவுவரிக் கங்காணி ஆகியவர்களால் பார்வையிடப்படுகின்றது." (தாமோ தரன்., கு., கல்வெட்டியல், பக்.87). என்ற செய்தியின் மூலம் அக்காலத்திலே வரி நட வடிக்கைகளைக் கண்காணிக்க அரச அலு வலர்கள் இருந்துள்ளனர் முதலான செய்தி களையும் காணலாம்.

அதேபோல, சோழர்களுடைய ஆட்சியிலே அவர்கள் ஆட்சி செய்கின்றபோது நாட்டைப் பிரிவு களாக பிரித்து ஆட்சி செய்கின்ற முறையானது அக்காலத்தில் காணப்பட்டது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. குறிப்பாக, சோழருடைய கல்வெட்டுகளை நோக்குகின்றபொழுது, ஒர் ஊரைக் குறிப்பிடும்போது அது எந்த மண்டலம், எந்தக் கூற்றத்தைச் சார்ந்தது என்பது தெளிவாக விளக்கப்பட்டுள்ளதுடன் மண்டலம், கூற்றம், வளநாடு, நாடு, ஊர் என்று நாட்டுப் பிரிவுகளும் வகுக்கப்பட்டிருந்தன. இதற்கு உதாரணமாக,

"முதலாம் இராசராசனுடைய கல்வெட்டிலே காணப்படும் செய்தி தொடர்பாக நோக்குகின்ற பொழுது, இராசராச சோழனது பணிமகனும் நித்த வினோத வளநாட்டிலுள்ள ஆவூர் கூற்றது ஆவூரைத் தனக்குப் பிறப்பிடமாகக் கொண்ட வருமாகிய கண்ணன் ஆரூரன் தன்னரசன் பெயரால் செயங்கொண்ட சோழ மண்டலத்துக் காளியூர் கோட்டத்தில் தனியூர் உக்கலாகிய விக்கிரமபரணச் சதுர்வேதி மங்கலத்தின் மேலைப் பெருவழியில் ஒரு கிணற்றை அமைப்பித்து அதற்கு நிபந்தம் அளித்துள்ளான்."

என்ற செய்தி குறிப்பிடப்படுகின்றபொழுது அதில் சோழ நாட்டினுடைய பிரிவுகளான, கூற்றம், கோட்டம், மண்டலம் ஆகிய பிரிவுகள் இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளமை அறிய முடிகின்றது.

ஆக, ஒட்டுமொத்தமாக தொகுத்து நோக்கு கின்றபொழுது, தமிழர்களுடைய பண்பாட்டு வரலாற்றை அறிவதற்கு எவ்வாறு இலக்கி யங்கள், தொல்பொருள் அகழ்வாராட்சிகள், நாணயங்கள், கட்டிட சிதைவுகள் என்பன உதவு கின்றனவோ அதேபோல கல்வெட்டுகளின் ஊடாகவும் தமிழர் பண்பாடுகள், அவர்களுடைய வாழ்வியல் அம்சங்கள், பொருளாதார நடவடிக் கைகள், அக்கால சமூகத்தில் காணப்பட்ட பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் என்பவற்றை அறிந்து கொள்ள முடிகின்றது.

## உசாத்துணை நூற்பட்டியல்

### நூல்கள்

சுந்தரேச வாண்டையார், வை.,(1958), கல்வெட்டு.
சுந்தரேச வாண்டையார், வை.,(1949), கல்வெட்டு, பொதிகை பதிப்பகம் லிமிடெட்.
புலியூர்கேசிகர்., புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம்.
ஸ்ரீதர்,ஸ்ரீ.,(2004), தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.

### கட்டுரை

தாமோதரன், கு.,(1972), கல்வெட்டியல், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.

❍❍❍

# சொந்த மண்ணின் விதேசி !

காலம் இழுத்த இழுப்பில்
கடல் கடந்து போனேன்
இராஜ்ஜியத்தில் ஐக்கியமாகி
இருபது ஆண்டுகள் இமைக்க முன் ஓடின
சொந்த மண்ணில் விதேசியாய்
சொந்த மூச்சுக்காற்றே அந்நியமாய்
ஒரு மாத கால விருந்தாளியாய்
விஜயம் செய்கிறேன் என் தாய் மண்ணிற்கு

திரும்பிப் பார்க்கிறேன்
காலச் சக்கரத்தில் காணாமல் போனதையும்,
கிடைத்ததையும், விடுத்ததையும்
அலசிப் பார்க்கிறேன்.

தலைகோதி எழுப்பிவிடும்
அப்பா இங்கில்லை
அம்மா ஆசையாய் ஊட்டிவிடும்
ஒரு கவளமும் கிடைப்பதில்லை
உடன் பிறந்தவர்களுடனான
செல்லச் சண்டைகள் இங்கில்லை
சொந்தங்களின் நலவு நஷ்டங்களில்
நானிருந்ததில்லை
தாய் தந்தையரை பக்கமிருந்து
பராமரிக்கும் பாக்கியமும் எனக்கில்லை

'ஈத் முபராக்கு'கள் 'வாட்ஸ் ஆப்' உதவியின்றி
பரிமாறப்படுவதில்லை
அயலவர்களின் யதார்த்த சுகவிசாரிப்புகள்
என்ற நினைப்புக்கே இடமில்லை.
விடியல் தொழுகையின் பின்
சந்திக் கடையில் அப்பா வாங்கிவரும்
'டின்பால்' டீயும் இங்கு கிடைப்பதில்லை.
'கோல்ஃபேஸ்' இறால் வடையும் இல்லை.
அடுத்த வீட்டு 'சிட்டக்கா'வின்
பொரித்த மஞ்சக்காயும் இங்கில்லை.

'இல்லை' மட்டுமே இங்கில்லை
'உண்டு'களும் பல உள

கை நிறைய ஊதியமும் – அதற்கேற்ப
ஆள் விழுங்கும் வரிவிகிதமும் இங்குண்டு
இலவச கல்வியும், மருத்துவமும்
தரமாய் இங்குண்டு
' இங்கிலிஷ்' காரனுக்கு இம்மியளவும்
நாம் குறைச்சலில்லை என்ற
இறுமாப்பு எனக்குண்டு
உறவுகளின் உரசலின்றி
'நானே ராஜா, நானே மந்திரி'
என்ற தோரணையில் வாழ்க்கையுண்டு

மாற்றான் வயிற்று சகாக்களாய்
நண்பர் கூட்டம் எனக்குண்டு
யாவரையும் மரியாதையாய் நடத்திடும்
பாங்கு இங்குண்டு
சட்டம் ஒழுங்கைப் பேணிடும்
ஒழுக்கம் என்னை கவர்ந்ததுண்டு
கடின சூழல்களை தனியாளாய்
கடந்திடும் தன்னம்பிக்கையின்
உரம் இங்குண்டு.

'சக'வும் 'சய'வும்
சேர்ந்ததே கணித சமன்பாடு
நல்லதும் கெட்டதும்
சேர்ந்ததே வாழ்க்கை கோட்பாடு
இரண்டையும் சமப்படுத்தி
சாதித்து கொண்டிருக்கிறோம்.
ஆம் நாம் அனைவரும் சாதனையாளர்களே
படைத்தவனுக்கே புகழ் அனைத்தும்.

**ரிஸ்மியா நாகூர் கனி ஹாபி**
**லண்டன்**

இன்று சண்முகம் ஆசிரியராகவும் அதிப ராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்றவர். சண்முகம் மகாலக்ஸ்மியைக் காதலித்துக் கல்யாணம் செய்தவர். எந்தப் பாடசாலையில் கடமை ஆற்று கிறாரோ அந்தப் பாடசாலை அவருடைய தாகவே நினைந்து சேவை செய்தவர். ஆசிரியர் களையும் மாணவ மாணவியரையும் அன்பாக ஆதரித்து பல மலையகக் கிராமங்களிலும், வன்னி மாவட்டத்திலும் காடுகளை ஊர்மனைகளாக்கி பாடசாலைகளை அமைத்து கல்விச்சேவை செய்தவர். இரண்டு பிள்ளைகளையும் பெற்றவர்.. நாற்பது ஆண்டுகள் இன்ப துன்பங்களை அனுபவித்தவர். இளைய மகன் நிபுணத்துவ மருத்துவர். இப்போது மனையாளும் மறைந்து விட்டார். மூத்தமகன் சிறந்த ஓவிய ஆசிரியர். அவரும். மறைந்து விட்டார், சண்முகத்தார் திருகோணமலை உவர்மலையில் உள்ள தன் வீட்டில் தனிமையிலேயே வசிக்கிறார். முதுமையும் பிணியும் நண்பர்களாம். அவையும் துரத்தி வந்து சேர்ந்து கொண்டன. முதுமை சண்முகத் தாரையும் விட்டு வைக்கவில்லை.

கட்டிலில் படுத்தவாறே பழைய நினைவு களை மீட்டுப் பார்ப்பதில் ஒரு மகிழ்ச்சியும் அழுகையும் கலந்து வரும். கவலை இளமையில் இருந்து முதுமை வரையுள்ளதான நிகழ்வுகளை அசை போடுவார். அன்றைய நாள் நினைவுகளை மீண்டும் மீண்டும் நினைத்து நினைத்து நினைவிடை தோய்ந்து கிடப்பார். தனது மனைவி மகாலக்ஸ்மி எழுதிய கடிதங்கள் மூலம் பழைய நினைவுகளை மீட்டெடுத்து அனுபவிப்பார். படித்த கல்விக்கூடம், வழிகாட்டிய அன்றைய ஆசிரியர்கள், அதிபர்கள், அன்றைய ஆலங் கேணிப் பாடசாலையையும், தலைமை ஆசிரியர் கள், வந்துவந்து போவார்கள். சிவானந்த வித்தி யாலயத்தை, விடுதி வாழ்க்கையை நினைப்பார். அவருக்கு இளமை திரும்பியது.போலிருக்கும். பாடசாலை வாழ்க்கை மனதை மாற்றி அமைத்து விட்டதை உணர்ந்தார். எவ்வளவு மகிழ்ச்சி நிறைந்தது. - துள்ளித்திரிந்த அந்தக் காலம் எவ்வளவு மகிழ்ச்சியானது.

அன்று இருநேரப்பாடசாலை. பின்னேரம் நான்கு மணிக்கு பாடசாலை விடும். சீருடை மாற்றினால் ஆறுமணிவரை விளையாட்டுத் திடலில் பல்வேறு விளையாட்டுக்களை வியைாடு வார்கள். சுவாமி நடராஜானந்தவைக் கண்டால் தேசியவிளையாட்டுக்கு மாறுவார்கள். – சுவாமி நடராஜானந்தாவுக்கு கிளித்தட்டுத்தான் பிடிக்கும். அவரும் பிள்ளைகளைப்போல் களத்தில் இறங்கி விளையாடுவார்.

விளையாட்டுப் பொருட்கள் வைக்கும் அறைத் திறப்பு முருகேசனிடமே இருக்கும். கையெழுத் திட்டுப் பொருட்களை எடுக்கலாம். விளையாட்டு முடிந்ததும் பொருட்களை ஒப்படைத்துக் கையெழுத்திடவேண்டும். நேரம் கிடைக்கும் போது தங்கள் வழமையான விளையாட்டை விளையாடுவார்கள்.

மட்டக்களப்பில் 'சாண்டோ சங்கரதாஸ் சர்க்கஸ்' விளையாட்டுக் காட்டுவார். பல மாணவர்



களுக்கு பல்வேறு பயிற்சிகளைப் பழக்குவார். அதனை மாணவர்கள் பெரிய புதினமாகப் பார்ப்பர்கள். மரமுந்திரிக் கிளைகளில் தலை கீழாகத் தொங்குவார்கள். ஒரு கிளையில் இருந்து இன்னோர்கிளைக்குப் பாய்வார்கள். விடுதி வாழ்க்கை சந்தோசம்தான்

இரும்பு உருண்டை (put shot) எடுத்து புஜங்களில் மாற்றி மாற்றி தசைநார்களுக்கு வலுச் சேர்ப்பார்கள். ''டேய் முருகேசா இப்போது வயிற்றில் போடுவோம். சரியா''? அப்படிச் செய் வதில் அவ்வளவு ஆசை. முதலில் சண்முகன் தரையில் கிடந்தான்..

''டேய் சண்முகா!, கவனம் வயிற்றில் குண்டை போடப் போறன். 'வண், ரு, திறி.' கூறி விட்டு முருகேசன் மேசைமேல் நின்று சண்முகத்தின் வயிற்றில் பல்வேறு நிறையுள்ள குண்டுகளைப் போட்டான். குண்டு வயிற்றில் 'தொப்' என்று விழுந்து மேலெழுந்து உருண்டு கீழே விழுந்தது. சண்முகம் துள்ளி எழுந்தான். பின்னர் முருகேசன் தரையில் படுத்தான். சண்முகம் மேசையில் ஏறி குண்டைப்போட ஆயத்தமானான்.

''முருகேசா! கவனம். 'வயிற்றில்' அளவாகப் போடுகிறேன்.. இதோ பார் மூச்சை அடக்கிக் கொள் டேய்! இதோ போடுறேன்.'' சண்முகம் சரியாக முருகேசனின் வயிற்றில் குண்டைப் போட்டான். அது வயிற்றில் தொப்பென்று விழுந்து உருண்டு தரையில் உருண்டது. முருகேசன் எழுந்து வந்தான். ஆளையாள் கட்டிப் பிடித்து மகிழ்ந்தார்கள். மட்டக்களப்பு சாண்டோ சங்கரதாஸ் அவர்களால் பெருமை கொண்டது. அவர்களைப் பின்பற்றி பலர் செய்து பார்த்தனர். பலருக்குப் பயம். சண்முகம் தனது கைகளை மேலே உயர்த்திப் பார்த்தான். முறுக்கேறிய நரம்புகள், தசைநார்கள் மேருகேறி எதையும் சாதிக்கும் சக்தி கொண்டவையாக விளங்கின.

இரும்பு போன்ற தசை நார்கள் இப்போது சுருங்கிப்போயினவே சண்முகம் தனது கல்வியை முடித்தபின் வீட்டுக்கு வந்து விட்டான். தனது வீட்டுநிலைமையைக் கண்களால் கண்டான். தங்கள் தோட்டத்தில் தோட்டவேலைகளில் ஈடுபட்டான். வர்த்தமானியைப் பார்ப்பதும், பத்திரி கைகளைப் பார்த்து வேலை வாய்ப்புகளுக்கு விண்ணப்பங்களை அனுப்புவதாகவும் இருந்தான். ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் பரீட்சை விளம்பரத்தைக் கண்டு விண்ணப் பித்தான். பரீட்சையில் சித்தியடைந்து ஆசிரிய நியமனம் பெற்றான். ஆசிரியராகச் சிறந்த சேவை செய்தான். அதேவேளை மகாலக்ஸ்மி ஆசிரியராக நியமனம் பெற்று வந்தார். பாடசாலை புதுப்பொலிவு பெற்றது. மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கு தெரிவாகிச் சென்றான். ஆசிரிய பயிற்சியில் மகாலக்ஸ்மி நட்புக் கிடைத்தது. அந்த அன்பு காதலாகமாறியது. சண்முகத்தின் ஆச்சி இருவருக்கும் திருமணம் செய்துவைத்தார். சண்முகம். ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கு தனது மனைவியை பிரிந்து செல்லும்போது கண்ணீரால் கழுவினாள். போய்க் கடிதம் எழுதுவதாகவும் அவளை ஆற்றுப்படுத்திச் சென்றான். பிரிய மனமில்லாது சண்முகம் சென்றான்.

சண்முகத்தாருக்குத் தலையிடி என்றாலே துடிதுடித்துப் போகும் மகாலக்ஸ்மியின் மாற்றத்தைக் கண்டு சண்முகம் மலைத்துவிட்டார். அவர் பயிற்சிக் கல்லூரிக்குப் புறப்படும் போது மகாலக்ஸ்மி கண்கள் உடைப்பெடுத்த குளமா யிற்று. யாருக்கும் தெரியாதவாறு முந்தான யால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். அவரது கண்களும் கண்ணீர் முட்டியவாறு தோன்றின. ஒருவாறு பிரிந்தனர். சண்முகம் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்ற மூன்றாம் நாளே கடிதம் வந்தது. அப்படியே கையில் இருந்த நூலினுள் ஆறுதலாகப் படிக்க வைத்துக் கொண்டார். அவருடன் அறுபது ஆசிரியர்கள் வந்திருந்தனர். இரண்டாம் ஆண்டு பயிற்சி ஆசிரியர்கள் இருந்தனர். முழுமையாக நூற்று இருபது ஆசிரியர்கள் இருந்தனர். அறுபதுபேர் பெண்கள். அறுபது பேர் ஆண்கள். நூற்று இருபது பயிற்சியாளர் இருந்தனர்.

மகாலக்ஸ்மி கோணேசர் கோயிலுக்கு வெள்ளிக்கிழமைகளில் போவார். ஞாயிற்றுக் கிழமைகளில் குழந்தை ஜேசு கோயிலுக்கும் போவார். சண்முகமும் கூடப் போவார். இரண்டு ஆண்டுகள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு போக வேண்டும். இவ்வளவு காலமும் 'பிரியாத வரம் வேண்டும்' என்று கூறிய மலர் இன்று பயிற்சிக்குப் போவதற்கு ''அந்தப் பிரிதலுக்கு சம்மதம்'' என்று கூறியது அதிசயம்தான். ''இந்த உலகை விட்டுப் போகும் போது இருவரும் ஒன்றாகப் போய் விடவேண்டும்.'' அதிகாலையில்



தேநீர் குடிக்கும்போது மகாலக்ஸ்மின் வாயில் இருந்து வரும் "பிரியேன், பிரியேன் அப்படி விதி சதிசெய்தால் இருவரும் ஒன்றாகவே. இந்த உலகை விட்டுப் பிரியவேண்டும்.. நான் இறைவனிடம் கேட்பது இதுவே" என்பாள். அப்படிக் கூறியவள் அவரைத் தவிக்கவிட்டுச் சென்று விட்டாள். விதி வலிதல்லவா?

சண்முகத்தாரை யாரோ கூப்பிடும் சத்தம். கேட்டது. சடுதியாக கனவுலகில் இருந்து விடுபட்டு சத்தம் வந்த பக்கம் பார்த்தார். கீழே தொப் பென்று விழுந்தது போல் இருந்தது. குலேந்திரன் குரங்குப் படைகளைத் துரத்திக் கொண்டு வந்தார். அதே சாட்டில் சண்முகத்தாரையும் சந்திக்க வந்திருந்தார். கட்டிலைப் பிடித்து மெதுவாக எழுந்து 'வீல்செயரில்' இருந்தார். அவரைச் சுற்றி கோவைகள் நிரம்பிக் கிடந்தன.

அந்தக் கோவைகளின் வெளியில் பெயரிடப் பட்டிருந்தன. அதில் ஒன்று மகாலக்ஸ்மியின் கடிதங்கள் என எழுதப்பட்டிருந்தது.

"ஐயா! என்ன கடிதங்கள் அவை"?

"அவையா? எல்லாம் என் மனைவி மகாலக்ஸ்மி எனக்கு எழுதிய கடிதங்கள். நான் எங்கு சென்றாலும் பிரிய மனமில்லாது என்னை வழி அனுப்பி விட்டுத் தனது எண் ணங்களை கடிதங்களில் கொட்டி எழுதி விடுவாள். அந்தக் கடிதங்களை எறியாமல் சேர்த்து வைத்துள்ளேன். நான் அல்லது மனைவி எங்கள் அந்திம காலத்தில் படித்து இரசிக்கலாம் அல்லவா? அதுதான்."

சண்முகம் பதிலிறுத்தார். குலேந்திரனுக்குச் சில கடிதங்களைப் படித்துக் காட்டினார். குலேந்திரன் உறைந்து போனார்.. அவருக்கு ஒரு தவிப்பு. மகாலக்ஸ்மி எழுதிய கடிதங்களை எடுத்தார். 1957ல் வெள்ள அனர்த்தத்தால் திருகோணமலை - மட்டக்களப்பு கரையோரப் பாதை கடலலையால் சிதைவுற்று கடலுள் புகுந்து கொண்டது. அந்தக்காலத்தில் ஈஸ்ரேன் பேருந்து சேவை திருகோணமலைக்கும் - மட்டக்களப்புக்கு மான பேருந்து சேவை இல்லாது போய் விட்டது.. போக்குவரத்து கால் நடைதான். தொடருந்து திருகோணமலையில் இருந்து கல்லோயாவில் சந்திக்கு நள்ளிரவு வந்துவிடும். மறுநாள் அதிகாலை 4 அல்லது 5 மணிக்கு மட்டக்களப்பை நோக்கிப் புறப்படும்.

தான் பயணிக்கும்போது மனைவியை நெஞ்சில் இருத்திக் கொண்டு செல்வாராம்' மனக்கவலையோடு பயணிப்பாராம். சற்று உரையாடி விட்டு குலேந்திரன் சென்றுவிட்டார். மரத்தின் அருமை அது இல்லாத போதுதான் தெரியும்.

பயிற்சிக் கல்லூரியில் ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு பொறுப்பாளர் இருப்பார். இரண்டாம் ஆண்டு பயிற்சி ஆசிரியர்களே பொறுப்பாக இருப்பார்கள். ஒவ்வொரு திங்களும் தேநீர் இடைவேளையின்போது தபால்காரர் வருவார். தபாலை எதிர்பார்த்துக் கொண்டு இருப்பவர்கள் தபால் வழக்கமாக வைக்கும் சிறப்பாக அமைக்கப்பட்ட சட்டகத்தை பார்ப்பார்கள். கடிதம் இருந்தால் எடுத்துக் கொள்வார்கள். அன்றையக் கடமைகள் முடிந்து இரவு உணவின் பின் படிக்கும் 'ஸ்ரடி கோல்' அறையில் கடிதம் வாசித்து ரசித்து பதில் எழுதுவார்கள். சண்முகம் கல்லூரிக்கு வந்ததும் மகாலக்ஸ்மி மலர் கடிதம் எழுதித் தபால் பெட்டியில் சேர்த்து விட்டார். அன்று நவீன தகவல் தொழில் நுட்பக் கருவிகள் கிடையாது. அன்றில் இருந்து இரண்டு வருடப் பயிற்சிக் காலத்தில் எழுதியகடிதங்களை கோவைப்படுத்தி வைத்திருந்தார்.

வீல்செயரில் இருந்து கொண்டும் கட்டிலில் படுத்துக் கொண்டும் மனைவி எழுதிய கடிதங் களை வாசிப்பார். மலர் சண்முகத்தைத் தனியே தவிக்கவிட்டு பிரிந்துவிட்டார். இன்று தனியே தவிக்கிறார் மனைவி எழுதிய கடிதங்கள்தான் துணை. அவர் மட்டுநகரில் ஆசிரிய பயிற்சி பெறும்போது மனைவி எழுதிய கடிதம்

கையில் சிக்கியது. வாசித்தார். கண்ணீரோடை அணிந்திருந்த 'மேலங்கியை நனைத்து விட்டது.

"எனது அன்புக் கணவருக்கு! உங்களையே நினைத்துத் தவித்துக் கிடக்கும் உயிர் எழுதும் மடல்." எனத்தொடங்குவாள். "எப்படி இப்படித் தமிழ் எழுதக் கற்றுக்கொண்டாள்." அந்த வரி சண்முகத்தாரை உலுக்கிவிட்டது. அவளின் அன்பு வாழ்க்கை இறுக்கமானது. பாடசாலைக்கு விடுமுறை நாட்களிலும் கற்பித்தலும் பாடசாலையிலும் கோயில்களிலும் சிரமதானப்பணிகளிலும் துப்பரவு நடக்கும். இவற்றைப் பார்க்கும் நல்ல உள்ளம் கொண்டோர் தேநீர் கொடுத்து உபசரிப்பார்கள்.

அது மாணவர்களை உற்சாகப்படுத்தும். சண்முகத்தாரின் வீட்டு முற்றத்தில் வெயிலை வடித்து நிழல் பரப்பி குளிர்ச்சியைக் கொடுத்து பெரிய வேம்பு நின்றது. அந்த நிழலில் சாய்மனை கட்டிலில் பத்திரிகைகளைப் படிப்பார். அன்று சனிக்கிழமை தபால்காரர் நாகேந்திரம் களைத்து வெயர்த்து கிரேவல் பரவிய மணல் பரந்த தெருவால் வந்தார்." வாங்க நாகேந்திரம் இருங்க. சண்முகம்தான் பாடசாலையின் அதிபர். பாடசாலைக் கடிதங்களைக் கட்டாக கொடுத்தார். மத்திய கல்வி அமைச்சில் இருந்து வந்த கடிதங்கள் அனைத்தும் தனிச்சிங்களத்தில் எழுதப்பட்டவை. நான்கு பக்கக் கடிதம் ஒன்று. எனக்கு ஒன்று மற்றது பாடசாலை அதிபருக்கானது. எனக்குரிய கடிதத்தை பிரித்து நான் எழுத்துக் கூட்டி வாசிக்க, நாகேந்திரம் தனக்கு தெரிந்த மட்டில் மொழிமாற்றம் செய்து புரிந்து கொண்டோம். "இலங்கை கல்வி நிர்வாக சேவை பணிப்பாளருக்கான நியமனக் கடிதம்".. மகாலக்ஸ்மிக்கு இருப்புக் கொள்ளவில்லை. இரண்டு பசும்பால் தேநீர் தயாரித்துப் பரிமாறினாள். நமது பாடசாலைக்கு நல்லதொரு அதிபர் வேண்டுமே.

"அவர் நல்லதொரு அதிபரை அனுப்புவார். நானும் இங்குதானே கற்பிக்கிறேன். பாடசாலையில் அக்கறை கொண்ட நீங்களும் இருப்பதால் நல்லதே நடக்கும். தேநீர் குடித்ததும். தபால்காரர் சென்று விட்டார். அவரின் காக்கிச் சீருடையும் மெல்ல மெல்ல மறைந்து விட்டது. அது ஒரு காலம் இன்று கிராமங்களிலும் காண முடியாது. இன்னும் சில காலங்களால் தபால் காரர்களையும், தபால் தலைகளையும் காண முடியாது.

○○○

# வீடுதோறும் விதைப்போம் !

– முனைவர் கு. சிதம்பரம், சென்னை

எல்லை தாண்டி
கடல் தாண்டி
கண்டம் தாண்டி
விதைப்போம்!

ஆசியக் கண்டத்தில்
ஆப்பிரிக்கக் கண்டத்தில்
ஐரோப்பியக் கண்டத்தில்
வட அமெரிக்கக் கண்டத்தில்
தென் அமெரிக்கக் கண்டத்தில்
ஆஸ்திரேலியக் கண்டத்தில்
அண்டார்டிகா கண்டத்திலென
அனைத்துக் கண்டத்திலும்
விதைப்போம்!

உலக மானுட
மாண்பை வளர்க்கும்
பண்பாட்டை வளர்க்கும்
அறத்தை வளர்க்கும்
செவ்விலக்கியத்தைத்
தன்னகத்தே கொண்ட
விதையினை விதைப்போம்!

மானம் காத்த
நீதி வழுவாத
குறிஞ்சி, முல்லை
மருதம், நெய்தல்
நிலத்தில் விளைந்த
ஞானத்தால் செழித்த
காலத்தால் அழியாத
விதையினை விதைப்போம் !

முதுமைக்கு முதுமையாய்
இளமைக்கு இளமையாய்
விளங்கும் – முத்தமிழாம்
பொங்கு தமிழைக்
கடல் கடந்தும்
வீடு தோறும்
விதைப்போம்!

# செம்மொழியாம் எம் மொழியில் எம்மொழிக் கலப்பும் வேண்டாம்!



கலைமாமணி
கா. தவபாலன்

மூன்றாம் தமிழ்ச் சங்க காலத்துக்குப் பிற்பட்ட காலங்களில் எமது சமூக, அரசியல், பொருளாதார சுதந்திரம் பல்வேறு அந்நிய சக்திகளால் பறிக்கப்பட்டது. தமிழ் மொழி, சைவ சமயம், தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றின் மீது பாரிய சேதங்கள் ஏற்படுத்தப்பட்டன. தமிழகத்தில் களப்பிரர் ஆட்சி நடைபெற்ற காலத்தில் தமிழ் ஏறக்குறைய அழிக்கப்பட்டு வடமொழி தமிழர் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டது. சேர நாட்டில் ஏற்பட்ட வட மொழி ஊடுருவல் காரணமாக தமிழ் மொழி பூரணமாக அழிந்து மலையாளம் தோன்றியது. தெலுங்கு, கர்நாடகம் ஆகிய மொழிகளிலும் வட மொழி அதிகளவு ஊடுருவி விட்டது. இலங்கையை ஐரோப்பியர் ஆண்ட காலத்தில் அவர்களின் மொழிகளைச் சார்ந்த அதிகமான சொற்கள் தமிழுடன் கலந்து விட்டன.

இவ்வகையில் தமிழுடன் கலந்துள்ள வேறு மொழிச் சொற்களைப் பட்டியலிடும் ஆரம்ப முயற்சியாக ஒரு சில விபரங்களை இக்கட்டுரையில் முன்வைக்க விரும்புகிறேன். ஜாஸ்தி, கம்மி ஆகிய ஹிந்தி மொழிச் சொற்களை ஒரு சிலர் தமிழ்க்கட்டுரைகளில் அடிக்கடி கலந்து பாவிப்பதை நான் அவதானித்துள்ளேன். எனவே ஜாஸ்தி என்ற சொல்லுக்குப் பதிலாக அதிகம் என்ற சொல்லையும் கம்மி என்ற சொல்லுக்குப் பதிலாக குறைவு என்ற சொல்லையும் பாவிக்கலாம் என்பது என் ஆலோசனை ஆகும். அலவாங்கு, சப்பாத்து என்பன போத்துக்கேசிய மொழிச் சொற்களாகும். இச்சொற்களுக்குப் பதிலாக முறையே கடப்பாரை, காலணி ஆகிய சொற்களைப் பாவிக்கலாம். யுத்தம் என்பது வட மொழிச் சொல். இதற்குரிய தமிழ்ச் சொல் போர் என்பதாகும். போர் ஒழிந்தது போல யுத்தம் என்ற சொல்லையும் அழித்து விடுவோம். ஆனால் யுத்தய என்ற சொல் சிங்கள மொழியில் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் என்பதையும் மறுப்பதற்கில்லை. தமிழுடன் இரண்டறக்கலந்து விட்ட பஸ், ட்ரெயின், லொரி, சைக்கிள் போன்ற ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்கள் முறையே பேருந்து, தொடரூந்து, பார ஊர்தி, ஈருருளி என்பனவாகும். ஆபீஸ் என்ற சொல்லுக்கான தமிழ்ச் சொல் அலுவலகம் என்பதாகும். டெலிபோன் என்றால் தொலைபேசி. ரோட் என்றால் தெரு. சிங்களத்தில் அஹஸ என்பதைத் தமிழில் ஆகாசம் என்கிறார்கள். ஆனால் இதனை வானம் என்று அழகு தமிழில் குறிப்பிடலாம் என்பது எனது வாதம். தமிழில் பெட்டி, குளம் ஆகிய சொற்களை சிங்களத்தில் முறையே பெட்டிய, குளம என்று குறிப்பிடுகிறார்கள். இச் சொற்கள் தமிழிலிருந்தே சிங்களத்துக்குச் சென்றன என்பது எனது வாதம். தமிழ் முறையின் படி உறவினர்களை மாமா, மாமி, சித்தப்பா, சித்தி, பெரியப்பா, பெரியம்மா என்று தமிழில்

**ஜாஸ்தி, கம்மி ஆகிய ஹிந்தி மொழிச் சொற்களை ஒரு சிலர் தமிழ்க்கட்டுரைகளில் அடிக்கடி கலந்து பாவிப்பதை நான் அவதானித்துள்ளேன். எனவே ஜாஸ்தி என்ற சொல்லுக்குப் பதிலாக அதிகம் என்ற சொல்லையும் கம்மி என்ற சொல்லுக்குப் பதிலாக குறைவு என்ற சொல்லையும் பாவிக்கலாம் என்பது என் ஆலோசனை.**

முறை சொல்லி அழைப்பதே நல்லது. ஆனால் எல்லோரையும் ஒட்டு மொத்தமாக அங்கிள், அன்ட்டி என்று அழைப்பது சரியல்ல. மேலும் நீதி மன்றங்களில் வழக்குப் பேசும் சட்டத்தரணிகளை அப்புக்காத்து, பிரக்கிரசி லோயர் போன்ற வேற்று மொழிச் சொற்களால் அழைப்பது தவறு. சட்டதரணிதான் சரியான தமிழ்ச் சொல். சந்திர, சூர்ய என்பவை வட மொழிச் சொற்கள். இவற்றுக்கு மாற்றான தமிழ்ச் சொற்கள் முறையே நிலா, பகலவன் ஆகியவை இவற்றுக்கு மாற்றான அழகான தமிழ்ச் சொற்கள். பார்மசி, கரண்ட் ஆகிய ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ் வடிவம் முறையே மருந்தகம், மின்சாரம் ஆகியவை. நகர என்ற வட மொழிச் சொல்லுக்கான தமிழ் பட்டணம் என்பதாகும். காங்கேசன்துறையை வெள்ளைகாரர் தமது வசதிக்காக K. K. S என்று மாற்றி விட்டார்கள். பருத்தித்துறையை Point Pedro என்று மாற்றிவிட்டார்கள். இவற்றை மாற்றி பழைய தமிழ்ப் பேரிலேயே அழைப்பது அவசியமாகும். பொலீஸ் ஆபீசரை காவல் துறை உத்தியோகத்தர் என்று அழைக்கலாம். தமிழர் (மலையயகத் தமிழர் சிலரும், முஸ் லிம்கள் சிலரும்) சிலர் புட்டுவம் என்ற சொல்லைப் பாவிக்கிறார்கள். "புட்டுவ" என்ற சிங்களச் சொல் புட்டுவம் என்று மருவியுள்ளது. இதற்கு சரியான தமிழ்ச் சொல் கதிரை அல்லது நாற்காலி என்பதாகும். ஜலம் என்ற சொல் ஜலய என்பதிலிருந்து மருவியுள்ளது. இச் சொல்லுக்கு தண்ணீர் என்பதே தமிழ்ச் சொல் ஆகும். இதற்கு எதிர்சொல் வெந்நீர் ஆகும். சிங்களத்தில் பாட்ட சாலாவ என்பதைத் தமிழில் பாடசாலை அல்லது பள்ளிக்கூடம் என்று அழைக்கிறார்கள். ஸ்னேகம், ஸ்நானம் ஆகிய வட மொழிச் சொற்களைத் தமிழில் பாவிக்கிறார்கள். இச் சொற்களைத் தவிர்த்து நட்பு, குளித்தல், முழுகுதல் என்ற தமிழ்ச் சொற் களைப் பாவித்தால் தமிழன்னை குற்றால அருவியிலே குளித்தது போல மகிழ்ச்சி அடைவாள்!

இலங்கையின் மலையகத் தோட்டங்களில் தொழிலாளர்கள் வசிக்கும் இடம் லயன் காம்பரா என அழைக்கப்படுகிறது. காம்பரா என்பது காமரய என்ற சிங்களச் சொல்லில் இருந்து உருவான சொற்பிரயோகம். சரியான தமிழ் அறை என்பதாகும். ச. தொ. ச என்பது சமுப்பக்கார

**ஸ்னேகம், ஸ்நானம் ஆகிய வடமொழிச் சொற்களைத் தமிழில் பாவிக்கிறார்கள். இச்சொற்களைத் தவிர்த்து நட்பு, குளித்தல், முழுகுதல் என்ற தமிழ்ச் சொற்களைப் பாவித்தால் தமிழன்னை குற்றால அருவியிலே குளித்தது போல மகிழ்ச்சி அடைவாள்!**

தொக வெலெந்த சங்ஸ்தாவ என்ற சிங்கள சொற் தொடரின் சுருக்கமாகும். தமிழிலும் ச. தொ. ச என்றுதான் கூறுவர். கூட்டுறவு மொத்த விற்பனை என்று அழைப்பதுதான் பொருத்தமாகும். தமிழர்களாகிய நாம் தமிழ் அழியாமல் இருக்க என்ன செய்யலாம் என்று சிந்தித்து செயல்பட வேண்டும். எழுத்தாளர்கள் சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை போன்ற ஆக்கங்களை எழுதும்போது வேற்று மொழிச் சொற்களைப் பாவிக்காமல் தவிர்த்து விடலாம். சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் ஆக்கங்களில் திருத்தங்கள் செய்யும்போது வேற்று மொழிச் சொற்களை இனங்கண்டு அகற்றி விடலாம். எழுத்தாளர் அமைப்புகளும் இலக்கிய மன்றங்களும் வாசகர் வட்டங்களும் வேற்று மொழி சொற்களை அகற்றும் பிரசாரத்தை மேற்கொள்ளலாம். இனத்துவ அரசியல்வாதிகளும் சமூகத்திலுள்ள புத்திஜீவிகளும், தமிழ் நலன் விரும்பிகளும் இது பற்றிக் குரல் எழுப்ப முடியும். தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரி யர்கள் ஆகியோரும் வேற்று மொழிச் சொற்களை தமிழில் இருந்து அகற்றும் திட்டத்துக்கு முதுகெலும்பாக செயற்பட்டு கல்விச் சமூகத்தை வழி நடத்தலாம் என்பதும் எனது ஆலோசனை ஆகும்

ஒருவர் பல மொழிகளைப் படிப்பது என்பது வேறு. பிற மொழிச் சொற்களை தமிழில் கலப்பது என்பது வேறு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். பல மொழிகளைப் படிப்பதை நாம் எதிர்க்கவில்லை. வாழ்க தமிழர், வளர்க தமிழின் புகழ்!



சிறுகதை

# மண(ன)முறிவு

ந. பார்த்தீபன்
(வவுனியா)

**சோ**மாஸ்கந்தர் வீட்டுக்கு வந்திருந்தார். தானுண்டு தன் வேலையுண்டு என்று மிகவும் அமைதியாக இருப்பவர். மற்றவர் பத்துக் கதை கதைத்தால் ஒரு சிரிப்போடு ஒரு கதை கதைப்பார்.அதுவும் நிதானமாக... அதனால்தான் அவரை எல்லோருக்கும் பிடிக்கும்.

எப்பவாவது என் வீட்டுக்கு வந்து மிகச் சீரியஸான விடயம் ஒன்றைக் கதைத்துவிட்டு செல்வார். இன்றும் வந்திருக்கிறார். என்ன விடயமாக இருக்கும்...?

“வாங்கோ வாங்கோ சோமாஸ்...” என்று மலர்ந்த முகத்துடன் அவரை வரவேற்கிறேன்.

மௌனமாக வந்து ஹோலில் உள்ள கதிரையில் அமர நான் அவருக்கு முன் இருந்த கதிரையில் அமர்கிறேன்.

என் குரல் கேட்டு வந்த மனைவி “வாங்கோ அண்ணை வாங்கோ... ரீ போட்டுக் கொண்டு வரவோ...? என்று கேட்க... “வேண்டாம்” என்கிறார்.

இப்பதான் குடித்திட்டு வந்தனான், இந்தக் காலம் அடிக்கடி ரீ, பிளேன்ரி குடிக்கக்கூடாது, தேவையில்லாத வருத்தங்களை வாங்கக் கூடாது போன்ற பதிலெல்லாம் சோமாஸ் கூற மாட்டார்.

அவரோடு கதைக்கும்போது கொஞ்சம் அவதானமாகத்தான் கதைக்க வேண்டும் என நான் நினைக்கிறேன்.

அவராகவே சொல்லட்டும் என நான் மௌன மாக இருக்க... நீண்டுகொண்டே போகிறது.

சோமாஸ்கந்தரின் முகத்தில் மறைக்க முடியாத சோகம் தெரிகிறது. ஒருநாளும் இல்லாதது போல... நெருடலுடன் அவர் இருப்பது புரிகிறது.

நான் அவரையே பார்த்துக் கொண்டிருப் பதைப் பார்த்து

தலையைக் கவிழ்த்து... கலங்கிய கண்களுடன் என்னைப் பார்க்கிறார்.

அவராகவே சொல்லட்டும் என நானும்...

“தம்பி என்னுடைய மகனின் வாழ்க்கை... இன்று பெரும் சிக்கலுக்குள் வந்துவிட்டது...”

“ஏன்... என்ன நடந்தது...? கிட்டடியிலதானே திருமணம் நடந்தது. நல்லாத்தானே இருந்தவன்...”

“அவள் செய்யிற வேலையை உடனையே விட்டுவிடச் சொல்லி நிக்கிறாளாம்...”

சோமாஸ்கந்தர் மகன் ஏ.எல் படித்து விட்டு வேலைக்கு முயற்சி பண்ணிய போதும் உடனடியாக எந்த வேலையும் கிடைக்காததால் தந்தையாருடன் சேர்ந்து தச்சு வேலையைச் செய்து இப்போது ஓரளவு தேர்ச்சிபெற்று கைநிறைந்த வருமானத்துக்கும் மகிழ்ச்சிக்கும் குறைவில்லாமல் வாழ்ந்து வந்தவன்.

அவன் விரும்பிய பிள்ளையும் தூரத்து உறவாக இருந்ததோடு இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பியும் இருந்ததால் சோமாஸ் கந்தர் மகனின் விருப்பத்துக்குத் தடையாக நிற்கவில்லை.

அப்போது அவள் படிப்புக்கு தோதான வேலை ஒன்றும் கிடைக்கவில்லை. இப்போது அவளுக்கு ரீச்சிங் கிடைத்து விட்டது. தான் ரீச்சராய் இருப்பதால் அவனை “உந்த வேலை வேண்டாம் விடு... என்று சொல்லி விட்டாளாம். மகன் முடியாது என்று சொல்லி விட்டு வந்து

விட்டானாம்." சோமாஸ்கந்தர் கவலையோடு சொல்கிறார்.

"சரி அறசோமாஸ் நான் ஒருக்கா அவளோடு கதைக்கிறன். நீங்க கவலைப்படாமல் போங்கோ..." என்று சொல்லி அவரை அனுப்பி விட்டு எனக்குள் யோசிக்கிறேன்.

முதலில் அவளின் பக்கத்து நியாயத்தை யோசித்துப் பார்க்கிறேன்.

தானொரு ரீச்சராக இருப்பதால் அவனையும் தன்னைப் போலொரு அரச... நிறுவன... தொழில் பார்த்தால் என்ன என்று அவள் யோசித்து இருக்கலாம்.

அப்படி அவள் யோசித்ததால்... அதைச் சொல்லப் போய் இன்று மன(ண) முறிவு வரை அது வருமென அவள் எதிர்பார்க்காமல் இருந்திருக்கலாம்.

அவனைப் படிப்படியாக மாற்ற அவள் முயற்சித்து இருக்கலாம். ஏன் அவசரப்பட்டாள்.

அவனை அவள் காதலிக்கும் போது அவன் அப்படி ஒரு தொழிலுக்கு முயற்சி செய்தது அவளுக்குத் தெரியும்தானே. அப்படி ஒரு தொழில் கிடைக்காததால் தானே...

தன் தொழிலை கேவலமாக நினைக்கிறாள் என்ற கோபம் சோமாஸ்கந்தரின் மகனுக்கு ஏற்பட்டதால் அவனும் கோபித்துக் கொண்டு வந்து விட்டான்.

நான் கைநிறைய கௌரவமாக உழைக் கிறேன். என் குலத் தொழிலைத்தானே செய் கிறேன். இதிலென்ன வெட்கப்பட இருக்கிறது என்று அவனும் அவளுக்கு நியாயப்படுத்தி யிருக்கலாம்.

நீ சொல்றபடி நானொரு தொழில் எடுத்தால் என்ன வருமானம் கிடைக்கும்...? இப்ப பார் நான் அதைவிடக் கூட உழைக்கிறன்தானே என்று அவளைச் சம்மதிக்கச் செய்திருக்கலாம்.

இல்லை... நீ விரும்புகிறபடி முயற்சி பண்ணிப் பார்க்கலாம். அதுவரை இதைச் செய்கிறன் என்று சொல்லியிருக்கலாம்.

அவளின் விருப்பத்துக்கு ஏற்ப முயற்சியும் செய்யலாம்.

இருவரும் அவசரப்பட்டு விட்டார்கள் என்பது மட்டும் எனக்குப் புரிகிறது.

இப்போது உள்ள இளைய தலைமுறையினர் உடலுழைப்பை இளக்காரமாக நினைப்பதால்...



**"தம்பி என்னுடைய மகனின் வாழ்க்கை... இன்று பெரும் சிக்கலுக்குள் வந்துவிட்டது..."**

**"ஏன்... என்ன நடந்தது...? கிட்டடியிலதானே திருமணம் நடந்தது. நல்லாத்தானே இருந்தவன்..."**

அவள் அவனைக் காதலிக்கும் போது இருவரும் படித்துக் கொண்டிருந்தார்கள். பின்னரும் அவன் செய்யும் தொழில் தெரிந்து தானே காதலும் தொடர்ந்து கலியாணத்தில் வந்து முடிந்தது. அப்ப அவன் தொழில் தெரிந்ததுதானே.

இப்போது தான் ரீச்சர் என்பதனால்... அவன் தொழில் சிறுமை என நினைக்கிறாள்.

அவள் யாரோடையோ தன்னை பிழையாக ஒப்பிட்டுப் பார்க்கிறாள் போலிருக்கிறது.

ஓ... அந்த இயல்பை மாற்றலாம். மாற்ற வேண்டும் என நான் நினைக்கிறேன்.

ஆனால் இங்கு ஒருத்தர் அப்படி நினைக்காத போது இந்த முரண்பாடு வந்துள்ளது.

இப்போது யாரை மாற்றுவது... என்பது எனக்குத் தெரியவில்லை. ஆயினும் சோமாஸ் கந்தரிடம் கொடுத்த வாக்கை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற நினைப்பு மட்டும் என்னிடம் வந்து விட்டது.

சிறு வயதில் இருந்தே... ஆரம்பப் பிரிவுக்கே தொழில் வழிகாட்டலும் ஆலோசனை கூறலும் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று கல்விக் கலைத்திட்டத்தில் இருந்தும், அது ஏட்டுச் சுரைக்காயாய்ப் போன அவலம்...

# மெல்லிசை போலும்...

மூச்சிழு
சுவாசித்துக் கொள்
இந்தக் கணத்தில் கொஞ்சம் மென்மையாக ஓய்வெடு

கண்ணீர் எல்லாம் துயரம் அல்ல
அது காயத்தின்
அதீத ஔடதம்
அது கீறலின்
அதிமதுரம்
கண்ணீர் கடந்து
காயங்கள் ஒழிந்து போதலில் காலச்சக்கரம்
ஒருபோதும் வஞ்சகம் செய்ததில்லை

மூச்சிழு
சுவாசத்தில் சுகந்தம் கிளம்பும்,
நம்பிக்கை கொள்
வரும் கணங்களில் சற்று
மெதுவாக இளைப்பாறு

மௌனமான நதிநீரருகில்
ஒரே ஒரு கணம் செல்
சிற்றோய்வு கொள்
ஈரப்பரப்பின் பேரமைதியை பற்றியணைத்துக் கொள்
பின்னும் அப்பேரமைதி உன்னைப் பற்றிச் சூழ்ந்து
வியாபித்துக்கொள்ளவும் அனுமதி

உன் யாக்கை இளைப்பாறுமந்தவேளை
உள்ளம் மெல்லமாக
கரையத் தொடங்கி
அமைதி அடையும்
நினைவுகள் கூட மெதுமை பெறும்
ஒரு இலை விடை பெற்றுத் தரைதொடுவதைப் போல

இயல்புநிலை கழிந்து
சாயம் அழிவது போல
உனது அழுத்தங்களும்
அதன் சாயலில் இருந்து
மெல்ல விடுபடத் தொடங்கும்
கொஞ்சம் கொஞ்சமாக
கரைந்து ஒடுங்கி கீழே சென்று
அடங்கத்தொடங்கும்
பின்னும்
நிலைபேறடையும் தருணம்
அசைவற்று மரத்தும் போய்விடும்

அழுகை ஆர்ப்பாட்டம்
அவதி அல்லல் ஊழி
துக்கம் துயரம் ஏமாற்றம்
எதுவுமற்ற இந்தக்கணத்தில்
மென்மையாக இளைப்பாறு
மூச்சை உள்ளிழு
மெல்லிசை போலும் காற்றுக்குள் நுழை
ஆன்மாவை
அமைதியுறச்செய்!!!

**Dr. ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர், இலங்கை.

எல்லோரும் வெள்ளை உடும்புப் போட்டு வேலை செய்ய நினைத்ததால் வந்த விளைவை... நினைக்க மறுக்கும் நிலையில் அவளைத்தான் மாற்ற வேண்டும் என நான் நம்புகிறேன். இந்த மோகம்தான்... எத்தனையோ குடும்பங்கள் சீரழிய காரணம் என்பதை அவளுக்குத்தான் விளக்க வேண்டும். அவள்தானே ஆசிரியை.

அவள் தொழில் வழிகாட்டலும் ஆலோசனை கூறலும் படிப்பிக்காவிட்டாலும் படித்திருப் பாள்தானே...?

அவளை மாற்றலாம் என்ற திடமான... நம்பிக்கையான நினைப்போடு நான் நிம்மதியாக தூங்குகிறேன்.

இதில் சைலஜா நகை வேலை செய்த கணவனை இனி அந்தத் தொழில் செய்ய வேண்டாம் எனக் கூறி நிறுத்தி அவர் சமையலும் வீட்டு வேலைகளும் பிள்ளைகளை பள்ளிக்கும் ரியூசனுக்கும் ஏற்றி இறக்கவும் ஆகச் செய்த தற்கு காரணம் சைலஜா அவரை விடத்தான் உயர்ந்த சாதி என நினைத்தது.

வினோதினி தன் கணவனிடம் செக்குறுட்டிக் காட் வேலையை விடச் சொன்னதற்குக் காரணம் தன்னுடைய இப்போதுள்ள வங்கி முகாமை யாளர் சம்பளம் தங்களது குடும்பத்தை கொண்டு நடத்தப் போதுமெனக் கருதியதால்...

ஆனால் சோமாஸ்கந்தரின் மருமகள் ஏன் அவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்தாள்...?

❍❍❍




# ஜன்னலோரம்



கு.யர்சினி (கவியாழ்)
கிழக்குப் பல்கலைக்கழகம்

காலை வேளையில் மழையும் அதனோடு இதமான தென்றல் காற்றும் வீசியது. நான் ஒரு தனியார் பேருந்தில் நான்காவது இருக்கையில் ஜன்னல் ஓரமாக அமர்ந்திருந்தேன். மழைத்துளி மண்ணை மட்டுமல்ல எனது உள்ளத்தையும் நனைக்கத் தொடங்கியது. அதை ரசித்தபடியே பார்த்துக் கொண்டிருந்தேன் அப்பொழுது ஒரு ஆண் குடையுடன் கையில் தொலைபேசியையும் வைத்துக்கொண்டு இருப்பதை அவதானித்து கொண்டிருக்கும்போது பின்னால் ஒரு குரல் தரணி என்று "இப்போ எல்லாம் வரவர ஜன்ன லோரமா இருந்து யாரையோ பார்த்துக் கொண்டி ருப்பது போல இருக்குதே" என்று பரணி கேட்டாள்.

அவளிடம் நான் அப்படி ஒன்றும் இல்ல வா இங்கே வந்து இரு என்றேன். பேருந்து செல்ல ஆரம்பமானது மனமோ மீண்டும் ஒரு முறை அவனை பார், என்றது. நான் ஜன்னல் ஓரமாக இருந்து கொண்டு அவனைப் பார்த் தேன். அதே நேரம் அவனும் எனைப் பார்த் தான். மின்சாரம் பாய்வது போல் ஒரு உணர்வு என்னுள்ளே தோன்றியது.

அதை எப்படிக் கூறுவது என்று எனக்கு தெரியவில்லை இருந்தும் அவன் மீதான ஈர்ப்பு என்னை அறியாமலே வந்துவிட்டது. அவனைப் பார்த்தபடியே பேருந்து நகர நானும் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அம்மா என்னைப் பார்த்து "படிப்பெல்லாம் எப்படி போகுது" என்று கேட்டார் இன்னும் ரெண்டு வருசத்தில எல்லாம் முடிஞ்சிரும் அம்மா.

அப்பா என்ட மகள் ஒரு படிப்புக்காரப் பிள்ளைதான் என்றதும் எனது தங்கை "எப்போ பார்த்தாலும் அவர்கட மகளத்தான் பாசமாக கொஞ்சுறது பாசம் கட்டுறது" என்று முகத்தை சுருட்டிக்கொண்டு வீட்டிற்குள் சென்றாள். அம்மா இவளுக்கு இதான் வேலை என்று சலித்துப்போய் சொன்னார். இரவு வேளையில் உணவு உண்ட பின் நான் எனது அறைக்குள் தூங்குவதற்காக சென்றேன்.

கட்டிலிலே சாய்ந்த போது அந்த ஆணின் எண்ணம் தோன்றியது. அவனது பார்வை என்னை உறங்கவிடவில்லை மீண்டும் அவனைப் பார்க்க வேண்டும் என்று ஆசை கொண்டது மனம். மறுநாள் காலையில் பல்கலைக்கழகம் செல்லும் வழியில் அதே ஜன்னல் ஓரமாக இருந்தேன். அவன் நிற்பான் என பார்த்துக் கொண்டிருந்தேன் அவன் அங்கேதான் நின்றான் ஆனால் தனியாக நிற்கவில்லை அவனுடன் மூன்று நான்கு பேர் நின்றனர்.

நான் அவனை நன்றாக பார்த்த பொழுது அவனும் ஒரு பல்கலைக்கழக மாணவன் என்பதைக் கண்டுகொண்டேன். ஏனென்றால் எங்களுடைய பல்கலைக் கழகத்தில் வழங்கப்படுகின்ற ட்ரெஸ்ஸினை அவனும் அவனோடு இருந்த நண்பர்களும் அணிந்திருப்பதை அவதானித்துக் கொண்டிருந்த வேளையில் எனது தோழியும் பேருந்தில் ஏறிக்கொள்கின்றாள். நான் எதையும் காணாததைப் போல இருக்க "நீ வர வர இந்த ஜன்னல் ஓரத்தில இருந்து கொண்டிருக்காய் என்ன விசயம் என்டு தான் தெரியல்ல" என்று கேலியாக கேட்டாள்.

நான் அவளிடம் ஒன்டும் இல்ல, விளையாடாம இங்க வந்து இரு என்று கூறினேன். நானும் பரணியும் கதைத்துக் கொண்டிருந்தபோது அவனும் அவனது நண்பர்களும் பேருந்தில் ஏற எனக்கு பயம் வந்துவிட்டது. பேருந்தில் ஏறியவர்கள் என்னிடம் வருவதைப் போன்று வந்து கொண்டிருந்தார்கள். நான் ஆச்சரியமாக

என்ன நடக்குது இங்கே என்று பார்த்துக் கொண்டிருந்த போது அவர்கள் பரணியோட கதைக்க ஆரம்பித்தனர்.

தரணி இது எண்ட ப்ரிண்ட்ஸ் என்றாள். நான் அவர்களைப் பார்த்து ''ஹாய்'' என்றேன் அவர்களும் என்னை பார்த்து ஹாய் என்று கூற ''உங்களுடைய பெயர் என்னவென்று அவன் கேட்க ''என்னுடைய பெயர் தரணி'' என்று கூறினேன்.

அப்பொழுது அவன் என்னுடைய பெயர் கமல் என்று கூறினான். நான் சற்று புன்னகை யுடன் அவனைப் பார்த்து சிரித்தேன் அப்படியாக எல்லோரும் அமர்ந்தது கதைத்துக் கொண்டிருந்த பொழுது எங்களுடைய பல்கலைக்கழகம் வந்துவிட்டது. நாங்கள் அனைவரும் பேருந்தில் இருந்து இறங்கி பல்கலைக்கழகத்தினுள்ளே சென்றோம். அப்பொழுது நானும் எனது தோழியும் எங்களுடைய வகுப்பு நடைபெறும் இடத்திற்கும், கமலும் கமலினுடைய நண்பர் களும் அவர்களுடைய வகுப்பு நடைபெறும் இடத்திற்கும் போகும் போது பரணியிடம் உனக்கு எப்படி இவர்களை தெரியும் என்று கேட்க இவங்க எங்கூடத்தான் படிச்சவங்கடி. ஆனா நான் இவங்கள இங்க பார்த்ததே இல்லையே அதுவா பரீட்சை விடுமுறைக்காக போய் இப்போதான் வந்தவங்க நானும் சரி என்று கூறிவிட்டு எங்களுடைய வகுப்பு நடைபெறும் இடத்திற்கு சென்றோம். எங்களுடைய ஆசிரியர் குழு வேலைப்பாட்டினைத் தந்திருந்தார் எல்லா வேலைபாடுகளையும் முடித்துவிட்டு நானும் பரணியும் மதியநேர உணவினை சாப்பிட்டு விட்டு வீடு செல்வதற்காக மீண்டும் பேருந்து நிலையத்திற்கு வந்தோம் கமலும் அவருடைய நண்பர்களும் வழமை போன்று பேருந்திலே ஏறி வீடு செல்வதற்காக வந்து கொண்டுருந்தார்கள்

நாங்கள் அனைவரும் பேருந்திலே ஏறி இருக்கும்போது நான் வழமையான ஜன்னல் ஓரத்திலே அமர்ந்து கொண்டிருந்தேன். அப்பொழுது கமல் என்னிடம் ''ஏன் நீங்க தினமும் ஜன்னல் ஓரத்திலதான் இருக்கேங்க'' என்று கேட்க, ''இதில இருக்கிறப்போதுதான் இயற்கை சூழல ரசித்துக் கொண்டு செல்லலாம்'' அப்படி என்டா உங்களுக்கு இயற்கைய ரசிப் பது பிடிக்குமா? ஆமா ஆமா மிகவும் பிடிக் கும் அதனால்த்தான் நான் இங்க வந்து இருக் கிறனான் கமல் என்னைப் பார்த்து சிரித்தான்.

இப்படியாக ஒருவரோடு ஒருவர் உரை யாடியபடி வீடு நோக்கிச் சென்று கொண்டி ருந்தோம். என்னுடைய தோழி கமல் இருந்த இருக்கைக்கு அருகே இருந்து கமலோடு உரையாடிக் கொண்டிருந்தாள். நான் அதை பெரிதாக எடுக்கவில்லை நண்பர்களுக்கிடையே ஆயிரம் கதைப்பதற்கு இருக்கும் என்று எண்ணி நானும் அதை பெரிதாக பொருட்படுத்தாது பேருந்து செல்லும் வழியில் உள்ள இயற்கைக் காட்சிகளை ரசித்துக்கொண்டிருந்தேன்

''மயில் நடனம் ஆடுவதையும் நாய்கள் ஒன்றோடு ஒன்று சண்டை போடுவதையும் சிறுவர்கள் குழுக்களாகச் சேர்ந்து விளையாடு கின்ற காட்சிகள் என பலவற்றை ரசித்தவளாக வீடு நோக்கி சென்று கொண்டிருந்தேன்'' வீடு சென்றாலும் உணவு உண்ணும் போதும் தூங் கும் போதும், எழும்பும்போதும், ஏனோ தெரியவில்லை கமலினுடைய நினைவுகள் என்ன செய்வது என்று அறியாமல் மனதிற்குள் சிரித்துக் கொண்டேன்

ஒருவேளை நான் கமலினை காதலிக்கின் றேனோ என்று எண்ணம் என் மனதில் எழத் தொடங்கிவிட்டது இருப்பினும் நான் அதை பெரியதாக எடுக்காமல் மனதுக்குள்ளே பூட்டி வைத்தேன். ஒரு நாள் கமலிடம் என்னுடைய காதலனை வெளிப்படுத்த வேண்டும் என்று மனம் ஆசை கொண்டிருந்தது இப்படியாக அலைய இரவு கழிந்துவிட்டது. மறுநாள் காலையிலே புதிய ஆடை அணிந்துகொண்டும் அலங்கரித்துக் கொண்டும் பல்கலைக்கழகம் செல்வதற்காக பேருந்து நிற்கும் இடத்திற்கு வந்தேன்.

எனக்கு முன்பாகவே என்னுடைய தோழியும் கமல், கமலினுடைய நண்பர்கள் அனைவரும் பேருந்து தரிப்பிடத்திலிருந்தனர். நானும் அவர்களோடு இணைந்து பல்கலைக்கழகம் செல்வதற்காக பேருந்தில் ஏறினேன். நான் வழமையான ஜன்னல் ஓரத்தின் அருகே அமர்ந்து கொண்டிருந்தேன். கமலும் என்னுடைய தோழியுடம் ஒரே இருக்கையில் இருந்து கொண்டு எதையோ தீவிரமாக கதைத்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது என்னுடைய தோழி அழுது கொண்டிருந்தாள். அதையும் அவதானித்துக் கொண்டிருந்தேன். ஏன் எதற்கு அழுகின்றாள் என்று ஆயிரம் கேள்விகள் மனதிலே எழுத தொடங்கியது.

பல்கலைக்கழகம் வந்துவிட்டது பேருந்தில் இருந்து நாங்கள் அனைவரும் இறங்கி எங்களு டைய வகுப்பு நடைபெறும் இடத்திற்கு வந்து கொண்டிருந்தோம். ஏன் பேருந்தில் அழுது கொண்டிருந்தாய் என்ன விசயம் என்று கேட்டேன் என்னுடைய தோழி ஒரு விடயத்தை கூறினாள். என்னுடைய மனம் கண்ணாடி போல் உடைந்து சுக்குநூறாகியது ''நானும் கமலும் ஒரு வருடமாக காதலிக்கிறம் எங்களுடைய காதலை

# வழி நெடுக காதல் நோக்கும்..!

–மேதினியாள்



மேதினியாள் ஆங்கிலவழி விஞ்ஞான ஆசிரியை ஆவார். யா/வயாவிளான் மத்திய கல்லூரியில் கற்பிக்கின்றார். சொந்த ஊர் யாழ்ப்பாணம் அச்சுவேலி. இதுவே இவரின் முதல் கவிதை.

சாலையோரத்து காட்டு மல்லி
சலசலக்கும் நீரோடை
அந்திவானில் சூரியன்
கால் நனைக்கும்
கடலலைகள்...
நடு நிசியில் தனி நிலா
நட்சத்திரப் பட்டாளம்
கும்மிருட்டில் மின்மினிகள்
குமிழ் ஒளியில் ஈசல்கள்...

மெல்லிசையுடன்
மழைச் சாரல்...
தென்றலுடன் மறையும்
சிறு வியர்வை...
நிரையெடுக்கும் பட்சிகள்
நீண்டு வளர்ந்த தென்னையின்
நடனம்...
நாற்றுகளின் கையசைப்பு

நளினத்துடன் ஒரு கரையில் கொக்கு...
கூவும் குயிலின்
குழலோசை...

ஆலயம் நுழைகையில்
ஆசுவாசமாக தீண்டும் நறுமணம்...
கொட்டும் மழையில்
குதூகலிக்கும் மனதும் உடலும்
அழகாக்கும் மழலையின்
உதட்டோரப் புன்னகை...
நீண்டதொரு நாளின் முடிவில்
நின் நினைவுகள்...

இவை கடந்தும்
காதல் சுகம் கண்வளர
கண்ணிமை அசைநீள
காரணங்கள்...
எவைதான் தேவையோ...?

---

வீட்டில ஏற்றுக்கொள்ள மாட்டாங்களாம் அதான் அதை கமலிட்ட சொல்லி அழுதேன் என்றாள்" சில நிமிடம் என்னுடைய இதயத்துடிப்பு நின்று விட்டதைப் போன்று உணர்ந்தேன் பரணி இதப்பத்தி எதுவுமே கூறவில்லை என்று மனவேதனையும் அடைந்தேன் என்னுடைய ஒரு தலை காதலை நான் அவளிடம் கூறவில்லை மனதோரம் வேதனை சூழ அதை வெளிப் படுத்தாது அவளுக்கு ஆறுதல் கூறினேன்.

யார் எனக்கு ஆறுதல் கூறுவார் என்று மனதிற்குள்ளே எண்ணிக் கொண்டேன் என் மனமோ எனக்கான ஆறுதல் என்பதை புரிந்து கொண்டேன். பெற்றோரிடம் வந்து பேசுகின்றேன் நீங்க இருவரும் பல்கலைக்கழகத்தில படிக் கிறீங்கதானே. அதுமட்டுமில்லாம பாடசாலை யிலிருந்து தெரியும். நான் உங்கட அம்மாட்ட கதைக்கிறன் அவளும் சரி என்றாள் நாங்கள் இருவரும் எங்களுடைய வகுப்பை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தோம் இருவரின் மனதும் வேதனையடைந்தது. வகுப்பை முடித்துவிட்டு நானும் எனது தோழியும் வீடு செய்வதற்காக பேருந்து தரிப்பிடத்திற்கு வந்தோம் அப்பொழுது கமலும் நண்பர்களும் அங்கு வந்து கொண்டு இருந்தனர். கமல் பரணியை அழைத்துச் சென்று அவளுக்கு ஆறுதல் வார்த்தைகளை கூறிக் கொண்டிருந்தார்.

**"இதைப் பார்த்துக்கொண்டிருந்த என் மனம் இதயத்திடம் எது உனக்கானது என்று எழுதப்பட்டிருக்கின்றது அதுவே உன்னை வந்து சேரும் தேடி செல்ல தேவையில்லை அதுவாகவே உன்னைத் தேடி வந்து சேரும் என்று மனமானது ஆறுதல் வார்த்தையை கூறியது."** பேருந்தில் ஏறி வழமையான இருக்கையில் அமர்ந்து கொண்டு இயற்கையை ரசித்தபடி வந்துகொண்டிருந்தேன். இயற்கையானது பல விடயங்களை கற்றுத் தருகின்றது அதேபோன்றுதான் ஒரு சில நாட்களில் எனக்கு ஏற்பட்ட உணர்வும் இயற்கையினுடைய பிரதிபலிப்புத்தான் ஜன்னல் ஓரத்தில் இருந்து கொண்டு பல விடயங்களை ரசித்தபடி சென்று கொண்டிருந்தேன்.

○○○






**கலாநிதி**
**ஜெகநாதன் தற்பரன்**
(L.L.M.)

**யா**னைக்கு மனிதனை விடவும் ஆயிரம் மடங்கு ஞாபக சக்தி உள்ளது. மனிதர்களுக்கு உள்ள நுண்ணறிவு விடயப்பரப்புக்களுக்கு அப்பால் உணர்வுரீதியிலான நுண்ணறிவு மற்றும் பண்பாட்டியல் சார் நுண்ணறிவு, விடயதானங்களில் கூர்ந்த அறிவு கொண்டதான பிராணியாக யானை காணப்படுகின்றது. பலம் மிக்க இந்த யானையானது வாழ்ந்து வருகின்ற உயிரினங்களிலே அதிக காலம் கர்ப்ப காலத் தினைக் கொண்ட விலங்கினமாகவும், காணப் படுகின்றது. 22 மாத காலம் வரையில் கர்ப்ப காலத்தினைக் கொண்டு யானையினைப் பிரசவித்தாலும், பிறந்து சில மணித்தியாலங் களிலேயே சுயாதீனகமாக குட்டி யானை உலா வரத் தொடங்கும். பிறக்கும் போது குழந்தைகள் சுமார் 100 கிலோ எடையுடன் இருக்கும்.

யானைகள் துன்பத்தில் இருக்கும் தமது தோழர்களுக்கு ஆறுதல் கூறுகின்றன, இறந்த வர்களின் துக்கம் யானைகள் உணரும். தனது பாகன் இறந்துவிடின் அழுதுவிடும் அல்லது உணவறுப்புச் செய்யும் யானைகள் உள்ளன. மற்றும் கண்ணாடியில் தங்களை அடையாளம் காண யானைகளுக்கு முடியும். சுய விழிப்புணர்வின் அடையாளம் அது. யானை ஒருபோதும் நினைவுகளை மறக்காது என்ற பழமொழியில் உண்மை உள்ளது. யானைகள் நீர் ஆதாரங்கள், இடம்பெயர்வு பாதைகள் மற்றும் பல ஆண்டுகளுக்குப் பிறகு தனிப்பட்ட மனிதர்களை நினைவில் வைத்துக் கொள்கின்றன. அவை மனிதர்களால் கேட்க முடியாத மிகக் குறைந்த அதிர்வெண் ஒலிகளில் பேசுகின்றன, சரியான சூழ்நிலையில் 10 கிமீ வரை அதிர்வெண் ஒலிகளை சுமந்து செல்கின்றன. தந்தங்கள் யானையின் வாழ்நாள் முழுவதும் வளரும். நீளமான வெட்டு பற்கள் தோண்டுவதற்கும், பட்டைகளை அகற்று வதற்கும், தற்காப்புக்காகவும் அவற்றைப் பயன்படுத்துகின்றன. அவற்றின் தோல் 2.5 செ.மீ தடிமனாக இருக்கும், ஆனால் அதன் மீது ஒரு ஈ இறங்குவதை உணரும் அளவுக்கு உணர்திறன் கொண்டது. அதனால்தான் அவர்கள் குளிர்ச்சிக்காகவும், பூச்சி விரட்டியாகவும் மண் குளியல்களை அதிகம் விரும்புகிறார்கள். யானையினைச் சுற்றுச்சூழல் பொறியா ளர்கள் என்றும் அழைக்கின்றார்கள், ஏனெனில் அவர்கள் நீர்க் குழாய்களை உருவாக்குகிறார்கள், விதைகளை பரப்புகிறார்கள் மற்றும் பல உயிரினங்களுக்கு நன்மை பயக்கும் வழிகளில் நிலப்பரப்புகளை வடிவமைக்கிறார்கள். இந்திய மன்னர்களின் படைகள் முதல் ஆல்ப்ஸ் மலையில் ஹன்னிபாலின் புகழ்பெற்ற அணி வகுப்பு வரை 2,000 ஆண்டுகளுக்கும் மேலாக யானை போரில் பயன்படுத்தப்பட்டது வரலாறு.

இந்து மதத்தில், விநாயகக் கடவுள் யானையின் தலையைக் கொண்டுள்ளார். இது ஞானத்தையும், தடைகளை நீக்குவதையும் எடுத்துக் குறிக்கிறது. புத்த மதத்தில், ஒரு வெள்ளை யானை மன வலிமை மற்றும் தூய்மையின் சின்னமாகும் எனப் புராணக் கதை கூறுகிறது. ராணி மாயா புத்தரைப் பெற்றெடுப்பதற்கு முன்பு ஒரு வெள்ளை யானையைக் கனவு கண்டார் எனப் பண்டைய கால வரலாறுகள் (மஹாவம்சம்) எடுத்தியம்பு



**தற்போது வாழ்ந்துவருகின்ற உயிரினங்களில் அதிக கர்ப்ப காலத் தினைக் கொண்ட விலங்கு, யானையாகும்.**

**கண்ணாடியில் தங்களை அடையாளம் காண யானைகளுக்கு முடியும்.**

கின்றன. யானைகள் அரச விழாக்கள் மற்றும் மத ஊர்வலங்களுக்கு பயன்படுத்தப்பட்டதாக வரலாற்றுப்பதிவுகள் சொல்கின்றன. கண்டிய மன்னர்கள் அத் பஹானா எனப்படும் அரச யானை தொழுவத்தை பராமரித்து வந்தனர். 19 ஆம் நூற்றாண்டில், பிரித்தானிய காலனித்துவ வாதிகளின் வேட்டையாடலின் காரணமாக இலங்கையில் யானைகள் கடுமையான வீழ்ச்சியை எதிர்கொண்டன. சில சமயங்களில் விளையாட்டு மற்றும் தந்தங்களுக்காக ஆண்டுக்கு நூற்றுக்கணக்கான யானைகளைக் கொன்றன மனிதகுலம். தாய்லாந்திலும், இலங்கையிலும் சில யானைகளுக்கு சம்பிரதாயப் பட்டங்கள், சிறப்புப் பெயர்கள் மற்றும் அரசு இறுதிச்சடங்குகள்கூட வழங்கப் படுகின்றன. நாடுகளுக்கு யானைகளைப் பரிசளிப்பது ஒரு பாரம்பரிய இராஜதந்திரம். பண்டைய இராச்சியங்கள் மற்றும் நவீன அரசாங் கங்கள் கூட யானைகளை நல்லெண்ணப் பரிசாக அனுப்பியுள்ளன. இலங்கை 1949 இல் ஜப்பானுக்கு ஹெய்யாந்துடுவ ராஜா என்ற யானையை பரிசாக வழங்கியது.

இத்தகு பலம் மிக்கதான யானைகளின் பராமரிப்பு மற்றும் கட்டுக்காவல் தொடர்பில் பல்வேறு அமைப்புக்கள் செயற்படுகின்ற போதும் யானைப்பாகன்கள் எனப்படும் கும்கிகளினால் யானையின் வளர்ச்சியும், மேம்பாடும் *(growth and developmental factors)* அதிகம் கட்டுப்படுத்துகின்றன. அவர்களின் வசம் கையளிக்கப்படும் அநாதரவான யானைகள் அல்லது மனித வாழ்வுக்கு உசாத்துணை செய்வதற்கு பழக்கப்பட இருக்கும் யானைகள் அனைத்துக்கும் கடுமையான ஆரம்பப் பயிற்சி கடுழியத் தண்டனைகளுடன் வழங்கப் படுகின்றன.

கடுமையான ஆரம்பப் பயிற்சிகளின் பின்பு, பாகன்கள் முன்னிலையில், யானைகள் முன்பதாகப் பாகனின் குச்சிகள் / தடிகள் வைக்கப்படும். கடுமையான ஆரம்பப் பயிற்சி களுக்கும் கடுழியத் தண்டனைகளுக்கும் அப்பால் வைக்கப்பட்டனவற்றில் எந்தக் குச்சியினை எடுத்து தனக்கு விரும்பிய பாகனிடம் கையளிக் கின்றதோ அப்பாகன் குறித்த யானையின் பாகனாக தேர்வு செய்யப்பட்டு குறித்த யானை கையளிக்கப்படுகின்றது. யானைகளின் விருப்பத் தேர்வுகளின் அடிப்படையில் பாகனானவன் தேர்வு செய்யப்படுவதாக சிருஸ்டிக்கப்படுகின்றது. இதன்பின்பு யானைப் பாகன் தலைமையில் குறித்த யானை கரோல் எனப்படும் பயிற்சிக் கூடத்திற்கு.. இல்லை.. இல்லை.. இன்னோர் சித்திரவதைக் கூடத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

யானை பாகனை நம்பிய நிலையில், இணைந்து செயற்பட இணங்கிய ஒப்பந்தக் கடப்பாடுகளின் விளைவாக யானையின் தந்தம் தூக்கிக் கட்டப்பட்டு, யானையின் அசைவுகள் கட்டுப்படுத்தப்பட்டு, பலவந்தமாக நோன்பு இருக்க வைக்கப்படுகின்றது. 48 நாட்கள் வரை பலவந்தமாக நோன்பு இருக்க வைக்கப்பட்டு பின் மீளவும் பயிற்சி நடைபெறும்.

சிறப்புற குச்சியினை எடுத்து தனக்கு விரும்பிய பாகனிடம் கையளிக்கத்தவறின்

குச்சி தூக்கல் பயிற்சி, கும்கி தேர்வு, மற்றும் நோன்பு இருத்தல் என்கின்ற செயல்களுக்கு மீண்டும் தள்ளப்படும். தாய்லாந்திலும், இலங்கையிலும் யானைகளுக்கு பாகனின் கட்டளைகள் அந்நாட்டின் தேசிய மொழியில் வழங்கப்படுவதனால் குடியிருப்பாளர்களின் உள்ளூர் மொழிப்புரிதல் யானைகளுக்கு விளங்குவதில் சங்கடங்களினை எதிர் கொள் கின்றன.

இதற்கும் அப்பால் யானையானது தனக்கு விரும்பிய பாகனைக் கண்டதும் முன்னங் கால்களினை மடித்து, தன் பலம் மறந்து, நிலை மறந்து, தன் பலத்தினை மறக்கடித்து, தனது பாகனை வணங்குவதுடன் இருந்திடும் நிலை வரை, இத்தகு பயிற்சிப்பட்டறை தொடரும். இணைந்து செயற்பட குத்தூசியின் அல்லது அங்குசத்தின் அசைவுக்கு இணங்கும்வரை இப்பயிற்சி தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இதற்கு 4-6 மாதங்கள் வரை செல்லும். அங்கு சத்திற்கு கட்டுப்பட்டு செயற்பட உடன்பட்ட நிலையில், பிரம்புக்கும், மூங்கில் பிரம்புக்கும் அச்சப்பட்ட நிலையில் பலமான யானையின் அறிவுத்திறனும், நுண்ணறிவுத்திறனும் வரையறைக்குள் கொணரப்படுகின்றன.

குறித்த பொருட்கள் மற்றும் பாகனின் செயற் பாடுகளுடன் யானையின் பலமும், அறிவும் நிறுவனமயப் படுத்தப்பட்டு விடுகின்றன. குத்தூசி அல்லது அங்குசம் போலவே மூங்கில் பிரம்பு என்பது பாகனால் தயாரிக் கப்படும் சித்தரவதைக்கு பிரபலமான கம்புத்தடி. இதனால் சரிவரத்தாக்கின் ஒரே அடியில் மனிதன் மரணாமாகும் அளவுக்கு சீர்யப்படுத்தப்பட்டு தயாரிக்கப்படும். இத்தடிக்கும், அங்குசத்திற்கும், பிரம்புக்கும் தலையாட்டவும், கடவுளாக வணங்கி பண மீட்டவும், சாகசம் காட்டிடச் செய்யவும் மனிதன் யானையைப் பழக்கிடப் பழகினான்.

தனக்குரிய பலம் குறித்து அதே யானைக்கு எவரேனும் அதன் மொழியில் விளங்கப் படுத்தினாலும் யானையே நம்பாத அளவுக்கு பயிற்சி நிலைகள் அமைந்து காணப்படும். ஆனாலும் தனது உணர்வு ரீதியான நுண்ணறிவின் உன்னதமான நிலை காரணமாகவும் தனது உடலியல் பகுதியில் தோற்றம் பெறும் **“தெஸ்ரோதரன”** *(“Testosterone”)* என்கின்ற சுரப்பின் செயற்பாடுகள் காரணாகவும் ஏற்படுகின்ற மன உளைச்சல் காரணமாக யானைகள் அழவும், பிளிறவும் செய்கின்றன. மத யானைக்கும் மிதமாக மதம் பிடித்துவிட பாகனையே கொன்று விடவும், மக்களைத் தாக்கவும் விளைகின்றன. தன்னிடத்திற்கு மனிதன் வந்து தனது சௌகரியங் களுக்குமாக வந்து மனிதன் குடியேறவும், குடியேறியபின் யானைகளுக்கு மின்னழுத்தம் கொடுக்கவும், வெடிவைத்துக் கலைக்கவும், தம்மினத்தையே அழிவிக்கும் அளவுக்கு செயற்படத் மனித குலம் தலைப்படும். பயிற்சி சாகசம், வேலை, சுற்றுலா என பலமான ஒரு விலங்கினத்தை தமது சிற்றறிவுக்குள் மட்டுப் படுத்தவும் மனிதம் தலைப்படுகின்றது. யானைகளினைத் தமது பகுதிகளில் இருந்து கலைப்பதற்கு யானையின் சிறுதுரும்பு எதிரி யாகிய தேனிக்களினை வளர்த்து யானை களுக்கு எதிராக படைதிரட்டவும் மனிதம் தயங்கவில்லை. இங்ஙனமாக, பலமான ஒரு வனவிலங்குகளின் பலமான ராஜாவைத் தன் வசப்படுத்தியதில் ஆயிரம் வாரணம் மூளை மனிதனதே.

யானைக்கதை - இது ஒரு சிறந்த உதாரண மான சிறு உண்மைக்கதையே. இக்கதையினை நாம் பல்வேறு நிலைகளுடன் ஒப்பிடலாம். பாடசாலை மயப்படுத்தப்பட்டு சிறுவர்களின் கல்வி நிலையும் நிறுவனப்படுத்தப்படின் சிறுவரின் வளர்ச்சியும், மேம்பாடும் *(growth and development)* பலமறியாது பழக்கப்பட்டுவிட்ட யானை போலவே மழுங்கடிக்கப்படும். சிறுவரின் எதிர்கால வாழ்வும் நிறுவனப்படுத்தப்படின் அறிவு பெறும் வாயில்கள் மூடப்பட்டுவிடும். ஆதலினால் மிருகவதை அல்லது மனிதவதை செய்வதனையோ அறிவினை நிறுவன மயப் படுத்தி அத்தகு செயற்பாடுகளில் மனிதம் சுகம் காணுவதனையோ மனிதம் அனுமதிக்கக் கூடாது. அது அறம் அன்று. வாரணம் ஆயிரம் சுற்றிவர தன் வீரன் வந்தான் என்பதில் உள்ள வீரம், அழகு யானையினைத் தன்னிடத்தில் இருந்து விரட்டி அடித்து தான் வாணரம் ஆக வாழ்ந்தான் என்பதில் மனிதம் இன்புற்றிருக்கக் கூடாது. யானையோ, சிறுவரோ நிறுவனப்படுத்தபடாத அறிவுடன் வாழ விடலே சிறப்பு. அதுவே இவ் யானைக்கதையின் சிறு கருத்தியலாகும்.

❍❍❍






வெல்லாவெளி
விவேகானந்தம்

பேராதனை பல்கலைக் கழகத்தின் சகபாடிகளின் 'வாட்ஸ்அப்' குழுவில் புகைப் படங்களை அடிக்கடி நண்பர் ஆதவன் போட்டு அசத்துவான். அன்று அவன் போட்டது கறுப்பு வெள்ளை குறூப் புகைப்படம். அரச பணியில் இருந்து ஓய்வு பெற்று வீட்டில் இருந்த கார்த்திகேயன் அதைப் பார்த்ததும் பேராதனை பல்கலையில் படித்த *1977 - 1981* காலப் பகுதிக்குள் நினைவுகள் அவரை இழுத்துச் சென்றன.

பேராதனை பல்கலையில் படிக்கும் போது நடந்த சம்பவங்கள் அவர் மனத்திரையில் அரங்கேறின. அவற்றை தவிர்க்க நினைத்த அவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

முதலாம் வருட மாணவன் அப்போது கார்த்திகேயன். கொஞ்சம் கறுப்பு நிறம் என்றாலும் அழகன். களையான அவன் முகம். அடர்த்தியான அவன் தலைமுடி சீப்புக்கு கட்டுப் படாமல் அது சிலிர்த்துக் கிடப்பது அவனுக்கு அழகு. கில்டா விடுதியில் சுந்தர் அவனது அறை நண்பன்.

"மச்சான் கார்த்தி.. உன்னிடம் ஏதோ மாற்றங்கள் சில நாளாக நானும் கவனிச்சன். என்னடா உனக்கு ஏதாவது பிரச்சனையா".

"சேச்..சே அது ஒன்றுமில்ல. சுந்தர் வீணாக நீ ஏதும் கற்பனை செய்யாத. நாளைக்கு வரதன் சேர் பாடமிருக்கு. விரல் நுனியில் தரவுகளை வைச்சுக் கொண்டு விளாசுவார். எக்கனாமிக் ரியூட் எழுதக் கிடக்கு என்னை விடு. கேள்வி கேட்டு நீ அறுக்காதடா".

கார்த்திகேயன் மழுப்பிவிட்டான் என்பது சுந்தருக்கு நன்றாகவே புரிந்தது. 'கர்ப்பத்தையும் மறைக்க முடியாது அது போலக் காதலையும் மறைக்க முடியாது'. இது அவனுக்கு தெரியாதா. இரண்டும் ஒரு நாள் வெளிச்சத்துக்கு வரவே செய்யும். "கார்த்தியை விட்டுப் பிடிப்பம்". அன்றுடன் சுந்தர் அதைப் பற்றி கேட்பதை விட்டுவிட்டான்.

பேராதனை வளாகமெங்கும் மரங்கள் பூத்துச் சொரிய, பூக்கள் பூமடந்தை நிலமேனி எங்கும் கொட்டிக்கிடந்தன. அப்போது வசந்த காலம் தொடங்கி இருந்தது. அதுவே கண் கொள்ளாக் காட்சி. காதலர்க்கும் அது வசந்த காலம்.

கில்டா விடுதியில் இருந்து சுந்தர் கூடவே கார்த்திகேசன் காலையில் விரிவுரைக்குக் கிளம்பினான். கில்டா சந்தி வாகை மரத்தின் கீழ் நண்பர்கள் சிலர் ஜே.பி விடுதியிலிருந்து வந்து இணைந்தனர்.

"மச்சான் மரங்கள் எவ்வளவு அழகாகப் பூத்துக் கிடக்குது.. நாம் போகும் பாதை நெடுகிலும் அவை பூக்களைக் கொட்டி விட்டிருக்கும் அற்புதத்தைப் பாரன்". சுந்தர் இயற்கையின் அற்புதத்தை வர்ணித்தான்.

"ஓம்டா.. நம்மட பாதங்கள் நில மடந்தை மேனியைத் தீண்டி விடக் கூடாது என்ற முன்னேற்பாடு போலும். அதுதான் பாதை எங்கும் பூக்களைக் கொட்டி பூ ஆடை விரித்து இருக்கு மரங்கள்".

சுந்தரை விஞ்சி கார்த்திக் அதற்கும் ஒரு அர்த்தத்தை சொல்லி பரவசப்பட்டான். ஆனாலும் கார்த்திகேயன் பார்வை சங்கமித்தா விடுதிப் பக்கம் இருந்தது.

"சிவமதியை இன்னமும் காணல்ல. அவள் முந்திட்டாளா.. சிவமதி கூடவே வரும் வசந்தி குழுவினர் இந்த நேரத்துக்குத்தான் வருவினம். நான்தான் விரிவுரைக்குப் போக முன்னமே வந்திட்டேனோ". மனதில் ஒரு குழப்பம் அவனுக்கு. நண்பர்கள் எவருக்கும் தெரியாமல்

அடிக்கடி திரும்பித் பார்த்தபடி நடந்தான். அதையும் சுந்தர் கவனித்தான்.

கார்த்திகேயனின் அவஸ்தைக்குக் காரணம் இல்லாமல் இல்லை. கடந்த இரண்டு மாதங்களாக தங்கள் சகபாடி சிவமதியிடம் தனது காதலைச் சொல்ல முயன்றும் அவனால் முடியாமல் போனதுதான்.

சிவமதி அழகில் எவரும் குறை சொல்ல முடியாது. துரு துருவென மிளிரும் அவளது கண்கள். 'காந்த விழிகள் என்பது இதுதானோ'. அப்படி ஓர் ஈர்ப்பு அவள் கண்களில். அதில் விழுந்தவன்தான் கார்த்திகேயன். ''சுட்டும் விழிச்சுடர்தான் கண்ணம்மா'' இப்போதெல்லாம் கார்த்தியின் வாய் பாரதி பாடலை முணு முணுக்கும்.

ஜே.பி விடுதியின் வளைவில் படிகளில் இருந்து மூச்சு வாங்க இறங்கி.. வந்து இணைந்து கொண்டனர் ஹனிபாவும் இஸ ாடினும். ''குட்மோர்ணிங் மச்சான்''. அவர்கள் இருவருக்கும் சொன்னான் கார்த்திகேயன்.

ஜே.பி விடுதி முழங்கை வளைவுப் பாதையில் குறுகிய பாலத்தூடாக பாயும் சிற்றருவியின் சலசலப்பும் கேட்டது. இரவு பெய்த மழையால் சிற்றருவி பெருக்கெடுத்து இருந்தது. பூக்கள் நிறைந்த வீதியோர மரங்களில் பறவைகளின் கீச்.. கீச் இன்னிசை இன்னும் இதமானது.

'வீரசூரிய' நினைவுத் தூபியும்.. அந்த வளைவுப் பாதையும் எப்படி மறக்க முடியும். ராக்கிங் காலத்தில் சிங்கள சீனியர்கள் கார்த்திக் குழுவைக் குந்தி இருக்க வைத்து கும்பிட்டு தூபிக்கு தேவாரம் பாடிய இடம் அல்லவா அது. அப்படி ஒரு ராக்கிங். அதை மறக்காத கார்த்தி அவ்விடத்தில் நின்று மெல்லத் திரும்பிப் பார்த்தான்.

சிவமதி அவளது தோழிகளுடன் அங்கு வருவதைக் கண்டதும் அவனது உள்ளம் உவகை கொண்டது. ''உள்ளக் களிதலும் காண மகிழ்தலும் கள்ளுக்கில் காமத்திற்குண்டு''. ஒரு கணம் கார்த்தி மனதில் திருவள்ளுவர் வந்துவிட்டுப் போனார்.

''அப்பப்பா.. காதலுக்கு இவ்வளவு சக்தியா. கண்டவுடன் போதையை ஏற்றி விடுகிறதே காதல்''. வியந்தான் கார்த்திகேயன். விரிவுரை நேரம் நெருங்கிவிட மண்டபத்திற்குள் அவசரமாக நுழைந்தனர் சகபாடிகள். ஏதோ விடுப்பு பார்ப்பது போல் சற்று நேரம் மண்டப வாயிலில் சிவமதியை எதிர்பார்த்து நின்றான் கார்த்தி. அது வீண் போகவில்லை.

''குட்மோர்ணிங் சிவமதி''.

''குட்மோர்ணிங்''.

பதில் சொன்ன சிவமதி விரிவுரை மண்டபம் நுழைந்தாள். அவளுக்கு கார்த்தியின் காதல் மனசு பற்றி தெரியவில்லை. ஆனால் அவன் அக்கறை காட்டுவது அவளுக்குள் சந்தேக விதைகளை விதைத்தது.

காலச்சுழற்சியில் பல்கலைக்கழகம் வந்து முதல் வருடத்தின் இறுதியைத் எட்டி இருந்தது. இருவாரப் படிப்பு விடுமுறை வாய்த்தது. சிவமதியிடம் 'ஐலவ்யூ' சொல்லக் கார்த்திகேயன் கங்கணம் கட்டிக்கொண்டான்.

குறிஞ்சிக் குமரனில் கார்திகைத் தீப திருவிழா அன்று. மங்கியதோர் மாலை நேரமது. சீனியர்.. ஜூனியர் சிறு சிறு குழுவாக குறிஞ்சிக் குமரன் விழாக் காணப் பயணித்தனர். றூம் மேற் சுந்தருக்கும் தங்கள் சகபாடித் தோழிகள் கூடவே குறிஞ்சிக் குமரனிடம் போகும் ஆசை இருந்தது.

''கார்த்தி வெளிக்கிடு. நாம் குறிஞ்சிக் குமரன் போவம். இன்று கார்த்திகை தீபம்''.

''நான் வரல்லடா சுந்தர்.. நீ போவன்''. சலித்துக்கொண்டான்.

''நம்ம தோழிகள் போவதாக அறிஞ்சன் மச்சான்''. சுந்தர் விடுவானா சொல்லி விட்டான்.

''நிச்சயம் சிவமதி வருவாள்''. அவன் மனம் சொன்னது. ''நானும் வாறன் சுந்தர்''. அடுத்த நிமிடம் கட்டிலில் இருந்து துள்ளி எழுந்து புறப்பட ஆயத்தமானான். சுந்தருக்கு அவன் நடவடிக்கைகள் புரியாமலில்லை.

பூரணை நிலவு பட்டப்பகல் போல இருந்தது. தோழிகள் குழுவோடு கார்த்தி குழுவினர் இணைந்தனர். குறிஞ்சிக் குமரன் பாதை வளைவில் அருவி பாயும் சத்தம் அமைதியை குலைத்தது. இதமான குளிர். பேச்சுத் துணை கிடைத்த தோழிகள் கூடவே அந்த நிலாப்பயணம்.

''வசந்தா.. பூசைகள் முடிய எப்படியும் எட்டு மணிக்கு மேலாகும்''.

''அதுக்கென்ன சுந்தர். எங்களுக்கு பாதுகாப்புக்கு நீங்கள் இருக்கினம்''.

''டினர் இருக்கும்.. ஒன்பது மணிக்குள் போய் விடலாம்''.

முதல் வருடத்தில் விடுதியில் உணவுச் சிட்டை ஒழுங்கு. அதனால் பிரச்சனை இருக்கவில்லை. கார்த்தி சிவமதியிடம் கதைக்க ஒரு சந்தர்பம் வாய்த்தது.



**கைபேசி இல்லாத காலம் அது.**
**கடிதம் மட்டுமே.**
**அதுவும் ஒருவாரமோ இருவாரமோ**
**கடிதம் வந்துசேர எடுக்கும்.**
**கடிதம் காண காத்திருக்கும்**
**வலிகள் சாதாரணமானது அல்ல.**
**கடிதங்களே அவர்கள் காதல்**
**வலிகளுக்கு ஒத்தடம் இட்டன.**

"சிவமதி.. நான் தனியாக ஒருதடவை உம்மோடு கதைக்க வேணும். நாளை நான் நூலகத்தில் காத்திருப்பன்"

துணிவை வரவழைத்துக் கொண்டு கிசுகிசுத்துவிட்டு மற்றவர்களின் கதைக்குள் நுழைந்தான் கார்த்தி.

சிவமதிக்கு அந்தக் குளிரிலும் வியர்த்தது. முகம் குப்பென்று சிவந்தது. அது கோவமா அல்லது வெக்கமா நிலவு அதனை காட்டிக் கொடுக்கவில்லை.

கோயிலில் பக்தி பரவச நிலையில் மாண வர்கள். தீபாராதனைகள் மேள தாள வாத்தி யங்கள் முடிந்து அமைதி நிலவ.. பக்தி நிலையிலிருந்து மீண்டனர். ஆனால் கார்த்தி கேயன் நினைவுகள் சிவமதியே ஆக்கிரமித்து இருந்தாள்.

நூலகம் நிரம்பி வழிந்தது அன்று. படிப்பு விடுமுறை என்பதால் மாணவர்கள் நூலகத்தை நாடி இருந்தனர். சிவமதி இருக்குமிடத்தைத் தேடிக் கண்டு பிடித்து விட்டான் கார்த்திகேயன்.

"அப்பாடா.." நன்றாக இழுத்துப் பெருமூச்சு விட்டான் கார்த்தி. "நல்ல காலம் எனக்கு. சிவமதிக்கு பக்கத்தில் கதிரை ஒன்று இருக்கு. முதலில் அதில் இருக்க வேணும்". துணிவுடன் அதில் போய் இருந்தான்.

சற்று நேரத்துக்கு முன் அதில் இருந்த வசந்தா எங்கோ போய் இருந்தாள். கார்த்தியை அருகில் பார்த்த சிவமதி பதற்றமடைந்தாள்.

"கார்த்தி இப்ப வசந்தா வருவாள். அவள் இருந்த இடம் இது".

"வரட்டும். அதுக்கு முன் நான் சொல்லி விட்டுப் போய் விடுவன்".

"என்ன கார்த்தி இது".

"நான் உம்மை விரும்புகிறன். அது உமக்கும் தெரியும்".

"என்ன கார்த்தி. இது தேவையா இப்போ".

"சிவமதி என்னால என் காதலைச் சொல்லாமல்.. படிக்க முடியல்ல. கொப்பியைத் திறந்தால் நீர் தானே வாறீர். எப்படி பரீட்சை எழுத முடியும்".

சிவமதியை நேற்றே கார்த்தி குழப்பி விட்டான். தன் காதலைச் சொல்ல அலைந்தவன் இப்போ சொல்லியும் விட்டான்.

"சிவமதி என்னைப் பிடிக்கல்லையா. அதையாவது சொல்லன். நான் எங்காவது போறன்". அவனைப் பார்க்க அவளுக்கும் பரிதாபமாக இருந்தது.

"நானும் பாதிக்கப்பட்டு.. அவனும் பாதிக்கப் பட வேணுமா". யோசித்தாள்.

"கார்த்தி உங்கள் காதல் இப்ப புரியுது எனக்கு. இப்போதைக்கு நம்ம விடயம் 'பெட்ஸ் மெற்'க்குத் தெரிய வேணாம். நாம் நூலகத்தில் சந்தித்துக் கதைத்துக் கொள்ளலாம்".

"சரி.. எனக்கு இது போதும் மதி. ஆனால் விடுதிக்கு வருவதில் ஆட்சேபனை இல்லையே". சிவமதியின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான் கார்த்தி. அவளும் கையை விடுவித்துக் கொள்ள எத்தனிக்கவில்லை.

"சரி.. வழமையாக சுந்தர் கூடவே விடுதிக்கு வருவீங்க அதுக்கென்ன வாங்க. இனி வசந்தா வந்திடுவாள். நம்மைச் கண்டு விட்டால் வேறு வினையே வேணாம்".

"ஓகே.. மதி நான் கிளம்பிறன்".

"மதி என்னடி கார்த்தி வந்திருந்து போறான். நான் பாத்தன்".

“அதுவா வசந்தா.. எக்கனாமிக் நோட்ஸ் கொப்பி கேட்டான். அவன் எழுதியதில் ஏதோ டவுட் என்றான். அதைக் கிளியர் பண்ணித்துப் போறான்”. சிவமதி சமாளித்துக் கொண்டாள்.

“பரீட்சைகள் பாத்திருக்க முடிஞ்சு போனது சிவமதி. வாரும் இருவருமாக கெம்பா கன்ரீனில் போய் டீ எடுப்பம்”

“ஐயோ கார்த்தி வேணாமே. நாளைக்கு நாங்க வீட்டுக்கு போறம். காலையில சங்கமித்தா வாங்கோவன். ஸ்டேசன் போகணும்”.

“நாங்களுந்தான் நாளை புறப்படுறம். சொல்லத்தான் வந்தன். அதுக்கென்ன நாங்க சங்கமித்தா வாறம்.

அன்று அதிகாலை நடுங்க வைக்கும் குளிர்.. பனிமூட்டம்.. பட்சிகளின் இரைச்சல்.. சரசவிஉயன ஸ்டேசன் புறப்பட்டனர். தோழிகளின் பொதிகள் கைமாறின. பாதுகாப்பாக ஸ்டேசன் வந்ததும் புகையிரதம் வரவும் நேரம் சரியாக இருந்தது.

“ஏறுங்க.. பொதிகளை என்னிடம் தாங்க”.

முன்னமே பாய்ந்து ஏறிய சுந்தர் துரிதமாகக் செயற்பட்டான். அருகருகே இருக்கைகளைப் பொதிகள் வைத்து பிடித்துக் கொள்ள கார்த்தியும் சேர்ந்து கொண்டான். அன்றைய பயணம் சிவமதி அருகே அமர்ந்து இருந்ததால் அற்புதமாக அமைந்தது கார்த்திகேயனுக்கு.

ஒருமாத விடுமுறை எப்படி ஓடியதோ தெரிய வில்லை. வீட்டில் இருந்து வந்த மறுநாளே ‘செனற்’ ரில் பெருங்கூட்டம். ரிசல்ட் பெறுவதற் கான முண்டியடிப்பு. அங்கு முகாரியும் முணு முணுத்தன. ஆனந்த பைரவியும் ஆரவாரித்தன. கன்ரீன் பார்ட்டிகள்.. பொன் மாலைப் பொழுதில் புதுப் பார்டிகளும் களைகட்டின.

“சிவமதி என்ன ஸ்பெஷல் செய்ய உத்தேசம்”. காலையில் நூலகத்தில் சந்தித்தனர் காதலர்கள் கார்த்தியும் சிவமதியும்.

“அப்படி எண்ணம் எதுவுமில்ல. வீட்டுக்கு மூத்தவள் நான். பொறுப்பு அதிகம். ‘ஜெனரல் டிக்கிரி’ போதும். என்னைக் கட்டாயப்படுத்த வேணாம் கார்த்தி”. “உமக்காக நானும் அந்த முடிவுக்கு வரணும் போல் இருக்கு”.

“ஐயோ கார்த்தி அது தப்பு. உங்க திறமைக்கு கிளாஸ் அடிப்பீர். இங்கு லெக்ஸராக வருவியள். எனக்காக இதைச் செய்யுங்க”.

“எனக்காக நீர் காத்திருப்பீரா..”

“என்ன கார்த்தி இப்படி ஒரு கேள்வி”.

“அழகான உன் சுட்டும் விழிகளை காலம் எல்லாம் பாக்கணும் மதி”.

காதல் பொங்க பார்த்தாள் சிவமதி. அந்தச் சுட்டும் விழிப் பார்வையில் சுக்கு நூறாகிப் போனான் கார்த்தி. சிவமதியின் இரு கைகளை யும் அள்ளி எடுத்தவன் காதல் முத்திரை பதித்தான்.

கால ஓட்டத்தை யாரால் தடுத்து நிறுத்த முடியும். பொதுப் பட்டத்துடன் சிவமதி பல்கலையில் இருந்து வெளியேறிய அந்தக் கணம் கார்த்தி உடைந்து போன தருணம்.

“என் உயிர் உன்னோடுதான் மதி. என் உடல் இங்கேதான் இருக்கும். மதி நீர் மறக்காமல் கடிதம் எழுது”.

கண்ணீரோடு வழி அனுப்பி வைத்தான் காதலியை. கைபேசி இல்லாத காலம் அது. கடிதம் மட்டுமே. அதுவும் ஒருவாரமோ இருவாரமோ கடிதம் வந்து சேர எடுக்கும். கடிதம் காண காத்திருக்கும் வலிகள் சாதாரணமானது அல்ல. கடிதங்களே அவர்கள் காதல் வலிகளுக்கு ஒத்தடம் இட்டன. அன்றும் ஒரு கடிதம் சிவமதியிடம் இருந்து..

**அன்பு கார்த்திக்..**
**நலம். நிறுவனம் ஒன்றில் நல்ல வேலை கிடைத்திருக்கு. நல்ல சம்பளம்.குடும்பச் சுமை இப்போ பாதியாகக் குறைந்துவிட்டது. சந்தோஷ மாக உள்ளேன். உங்கள் நலம் அறிய ஆவல்.**
**அன்புடன்.. உங்க மதி.**

கடிதம் கண்டதும் வான்வெளியில் பறந்து கார்த்தி. அவசரமாக ஒரு கடிதம் எழுதினான்.

**சுட்டும் விழிச் சுடரே,**
**நித்தம் நித்தம் என் நினைவுகளில் நீதான். நீ நலமா. உன் கடிதம் ஒருநாள் தவறினும் செத்துப் பிழைக்கிறேன் நான். நீஅறிவாயா. மகிழ்வான செய்தி கண்ட நான் களிப்படைந்தேன். இங்கு நான் நலமே.**
**பிரியமுடன்.. உன் கார்த்தி.**

நான்காம் வருடத்தின் நடுப்பகுதி சிவமதியிடமிருந்து வந்த கடிதம் அவனை அதிரவைத்தது.

**அன்பு கார்த்தி..**
**நலம் வேண்டி.. மனதை இறுக்கிப் பிடித்தபடி எழுதுகிறேன் கார்த்தி. தந்தையின் சுகவீனம் தெரியும் உங்களுக்கு. எனக்குப் பின்னால் இரு தங்கைகள். திருமணத்துக்கு வற்புறுத்தும் அப்பா. தந்தை வழி உறவில் எந்த எதிர்பாப்புமின்றி என்னைப் பெண் கேட்டு நிற்கும் பட்டதாரி ஆசிரியர்**

**மாப்பிள்ளை. நமது காதலைச் சொல்லி இதைத் தடுக்க முடியும். நீங்கள் இப்பவே எனக்கு மூணு முடிச்சு போடுவதாக இருப்பின்.. உங்கள் வீட்டில் சம்மதம் கிடைத்தால் இதை தடுக்க முடியும். உடன் உங்கள் பதில் அவசியம்.**
**உங்கள்.. மதி.**

கார்த்தியின் உள்ளத்தை சுக்கு நூறாக உடைத்த கடிதம் அது. கையறு நிலை கண்ணீரோடு எழுதினான் பதில்.

**பிரியமுடன் மதி.**
**என் உள்ளத்தை உடைத்து அழுகு பாக்கிறீர். ஆறு மாதங்கள் இருக்கு இன்னும். பொறுமையுடன் இருந்துவிடு. பிரியமானவளே. உன்னால் அது முடியும். என்னால் இப்போ எப்படி இது சாத்தியம். புரிய வை. முடிவு இனி உம்மிடம்.**
**உன்னவன்.. கார்த்தி.**

சிவமதி சீக்கரமே முடிவு எடுக்கத் வேண்டிய நிலை. தந்தையின் வார்த்தையை மீற முடியாது அவஸ்தைப்பட்டாள். கார்த்தியின் கடிதம் யதார்த்தத்தைச் சொன்னது. அவளது முடிவு திருமணத்தில் வந்து நின்றது. கார்த்திகேயன் உடைந்தே போனான். காதலைக் குடும்பத்துக்காக தியாகம் செய்த சிவமதி. காதலுக்காய்.. காதலியை இழந்த கார்த்தி.

"அம்மப்பா"

கார்த்திகேயன் பேராண்டி ஓடி வந்து அவர் மடிமீது ஏறிக்கொண்டான். கார்த்தி நினைவுகள் தடைப்பட்டன. அவரது கண்கள் ஈரமாகி இருந்தன.

'நெஞ்சம் மறக்கவில்லை.. அது நினைவை இழக்கவில்லை..' அப்போது அந்தப் பாடல்.. கானமும் காட்சியுமாய் ரீ.வீ யில் போய்க் கொண்டு இருந்தது.

❍❍❍

# கவிதைப் பள்ளு

**கவிச் சிற்பி**
**– வேதா. இலங்காதிலகம் (டென்மார்க்)**

கவிதைப் பரிசுப் பொதியை விரித்து
அவிதலாகாது (அணைதல்) கவினுறு மொழிக்
குருத்துகளை
கவிழாது ரசிக்கிறது சீர்தமிழாக மனம்.
குவியும் தேன்துளிகள் அலட்சியக் கிண்ணங்களை
தவிர்த்து நற்கருத்துகளைத் தரிசித்து இன்புறுகிறது.

காற்றின் மீதொரு நடனமாக மொழி
ஏற்றம் இழிவுற்றது உயர்வுடைத்து.
சற்றுமே ஓயாது சகலதும் வாசித்து
பற்றுடன் தமிழைப் பற்றுதல் இன்பம்.
வற்றாத சீவநதி தான் தமிழ்.

மழைத்துளி உயிர்க் குருத்தைச் சிலுப்பி
அளையும் குளிர் போன்றது தமிழ்
இழையும் இதம் தலைகோதும் இன்பமானது.
இரவில் ஊர்வலமாகும் நட்சத்திர ஓடை போல
தரவாய்ப் பெருகும் அனுபவ ஓடைகள்.

கவிதையில் வரையும் உருவங்களை எழுதி
பூவிதையாகக் காற்றில் கடலில் உலகில்
பவித்திரமாக விதைத்து மரத்தின் இலைகளாக
குவிகிறது கருத்துக் கனிகள். இனிமைக்
கவிதையில் இன்பம் ஆனந்த ஓடையாகிறது.

இன்று நேயர்களுக்கு நல்ல மனமா!
வென்று மலையாகிறது கருத்துப் பொதிகள்.
அன்பின் ஆதரவில் தான் உயிர்த்தல்
என்றும் அலட்சியம் அங்கீகாரமின்மையில்
தன் நம்பிக்கை தூளாகிச் சிதறுவது உறுதி.

**(ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே!)**

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்...



பேராசிரியர்
துரை.மனோகரன்

## வேடிக்கை விளையாட்டுகள்

நாட்டில் தற்போது ஒரு புதிய உத்வேகம் பிறந்துள்ளது. நீண்டகாலமாக நாட்டின் ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள், அதிகாரிகள், காவல்துறையினர் உட்படப் பலரின் ஆசிர்வாதத்துடனும், அனுசரணையுடனும் இயங்கிவந்த போதைப்பொருள் தொடர்பாளர்கள், பாதாள உலகக் கோஷ்டியினர் எனப் பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையோர், கையும் களவுமாகக் கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இவர்களின் பின்னால், கடந்தகால ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள், அதிகாரிகள், காவல்துறையினர், திரையுலகத்தினர் எனப் பலரும் இருந்துள்ளமை, இப்போது தெரியத் தொடங்கியுள்ளது. இவர்களுக்கு எதிராக அரசு கடும் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளமை வரவேற்கத்தக்கது. ஆட்சிமாற்றம் என ஒன்று ஏற்படாது இருந்திருந்தால், நாட்டின் நிலைமை மிக மோசமாகவே இருந்திருக்கும்.

ஆட்சியாளர்கள் பொதுவாக நல்ல நோக்கங்களைக் கொண்டிருந்தாலும், ஆங்காங்கே ஆட்சிவட்டத்தைச் சேர்ந்த தனிப்பட்டோர் சிலரின் சுயநலப்போக்குகளும் இல்லாமல் இல்லை. அண்மையில், விமானப் பயணம் ஒன்றின்போது, உயர்சபை முக்கியஸ்தர் ஒருவரும், சில மந்திரிபிரதானிகளும் வெளிநாட்டுப் பயணம் ஒன்றினை மேற்கொண்டபோது, சில தில்லு முல்லுகளைச் செய்ததாகச் செய்திகள் உலாவின. மக்களுக்குக் காட்டுவதற்காக முதலில் சிக்கன வகுப்புப் பயணச்சீட்டுகளைப் பெற்று, விமானத்தில் நுழைந்த பின்னர், வசதியான வகுப்புப் பயணச்சீட்டுகளைப் பெற்று, உல்லாசமாகப் பயணம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. இவர்களின் செயல், ''ஊருக்குத்தான் உபதேசம் உனக்கல்லடி'' என்பதுபோல் இருக்கிறது.

ஆட்சிப்பரப்பில், ஒரு மந்திரிபிரதானியும், கட்சியின் முக்கியஸ்தர் ஒருவரும் வெளிப்படையான இந்திய எதிர்ப்பாளர்களாக விளங்குகின்றனர். இவர்கள் இருவரும் ஆசியாவின் சிவப்புச்சாயம் பூசிய பெரிய நாட்டின் பரம விசுவாசிகளாக இருக்கிறார்கள் என்பது, விஷயம் அறிந்தவர்களுக்குத் தெரிந்த ரகசியம். அதனால், இந்தியத் தரப்பில் இருந்து நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய எத்தனையோ நலத்திட்டங்களைக் குறிப்பிட்ட மந்திரிபிரதானி தடுத்து வந்திருக்கிறார் என்று கூறப்படுகிறது. நல்ல வேளையாக, அவர் வசம் இருந்த சில துறைகள் மாற்றப்பட்டுள்ளன.

நாட்டில் எதிரணியைச் சேர்ந்த சிலர், தமக்குப் பாதுகாப்புக்காகத் துப்பாக்கிகள் வழங்க வேண்டும் எனக் கோரிக்கைகள் விடுத்துள்ளனர். ஆனால், அவர்களுக்கு அவ்வாறு அவற்றை வழங்குவதற்கு அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது. அந்த முடிவு சரியானது. எதிரணியினருக்கு, என்ன கண்டறியாத ஆயுதத் தேவை? மக்கள் பிரதிநிதிகள் என்றால், மக்கள் நலன் சம்பந்தமாக, அவர்கள் பக்கம் நிற்கவேண்டும். மடியில் கனம் இல்லை என்றால், ஏன் தமது பாதுகாப்புப் பற்றி அச்சப்படவேண்டும்? இன்னுமொரு வேடிக்கை என்னவென்றால், இரண்டு சமய வேடதாரிகளும் தமக்குத் துப்பாக்கிகள் வேண்டும் என்று அரசைக் கேட்டிருக்கின்றனர். சமயக் கொள்கைகளுக்கு எதிராகவே செயல்படும் இவர்களுக்கு ஏன் துப்பாக்கிகள்? உலகத்தின் சிறந்த ஆன்மிகத்தலைவர்களில் ஒருவராகவும், அகிம்சையைப் போதிப்பவராகவும் விளங்கிய ஒரு பெருமகானைப் பின்பற்றுவதாகச் சொல்லிக் கொண்டு, தமக்குத் துப்பாக்கிகள் வேண்டும் என்று கேட்பது, வெட்கக்கேடானதும், நகைப்புக்கு உரியதும் ஆகும்.

தற்போதைய அரசின் தடல்புடலான பல்வேறு நடவடிக்கைகளினால், நாட்டின் எதிரணி அரசியல்

வாதிகளில் ஒருசாரார் அச்சம் கொண்டுள்ளனர். பஞ்சமா பாதகங்களில் எதையும் விட்டு வைக்காத அவர்கள், எதிர்காலத்தில் தாம் பாதிக்கப் பட்டு விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கை யினால், மக்கள் பெயரால் ஒரு பேரணியை நிகழ்த்துவதற்கு முயன்று வருகின்றனர். மக்கள் நலனுக்காக எதையும் இதுவரை செய்யாத இக்கூட்டணி, தன் சுயநலனுக்காக ஒன்று சேர்ந் துள்ளது. குறிப்பிட்ட பேரணியில், பெரும் பாலான மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட கேடுகெட்ட அரசியல்வாதிகளும், அவர் களின் விசிலடிச்சான் குஞ்சுகளும் பங்கேற்பர். முக்கிய எதிர்க்கட்சி அதில் கலநுகொள்ளாது எனத் தெரிகிறது. வடக்கு, கிழக்குத் தமிழ்க் கட்சிகளும், மலையகக் கட்சிகளும் அதில் கலந்து கொள்ளமாட்டா. தாமும் இருப்பதாகக் காட்டிக்கொள்வதற்காவும், தமக்கெனத் தனி விளம்பரம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்காகவும் இப்பேரணியை நடத்த முயல்கின்றனர். பாவம்! அந்தோ பரிதாபம்!

## நாடகத்துறையில் ஒரு நன்முயற்சி

கண்டியில் நீண்ட காலத்துக்குப் பின், நாடக விழா ஒன்று கண்டி இந்துக் கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. கண்டி நுண்கலைச் சங்கம், மத்திய மாகாண இந்து மாமன்றம், கண்டி அறக்கட்டளை ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்திய இந்நாடகவிழாவில் பிரதம விருந்தினர்களாகப் பேராசிரியர் துரை. மனோகரனும், துரைசாமிப் பிள்ளை சிவசுப்பிரமணியமும் கலந்து கொண்டனர். இலங்கையின் நான்கு பல்கலைக் கழகங்களின் நாடகங்கள் இந்நாடகவிழாவில் மேடையேற்றப்பட்டன. மேடையேற்றப்பட்ட நான்கு நாடகங்களும் தரமான முறையில் நாடகச் சுவைஞர்களுக்குப் புதிய அனுபவங்களைத் தந்தன.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்கள் கல் எனும் சொல் என்னும் நாடகத்தை மேடையேற்றினர். அகல்யை கதையை அடிப்படையாகக் கொண்டு, புதிய பாணியில் இந்நாடகம் மேடையேற்றப்பட்டது. இந்நாடகத்தை, எனது மாணவர் கலாநிதி ரூபவதனன் இயக்கி மேடையேற்றினார். நாடகத்தில் பங்கேற்ற மாணவ, மாணவிகள் அனைவரும் தத்தம் பாத்திரங்களை உணர்ந்து நடித்தனர். அகல்யையாக நடித்த மாணவி, தமது நடிப்புத்திறனை அபாரமாக வெளிப்படுத்தினார். நாடகத்துக்குப் பலம் சேர்க்கும் முறையில் இசையும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வவுனியாப் பல்கலைக்கழகம் வழங்கிய போத்தல் மீன் என்னும் நாடகம், பார்வையாலர் களுக்கு இன்னோர் அனுபவத்தை வழங்கியது. தொலைபேசிப் பாவனையை அடிப்படையாகக் கொண்டு, வாழ்வின் நேர்மறை, எதிர்மறைப் போக்குகளைச் சிறப்பாகச் சித்திரித்தது, இந்நாடகம். நாடகத்தில் பங்கேற்ற மாணவர்கள், மாணவிகள் எல்லோரும் சிறப்பாகத் தமது நடிப்புத்திறனை வெளிப்படுத்தினர். குறிப்பாக, அன்ரியாக நடித்த மாணவியும், ஒரு குடும்பத்தின் தாயாக நடித்த மாணவியும் தமது உச்ச நடிப்புத்திறனைப் புலப்படுத்தினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் "மணி மேகலை" என்னும் நாடகத்தை மேடையேற்றியது. மணிமேகலை கதை முற்றுமுழுதாகப் புதிய பாணியில் மேடையேற்றப்பட்டது. மணிமேகலை பாத்திரத்தை நான்கு மாணவிகள் ஏற்று, அந்தப் பாத்திரத்துக்கு ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தினர். நாடகத்தில் கலந்துகொண்ட அத்தனை மாணவிகளும் தமது கடின உழைப்பைச் சிறப்பாக வெளிப்படுத்தினர். கலாநிதி சுதர்சனின் பாடல்களும் நாடகத்துக்கு மெருகேற்றின.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவ, மாணவிகள், "நிழலில் வாழ்ந்தவன்" என்ற நாடகத்தை வழங்கினர். குறியீட்டுப்பாங்கோடு இணைந்த நாடகமாக அது அமைந்தது. எதிர்மறை யாகவே எதனையும் சிந்தித்து மனநோயாளி யாகிவிட்ட ஒருவனை மையமாகக் கொண்டதாக அமைந்த அருமையான நாடகமாக இது விளங் கியது. குறியீட்டுப் பாத்திரமாக நடித்த மாணவி உட்பட, அனைவரும் தத்தம் பாத்திரத்தை உணர்ந்து நடித்து, நாடகத்தைச் சிறப்பித்தனர். இந்த நாடகத்தில், கச்சான் விற்கும் ஆச்சியாக நடித்த மாணவி, தமது நடிப்புத்திறனை அற்புதமாக வெளிப்படுத்தினார்.

கண்டி நுண்கலைச் சங்கத்தின் இந்நாடகவிழா முயற்சி, மிகவும் பாராட்டத்தக்கது. இதனை ஒரு தொடக்கமாகக் கொண்டு, ஆண்டுதோறும் இம்முயற்சியில் அச்சங்கத்தினர் ஈடுபடவேண்டும். இலங்கையிலே அவர்கள் தொடக்கிவைத்த இம்முயற்சி, தமிழ்க் கலையுலகில் ஒரு பெரு முயற்சி.

❍ ❍ ❍

# வாசகர் பேசுகிறார்

ஞானம் அக்டோபர் 2025 இதழ் 305 கிடைத்தது. இவ்வருடத்துக்கான இலக்கிய நோபல் பரிசும், தற்கால சூழலில் பல்லாயிரக்கணக்கான தமிழ் படைப்புகள் வெளிவந்தும் அந்த உச்சத்தை எட்டிவிடமுடியாதுள்ளதே என்ற ஆதங்கத்தையும் ஆசிரியர் கவலையுடன் அறியத் தந்ததை காணமுடிந்தது.

பேராசிரியரின் "எழுதத்தூண்டும் எண்ணங்கள்" பகுதியில், தற்போது சிவப்பு கலர் பூசி பச்சை அரசியல் செய்பவர்களின் காற்றில் பறக்கும் வாக்குறுதிகளையும், எம்மவர்களின் இரட்டைப்போக்குகளையும் சுட்டி நிற்பதுடன், அரசியல் அபத்த நாடகத்தில் ராஜபாட்டாக தற் பொழுதும் நடித்துக்கொண்டிருப்பவர்களையும் அந்த ராஜவம்சத்தின் வளவில் புல் மேயும் "குட்டி"ஆட்டின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளையும் நாசூக்காக போட்டுடைக்கும் விதங்களும் வாசகர்களை சிந்திக்கவைப்பனவாக அமைந்துள்ளன. நடுநிலை நின்று நல்ல பல கருத்துக்களைச் சொல்லும் பேராசிரியர், இலங்கை வானொலியின் நூற்றாண்டு ஞாபகங்களையும் எமக்கு நினைவூட்டிச் செல்கிறார். நானும் இலங்கை வானொலியின் ஓர் இரசிகனாக இருந்தது மட்டுமல்ல ஒரு பங்காளியாக பல மெல்லிசைப்பாடல்களை எழுதியவன் என்ற ரீதியிலும் பெருமையடைகின்றேன். பேராசிரியர் சபாஜெயராசா அவர்களின் எழுத்துக்கள் தனித்துவமானவை என்பதை "கட்டட அழகியல்....." என்ற அவரது கட்டுரை கட்டியம் கூறி நிற்கின்றது.

**– ஷெல்லிதாசன், திருகோணமலை.**

○ ○ ○

## கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது விழா – 2025



அண்மையில் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் "வாழ்நாள் சாதனையாளர் விருது விழா – 2025" றொறன்ரோவில் இடம்பெற்றது. இந்த விருது விழாவில், இணையத்தினர் எழுத்தாளர் குரு அரவிந்தன், சொற்கோ திரு. வி.என்.மதியழகன், திருமதி செல்லையா யோகரத்தினம், முனைவர் திருமதி பார்வதி கந்தசாமி, திரு. ந. நகுலசிகாமணி ஆகிய ஐந்து கலைஞர்களுக்கு விருது அளித்துக் கௌரவித்தனர். எழுத்தாளர் இணையத்தால் அறிமுக நூல் ஒன்றும், குரு அரவிந்தனின் வாசகர் வட்டத்தால் எழுத்தாளர் குரு அரவிந்தனின் சாதனைகள் குறித்த நூல் ஒன்றும் பார்வையாளர்களுக்குக் கிடைக்கப் பெற்றன.

எழுத்தாளர் குரு அரவிந்தனின் சாதனைகளில் தொடர்ந்து கடந்த 25 வருடங்களாகப் (2000–2025) புலம்பெயர்ந்த கனடிய மண்ணில் பரிசுகளும் விருதுகளும் ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து பெற்ற எழுத்தாளர் என்ற கௌரவம் கிடைக்கப்பெற்றது. ஐந்து நாடுகளில் ஒரே வருடத்தில் பெப்ரவரி மாதம் காதலர்தினக்கதை எழுதியும், தொடர்ந்து 16 வருடங்கள் கனடா உதயன் பத்திரிகையில் காதலர்தினக் கதை எழுதியும் இரண்டு சாதனைகளை இவர் படைத்திருந்தார். இதைவிட இவர் இலங்கை வீரகேசரியில் எழுதிய மாருதப்புரவீகவல்லி என்ற வரலாற்றுப் புதினத்திற்கு இவரே 40 விளக்கப் படங்களை அதிதொழில்நுட்ப உதவியுடன் வரைந்த முதலாவது எழுத்தாளர் என்ற சாதனையைப் படைத்திருக்கின்றார்.



– ஞானம்

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

வெள்ளிவிழா மலர்

## 25 சிறுகதைகள்




விலை:

ரூபா 300/=

**ஞானம் பதிப்பகம்**

3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6.

+ 94 11 2586013 / + 94 717 362 862

editor@gnanam.info

ஞானம் பதிப்பகம்

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/16/2025

**இரு நூற்றாண்டு மலையகம் [வலியும் வாழ்வும்]**
**– 2025 – தொகுப்பு (எழுநா, விம்பம்)**




மலையகம் சிந்திய வியர்வையால் பெறப்பட்ட நிதி மூலதனமே, இலங்கையின் இலவசக் கல்வி, இலவச மருத்துவம் தொடக்கம், உள்ளகக் கட்டுமான அபிவிருத்திவரை பல அபிவிருத்திகளுக்கு பல்லாண்டுகளாக பெரும் பங்கினை வகித்துள்ளது என்பது பலரும் மறந்த செய்தியாகும்.

மலையகம் 200ஐ முன்னிட்டு விம்பம் அமைப்பானது எழுநா அமைப்பின் அனுசரணையுடன் நடத்திய போட்டியில் பரிசுபெற்ற 7 கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல் ஆகும். இக்கட்டுரைகள், மலையக மக்களின் பிரத்தியேக கலை, கலாசார, பண்பாட்டு, சமூக, பொருளாதார அரசியல் நிலை போன்ற விடயங்களைப் பேசுகின்றன.




**அரவாணிகள் வாழ்வியலும் கூத்தாண்டவர் திருவிழாவும் (2008) – பேராசிரியர் கு. சின்னப்பன் (தமிழ்நாடு)**

தமிழ்நாடு உளுந்தூர்பேட்டை எனும் பிரதேசத்தில் நடைபெறும் அரவாணிகளின் கூத்தாண்டவர் திருவிழா பற்றி சிறுதெய்வ வழிபாட்டு நெறியின் விளக்கவியல் நோக்கில் மேற்கொண்ட ஆய்வை இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

கூத்தாண்டவர் திருக்கோயில் தோற்றமும் வளர்ச்சியும், கூத்தாண்டவர் திருவிழாக் கூறுகள், கூத்தாண்டவர் திருவிழாச் சிறப்புக் கூறுகள், அரவான் தொடர்பான கதைகள், அரவாணிகள் நாட்டுப்புற இலக்கியப் பார்வை எனும் இயல்கள் இந்நூலில் அடங்கியுள்ளன.

இன்றைய நவீன யுகத்திலும், சடங்கு நிகழ்வுகளில் தாழ்த்தப்பட்ட மக்களும் பெண்களும் புறக்கணிக்கப்பட்டு வருவதை இந்நூல் சுட்டி நிற்கின்றது.




**தைலாப்பொட்டி (2023) –ஏ.பீர்.முகம்மது**

ஆசிரியரின் 13 சிறுகதைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. தைலாப்பெட்டி, புள்ளக் கொழுக்கட்ட, சிலேட்டுப் பலக, கூப்பன் புத்தகம், புள்ளபூச்சி, பட்டக் கலியாணம், பாய் யாவாரம் போன்ற தலைப்புகளின் வாயிலாக இழந்துபோன பண்பாட்டினை மீட்டுருவாக்கம் செய்யும் முயற்சியினை ஆசிரியர் திறம்படச் செய்துள்ளார்.

தென்கிழக்கு பிரதேச முஸ்லிம் மக்களின், குறிப்பாக கரவாகு மண்ணின் பேச்சுவழக்குமற்றும் அவர்களின் பண்பாட்டு வாழ்வியல் அம்சங்களை இக்கதைகள் படம்பிடித்துக்காட்டியுள்ளன.

# கிடைக்கப் பெற்றவை...

ISSN 2478-0340
9 772478 034009
PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 011 2330195